T
6574

T. 6574

உ

சிவமயம்

நாற்பத்தெண்பெயர்களில்மகாமருத்துவம்பொருந்திய

# கருவூரார்பலதிரட்டு - நா

இஃது

ஆறுமுக தேசிகரால்.

பார்வையிடப்பட்டு

வேலூர்

குமாரஸ்வாமிமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1890

# விளம்பரம்.

இதனால்யாவருக்கும் அறிவிப்பது யாதெனில் இப்புத்தகமும் இன்னும்பலவித சோசியம் வைதியபுத்தகங்கள். வேண்டுபவர்கள் சென்னை பெத்தனாயக்கன்பேட்டை நாராயணமுதலியார் வீதி (ருஉ) வது, கதவிளக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் வாணீவிலாச அச்சுக்கூடத்தில் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

சிவமயம்.

# கருவூரார் சரித்திரவாலாறு.

தெய்வீகத்தன்மைபொருந்திய நாற்பெத்தெண்பெயர்சித்தர், மகாபுருஷர்களில்மகாமகத்துவம்பொருந்திய பஞ்சணக்கார்மரபிலுற்பவித்தவர்கருவூராரென்னும் திருநாமம்வகித்தவர், இவரது திவ்வியசரித்திரமேதோவென்னில்நவகோடிரிஷிகளில்கமலமுனிஎன்பவருடைய அருள்ஞானோபதேசங்களில -கருணையடைந்தவர் ஆயுள்வேதமாகிய மூன்றுலட்சங் கிரந்தங்களில் முற்றிலும்பொருளறிந்தவர் வாதக்கடலைவென்றவர் இவரது எண்ணமேதோவென்னில்இவ்வுலகில்யாவிடர்பிழைக்கவேலோகங்களில்உருக்கினம் பரிசனமகூட்டுமுறை-ஊதுமுறை மாற்றுமுறை-சீத்தனமுறை காந்தக்கிண்ணம?சூதக்கிண்ணம-அயக்கிண்ணம்-தாளக்கிண்ணம இலிங்கக்கிண்ணம்- பாஷாணக்கிண்ணம்- நாகக்கிண்ணம- வங்கக்கிண்ணம-உப்புக்கிண்ணம்-பூநாகக்கிண்ணம-அயச்சத்து-பூநாகச்சத்து-தங்கச்சத்து- இப்பேர்ப்பட்ட அநேகஅற்புதங்களும உண்டாக்கினதுமன்றி!வெட்டறுவாள்-சத்தி-கட்டாரி-குத்தி-துப்பாக்கி-குண்டு-என்றுசொல்லப்பட்ட (௩௨ ஆயுதங்களும்பரிட்சைதீர்ந்துண்டாக்கினவர், சாஸ்திரவிசாரணைநிபுணர், சகலகலைக்கியானவல்லவர், சித்தர்களில்மகாநல்லவர், முப்புக்கடலைகடந்தவர், சாதிமுறைமைதவறாதவர், முப்பத்திரண்டறமும்வழுவாதவர், இவர் செய்யுந்தொழிலோகன்னார் சிலையுருக்கினம், இவர்திரிகாலமும் சிவனைமறவாதவர், இப்படியாயிருக்குங்காலத்தில் தன்னருள்புத் திதானறிந்தவரானதால் தன்குலாச்சாரத்தொழில்முறைகள்யாவற்றும சாஸ்திரவிதிப்பயன்முறையும தனக்குச்சீஷனாகிய இடைக்காட்டருக்கு முற்றிலும்போதித்து தான்சமாகிரியையிலொடுங்கினார், இவரது சரியை கிரியையோகஞானேந்திரியங்களையும சீஷனாகிய இடைக்காட்டார்சாஸ்திரங்களில் மூங்காவிலபாயிரங்களில் கண்டறியலாம் இச்சரித்திரவரலாறை இந்நூல்திருத்திய-க-வே ஆயுள்வேதபாஸ்கரன் கந்தசாமிமுதலியார் கேழ்வியுற்றவரையில் அச்சிடத்துணிந்தனர் இதைப்பெரியோர்கள்பெரும்பாலும் அங்கீகரிப்பர்.

கருவூரார்சரித்திரவரலாறு-முற்றிற்று

சிவமயம்

# பொருள் அட்டவணை.


| பொருள் | பக்கம் |
|---|---|
| அகோரமுகத்தில்வரும்நல்வினைதீவினை (உரு) | கூச |
| அமுக்குறாவெள்ளருக்குமை | ய |
| அயச்செந்தூரம் | ந |
| அயச்செம்புவேதை | உச |
| அயச்செம்பு வெள்ளீயம்இதில்சிமிள இதில்சூதம் நாகம்செந்தூரம்வேதை | ருஉ |
| அரிமுறிவேர் | ரு |
| அழகண்ணிகாப்புகட்டுவது | ருசு |
| ஆக்ருஷணம்வேலை உள்ளொட்டிபிறவொட்டி | ருரு |
| ஆடுதின்னாப்பாளை கவுதும்மைமூக்குறட்டைசத்திசாரணைமேனி பேய்ப்புடல் காட்டுமல்லிகை அஞ்சனம் | ய |
| ஆடுதின்னாபாளைமண்டைஓடு | 54 |
| ஆயிபஞசாட்சரம் | சுஉ |
| ஆலவிழுது | சஅ |
| ஆல்கிளை புல்லாமணக்கு இதில் லிங்கக்கட்டு | உஎ |
| இதில்சூதக்கட்டு | ச |
| இதில்ரசச்சுண்ணம்இதில்செயநீர் கோடிகவர் | நஉ |
| இதுவரையிற்சொல்லியமுறைகளெல்லாம இல்லறத்திலிருந்து போகிக்கவேண்டியது | உகூ |
| இதுவெல்லாஞ் சத்திமூலமார்க்கம் | சு |
| இந்நீரில்பரிநோதம் | உ |
| இந்தச்செந்தூரம் லோகங்களிற் கொடுத்தால் | ய |
| முதல் -௩அ- மாத்துவரைக்கும் வேதைமார்க்கம் | யரு |
| இந்தநூலுக்கு முதலிலெடுத்தசாரம் செயநீர் முப்பூ பெருமையின்னீர்சற்வத்துக்குமாகி | நக |
| இம்மெழுகில் வெடியுப்பு மெழுகு | யஉ |
| இனிசிவத்தின்மந்திரவலிமையின் மார்க்கம-ரு- எழுத்தின் பெருமை- ரு- முகத்திலும் ரு உரு-மந்திரவலிமை | சுக |
| ஈசான்யமுகத்தில் நடக்கும் நல்வினை தீவினை | சுசு |
| உச்சாடனம்பேய்மிரட்டி | ருக |
| எட்டி விரை ஐங்கோலப்பழச்சாற்புணர்ச்சி | உசு |
| எருக்கஞர்பலி வெள்ளைச் வாவல் | ருஎ |
| ஏந்திரத்தில்கருவபூசுகிறவிப | சச |
| ஏரண்டவேர்சிறுதும்மைபைவேரில் செம்புசுத்திஊகலறும் | நந |
| ஒட்டகைமுருங்கைச்சாற்றல் ரசக்குளிகை | யசு |
| ஓரிதழ்தாமரைகிலாவரைமை | சு |
| கச்சுப்புல | சுய |
| கட்டுகோடித்தம்பனம் | சஅ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| கணபதிதோத்திரம் | க |
| கண்டங்கத்திரிசமூலம் | ருஉ |
| கருஞ்சம்புசமூலமவசியம் | சசு |
| கரும்பூனைவால் அத்திகருஞ்சாரை இவைகள்மேபாகர்செய்த முறைகள் | உரு |
| கலியுகத்தில்மனமுரைத்துப் பார்க்கஇவர்நூற்களுக்குச்சாபமுண்டென்நூற்கில்லை | ௰க |
| கல்தாமரைச்செந்திசெந்தூ | ௩உ |
| கற்பங்கொள்ளவும | உரு |
| கற்றாமரையில்சூதக்கட்டு | ௩ |
| காட்டில்ஏரண்டம்வேர் | ருச |
| காந்தம்உபசரகங்கள்சூதம் தம்பணக்குளிகை | ௰கூ |
| காயசித்திஅஞ்சனமறப்புமை | ௩எ |
| குடவனில்கிமிஷவேதை | ௰அ |
| குதிரைவாற்புல்லு | ருக |
| குழற்சுண்டிசமூலம் | ருஉ |
| குன்றிமணியின்டியில்லை ஆமணக்கிலை | உஉ |
| கொட்டைக்கறந்தை | ரு௩ |
| கொம்மட்டிக்காய்மாட்டமென்றல்சவிதம்பண்ண | உ |
| கோதும்பை மக்திஷ்டிதண்ணீர்மிட்டான் கிழங்கு பூனைக்காலிவிவிரை | உஉ |
| கோவைச்சாற் சங்கம்வேர் குருவைநெல்லி | உஉ |
| சட்டமுனி கொங்கணர் திருமூலா கருவூரார் நூல்பார்க்கவும் | ௰சு |
| சத்திச்சாரணை சிதேவிச் செங்கழுநீர் | உ௰ |
| சத்திச்சாரணைசமூலம் | ரு௰ |
| சத்தியோசாதமுகத்தில்நடக்கும் நல்வினை தீவினைகள் | சுஎ |
| சாறுயில் லிங்கமயனம் இதில்பாஷாணமெழுகு | ௩௰ |
| சாறுயத்தில்லிங்கச்செந்தூ | சஉ |
| சித்தர்பெருமை | ௩ |
| சூ-ச-ம்சித்தியாம் | ௰எ |
| சித்திரமூலம் | சு௰ |
| சிவபஞ்சாட்சரம் | சுஉ |
| சிறியாநங்கைமூலம் | ருசு |
| சிதேவிசெங்கழுநீர்வசியம் அஷ்டகர்மத்துககுமூலி-சுச- ஒவ்வொன்றுக்குஅ | சரு |
| சுக்லமோகனம்கஞ்சாமூலம் | சஎ |
| சுரோணிதத்தில்போத்து நடபாண்டகிருதம் | ருரு |
| சூதமெழுகுவெள்ளி | ரு |
| சூதம் கோழிக்காரம் துரிசு காரம் மாத்திரைமகாகுரு நவலோகத்திற்பாயுமவேதை | ௰அ |
| சூதம்வெள்ளிகிமிளைசெப்பு கிண்ணியில்செந்தூரவேலைத | உ6 |
| சூதத்தையிறுக்கினவன்தேவ | 35 |
| சூதம் செந்திலோகம் வஸ்து விங்கம் காந்தம் மால்தேவி நாகம புனுகு பூரம்இந்திரகோசச் செந்தூரம் | ௩சு |
| செந்தூரம் வெண்தாமரைப்பூவெண்காக்கணங்குளி | ௰கூ |
| செந்தூரஞ்செய்து கற்பமுண்ணநரைதிரைமாறும் | ௩ச |
| செமபணை | ருசு |

| பொருள் | பக்கம் |
|---|---|
| செவ்வாலிஅஞ்சனம் | ௭ |
| ஞானமவுனம் | ௰௧ |
| தற்புருஷமுகத்தில் உருமந்திரத்தில்வருமநல்வினை தீவினை | ௬௩ |
| தாளகம்சூதம்கெந்தம்மெழு | ௰௨ |
| திருமால்மூலிகைகமை | ௭ |
| திருகுகள்ளியால் சூதக்குளிகை சம்போகக்குளிகைகள் | ௨௰ |
| திருகுகள்ளி வருகுகள்ளி வட்டவோமருகுகள்ளி | ௫௩ |
| துரிசியில்வேதை | ௰௩ |
| துரிசிசுன்னம்இதில்ரசக்கட்டு | 13 |
| துரிசிசுன்னம் | ௰௬ |
| தேவியிட பெருமை இவனைப் பூசித்தவர்கள் பெருமை சென்னமரணமில்லை | ௩௯ |
| தேள் கொடுக்குவிரை | ௨௧ |
| தேள்கொடுக்குவேர் | ௫௨ |
| தையாதிமூலம் | ௫௰ |
| நந்தைச்சூரிசமூலம் | ௪௯ |
| நவலேபகமஊறலும் | ௰௪ |
| நன்னாரிசமூலமஆகமூலி | ௨௮ |
| நாகபற்பம | ௬ |
| நாகக்கட்டு | ௨௪ |
| நாகபஸ்பம ௰௬ | ௨௪ |
| நாகபற்பம் | ௨௯ |
| நாகமல்லிமூலம் தேவவசிய | ௪௬ |
| நாயுருவிசாம்பல் கறியுப்பு பழச்சாறறில் செம்பூரலபோம | ௩௰ |
| நாயுருவிமூலம் | ௪௭ |
| நிருவிஷம் | ௫௯ |
| நீர்க்காக்கைஅஞ்சனம | ௯ |
| நீர்முள்ளிவேர் | ௪௯ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| நீர்கெநட்பு | ௫௮ |
| நூல்பொய்யென்றுசொன்னவர்கள் நரகில்விழ்வார் | ௰௭ |
| பலதிரட்டு நொண்டிநூல்பார்க்கவும பிராணாயோகஞ் சிக்கினால் போகரைப்பாலிருக்கலாம | ௰௧ |
| பரசத்தோர்கள்குணம் | ௨௰ |
| பாஷாணம வெள்ளியில்அயச்செம்பில்வேதை | ௰௮ |
| பாதிரிவடவேர் | ௫௯ |
| பாலக்குறண்டி | ௪௯ |
| புத்திகூறல | ௨ |
| புத்திகூறல் அஷ்டகர்மத்துக்குப்பலகை திசைமணிகள் ஆசனங்கள | ௪௩ |
| பூசைசெய்யும்படி அதில்கெட்டவர்கள் | ௩௮ |
| பூரணத்தில் சூதக்கட்டுசெந் | ௫ |
| பூரணச்சந்திரோதயச்செந் | ௩௪ |
| பூரணநிலேகியம | ௪௪ |
| பூவரசுவேர் அஞ்சனம் | ௮ |
| பூனைக்காலியிலேபாஷாணம் | ௫௪ |
| பேதனங்கள் சுக்கிடவேர் | ௫௭ |
| பேய்ப்புடலையஞ்சனம் | ௯ |
| ௰௮ பேர்சித்தர்கள்நூல்பார் | ௰௬ |
| பொன்னாவாரை அஞ்சனமை | ௭ |
| பொன்னாங்காணி அஞ்சனம் | ௯ |
| முகிரை அஞ்சனம் | ௯ |
| போகருக்குக் கருவூராரும் கொங்கணரும மண்டபத்திலிருந்தச்சிலையைக்கொண்டுபோய் | |

| பொருள் | பக்கம் |
|---|---|
| விட்டதில் அவ்விடத்தில் நடந்த சங்கதி விபராமறியும்படி | ௪௰ |
| மகாதேவிப்பூசை சக்கரவிபரம அறியும்படி | ௩௮ |
| மத்தங்காய் | ௪௭ |
| மருதோணிசமூலம் | ௬௰ |
| மாரணம்கார்த்திகைக்கிழங் | ௫௧ |
| மாவிலிங்கம்வேர் | ௫௮ |
| மான்செவிக்கள்ளி | ௫௪ |
| முதலைக்கண ஆமைக்கண் அஞ்சனம் | ௮ |
| முப்பூவின்பெருமை | ௪ |
| முப்பூமுறை | ௭௪ |
| முருங்கைதளிர் | ௨௨ |
| முருக்கம்பட்டைத் தயிலத்தில் வேதை | ௨௭ |
| முள்ளிவேர் | ௨௩ |
| மூக்குறட்டை அஞ்சனம் | ௯ |
| மூடினசெந்தூரம் | ௨௬ |
| மேனிவேர் மூலிகைபிடுங்க அஷ்டமி சோதிவரில்மறு அஷ்டமியில் பிடுங்கவும் | ௫௬ |
| ரசகெந்திமொழுகுவயதுஎட்டு | ௩ |
| லிங்கச்செந்தூரம் | ௨௭ |
| வங்கலிங்கபற்பம்வயது அ | ௪ |
| வட்டதுத்தி விசாக நாளில்சங்கம்வேர் | ௫௮ |
| வஸ்துவில் சூதம்செம்புசெந்தூரம் இதில்கெவனம் | ௩௬ |
| வழலைஇதில்லோகத்தில்வே | ௰௨ |
| வாமதேவமூகத்தில்நல்வினைதீவினை | ௬௫ |
| வித்தி வேஷம் கறுத்த காக்கணன் | ௫௩ |
| விராகத்தில்சூதக்கட்டு காக்கையில்சூதக்கட்டு | ௩௨ |
| வீரத்தில்வெள்ளிவித்தை | ௬ |
| வெடியுப்புச் சாரசெயநீர் பெருமை | ௨ |
| வெண்குன்றிமூலம்வசியம் | ௪௬ |
| வெள்ளிவித்தை | ௰௪ |
| வெள்ளி | ௬ |
| வெள்ளைச்சாரணைவேர்அஞ்சன | ௭ |
| வெள்ளெருக்கன் அஞ்சனம் | ௰ |
| வெள்ளைக்காக்கணமூலிசமூ | ௨௧ |
| வெள்ளிப்பீங்கானமெழுகு | ௨௮ |
| வெள்ளெருக்கன்வேர்வசிய | ௪௫ |
| வெள்ளைவதனத்தி பெரியமருதுமத்தை | ௪௭ |


பொருள் அட்டவணைமுற்றிற்று

—:o:—

உ

கடவுள்துணை.

# கருவூரார் பலதிரட்டு-நா.

## காப்பு

### கணபதிதோத்திரம்.

பாடுகிறேன்பலதிரட்டின் முடிவையெல்லாம்
  பதறுமற்சிதறுமற் பண்பாய்மக்கள்
பாடுகிறேன்சாஸ்திரமுஞ் சூஸ்திரமுஞ்சேர்ந்து
  பாஷையெல்லாஞ்சுருக்கியொரு மாலையாகப்
பாடுகிறென்கருக்கிடையுங் குருக்கிடையும்பார்த்துப்
  பராபரத்தினிலைமுதலாய்ப் பத்தியாகப்
பாடுகிறேன்வேதாந்த முடிவையெல்லாம் (௧)
  பாணிபரைக்கணேசனிரு பதத்தைப்பார்த்தே

### சித்தர்பெருமை.

பார்த்திடவேநந்தீசர் மூலத்தீசர்
  பண்பாகஅகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவேபதஞ்சலியார் வியாக்கிரமபாதர்
  கோரக்கர்கமலமுனிக் கூழைக்கண்ணர்
கார்த்திடவேயிடைக்காட்டர் ஜண்டிகேசர்
  கைலாயபோகரொடு சிவவாக்கியர்சித்தர்
போத்திடவேகாலாங்கிப் புண்ணாக்கீசர்
  புகழ்மச்சர்கொங்கணருங் காப்புத்தானே (௨)
தானென்றசரிதை மேல நின்றுதேறிச்
  சார்ந்துநின்றுகிரியையிலே சாரப்பண்ணும்
தேனென்றகிரிகைமுத்தி யுரைத்துதானால்
  தேவியிடயோகத்தைச் சேரப்பண்ணும்
மானென்றயோகமுத்தி யுரைத்துதானால்
  மவுனமாம்ஞானமென்ற வரையில்கைவரும்
ஊனென்றசடத்துக்கே யடுத்தவாறு
  முத்தமனேஇவைதாண்டி யுரைத்திடாயே (௩)

### முப்பூவின்பெருமை

உரைத்திட்டமுப்பூவில் சாரஞ்சேரில்
  உத்தமனேசிவமாகு முண்மையுண்மை

முறைத்திட்டந்தப்பாமற் செய்தாயானால்
மூப்பூவால்மலையுமண்ணு முருகியாடும்
நிறைத்திடவேசுண்ணமுதற் களங்குநீரை
நிறையாகவதனுடனே யெழுநூர்தீநீற்
விறைத்திட்டங்கட்டோடு கூடேரிசெய்நீர்
வெள்ளாண்மைபுகையொடு திராவகமுமாமே (௪)

திராவகமுஞ்செந்தூரங் கோடாகோடி
திரமானசித்தியிலே மூன்றதாகும்
திராவகமாமின்னீரும் வெடியுப்புநீருந்
தேர்ந்ததொருகுளிகையிட கற்பங்கோடி
திராவகமாம்நீற்றிணத்தில் புழுகுகூட்டத்
திடமானவைப்புவென்று விதற்குநாயம்
திராவகமும்புகையடா சுன்னநீராந்
தெளிந்ததோருருக்கிணமும் பார்த்துக்கட்டே (௫)

வெடியுப்புச்சாரசெயநீர்பெருமை

கட்டியொருசாரநீர் வெடியுப்புநீரும்
கலந்துடனேதயிராகுந் தயிலீரத்தொட்டு
கெட்டியாஞ்சரக்குமுக்கரவியிற்கட்டு
மிதைப்பரியிலிடவிரும்பு போல்கறுக்கும்
கொட்டியதைமுறித்துடைத்து நொறுக்கத்தூலாங்
கூறக்கேள்தயிர்கைத் திவைத்துநீயும்
அட்டியென்றுவேணதயுனை தகிர்த்தானானால்
அவனிடத்தில்தங்கத்தை வாங்குவாநகே (௬

இந்நீரில்-பரிமோதம்

வாங்கியேதயிர்தோய்த்துக் கொடுத்திடப்பா
மறுபடி தானவன்பார்க்க பிருபாய்ப்போகும்
ஏங்கியேயவனென்ன பாடுபட்டும்
இரும்பாகுந்தங்கவுட-னேறு நுகிப்போகும்
தாங்கியேபணிந்துவந்து கேட்டானானால்
சொல்லுகிறேன்பதறாதே யெனாறுநீயும்
தாங்கியேகோசமொடு பீஜங்கூட்டித்
தானுருக்கப்பழயபடி தங்கமாகும் (எ)

புத்திகூறல்.

ஆமப்பாபூவஞ்சால் வகைகளாறும்
அாகராதாண்டவமும் அரனுஞ்சொல்வார்
சேமப்பாபடியொன்று கொண்டயானால்
திறமாகயிதனுடனே வழித்தச்சேரில்

வாமப்பாவிதினுடையாதுரையைக்காட்ட
வாகானமதியொன்று கொண்டாயானுல்
வமமப்பாயிப்படியே யுண்மைசொன்னேம்
நாதாக்கள்கருவொன்றுஞ்சொல்லார்காணே (அ)

சொல்லார்களுட்கருவை யெவரானாலும்
சொன்னதெல்லாம் பிறற்கருவைச்சூட்டினார்கள்
வெல்லார்கள்மனமாய்கை யாரானாலும்
வெல்லுகின்றதாரென்றால் நடுங்கின்றோர்கள்
வேல்யார்கள்கூற்றுவன் தேவர்கள்கிட்ட
வெல்வதுவும்ஆறென்றாற் பாசத்தோர்கள்
சொல்லார்கள்நல்லோர்கள் சிவனென்றால்
சொல்லுவாரறிவற்ற சண்டாளர்பாரே (௯)

அயச் செந்தூரம்

பாரப்பாமுன்சொன்ன தயிருக்குள்ளே
பாச்சடாபூரணந்தான் கழஞ்சியொன்று
வாரப்பாஅயக்கிண்ணிக் குள்ளேதானே
மண்சாடிக்குள்ளிட்டுக் கல்லுப்பிட்டு
சேரப்பாமேற்சட்டி கொண்டுமூடி
சிறப்பாகச்சீலைசெய்து மண்ணுஞ்செய்து
ஆரப்பாவடுப்பேற்றித் தீயைமூட்டி
அப்பனேயொருசாம மெரித்திடாயே (௰)

எரித்தபின்பேடுத்துப்பார் முருக்கம்பூப்போல்
இருக்குங்காண் செந்தூரமீசனீசன்
பரித்தகற்பம்நாற்பதுநாள் சேர்தான்கொண்டால்
பாலனும்பதினாறு வயதுமாவர்
குழித்திடவேபெண்ணாசை தன்னைநீக்கிக்
குவலயத்திற்குணமுடனே யிருப்பாயப்பா
பொறுத்திடவேமாய்கையென்ற பொல்லாவாசை
பொறியாட்டாலருளேது புலையன்றானே (௰௧)

ரசகெந்திமெழுகுவயதுஎட்டு

தாமென்றகூதமது கழஞ்சிரெண்டு
தாக்கடாஅதிலடக்குக் கெந்திதானும்
ஆமென்றமுருக்கஞ்சாற் பிங்கானிலிட்டு
ஐந்துதினமத்திப்பாய் காலுபலமப்பா
பூனென்றமகாதிவ்ய மெழுகுதன்னை
யுத்தமனேயற்றசெய்பு பழச்சார்விட்டு

வானென்றுபிசறியே குகையிவ்வைத்து
மாட்டுதற்கு மெழுகுடையவரிசைகளே (௰௨)

பாஷாணத்தில்வங்கக்கட்டு

கேளப்பாடணவிடைதான் மெழுகுதூக்குக்
கெடியானசெம்பது முப்பதிலேயூட்டி
சூளப்பாவுருக்கிப்பார் மாத்தெட்டாகும்
சொல்லாதேயாருக்குஞ் சொன்னால்தோஷம்
ஆளப்பாதீமுருகல் பாஷணமவாங்கி
அப்பனேயாட்டியே குகைதான்செய்து
கோளப்பாவங்கம்வைத்துச் சீலைசெய்து
குருங்காடைபுடம்போடு வ்வியுர்தானே (௧௩)

வெள்ளிவித்தை-௰௬.

வலிந்திருக்கும்வங்கத்தை திருப்பிவாங்கி
மைந்தனேமுன்போலே யிலைத்தான்செய்து
வலிந்திருக்கும்வங்கம்விட்டு வுருக்கிப்போடு
வாகானதாரமொடு தீமுருவல்லிங்கம்
வலிந்திருக்குங்காரமொடு சமனாயாட்டி
வங்கத்தைத்தூவியதைக் கிண்டிக்கொண்டு
வலிந்திருக்கும்வங்கமது வெள்ளியாகும்
மாத்தேதுபதினாறு மாத்துதானே. (௰௪)

வங்கலிங்கபற்பம்-அ

பதினாறுவங்கமப்பா துண்டாய்வெட்டிப்
பருக்கவேகட்டியதை நொறுக்கிக்கொண்டு
கதினாறுநொச்சியிலை குமரிதானும்
காயவைத்துத் தூளாக்கிப்படிதானென்று
விதினாறுதட்டுடனே விரவியேதான்
விவரமுடன்புடம்போடு வித்தைகேளு
மதினாறுங்கேணியால் பொலிந்துகட்டி
வளர்குழியிற் புடம்போடவரிசைகேளே (௧௫)

இதில் சூதக்கட்டு

கேளப்பாகனபுடமாய்ப் போட்டுவாங்கு
கெடியாகப்பொங்கியது நீராய்நிற்கும்
கேளப்பாஅச்சுன்னம் வாங்கிவைத்துப்
கிளர்த்திலேன் கருக்குவெள்ளிகுடவின்செம்பில்
நீளப்பாபத்திலொன்றில் பற்பஞ்சேரில்
நேரான வெள்ளிக்கு ளஞ்சுதூக்கு

நாளப்பாயின்னமினீ கருத்தாய்க்கேளு
நலமானரூபாய்தான் கழஞ்சிபத்தே ௰௬

சூதமெழுகுவெள்ளி

பத்தாகவுருக்கிடவே மாத்தெட்டாகும்
பார்வதிக்குமீசனங்கே பகர்ந்தவித்தை
வித்தாகப்பணவிடைதான் சூதத்தூட்ட
வெண்ணெய்யாம் முன்னீரால்மத்தித்தாக்கால்
கொத்தாருஞ்சுன்னமாங் குகையில்வைத்தே
குருங்காடைப்புடம்போடக் கட்டியேதான்
முத்தாகும்மணியாகுஞ் சிறுவணங்கள்தீர்ந்தால்
மூதண்டஞ்சுத்திவரு முத்தியாமே ௰௭

ஆமப்பாசூதவித்தை சொல்லக்கேளு
ஆச்சரியம்நிசவித்தை யாகச்சொன்னேன்
வேமப்பாபீங்கானிற் சூதம்விட்டு
உத்தமனேகொடிவேலிச்சாறுவிட்டு
வேமப்டாசாபமொன்று நிமபச்சாற்றால்
விடாமலேமத்திக்க வெண்ணெய்போலாம்
தாமப்பாசட்டியிலே முன்சாற்விட்டுத்
தயவாகக்கொதிக்கவைத்துப் பின்னுங்கேளே ௰௮

பின்னுங்கேள்குறட்டையிலே புண்ணாக்கிலையும்
பேரானசிதேவி சித்தாமுட்டி
பின்னேக்கேள்சாறுவர யிடித்துக்கொண்டு
பெருமையுடன்கொதிப்பிக்க மெழுகாயாகும்
மன்னேகேள்சாரமொரு பணந்தானூட்டி
மாறுமலுருக்கிடவே மணியுமாகும
சொன்னேன்கேள்வெள்ளிவித்தை யின்னஞ்சொல்வேன்
துய்யவெள்ளைபாஷாணங் கழஞ்சிபத்தே ௰௯

பத்தாகப்பாஷாணந் தன்னைத்தூக்கிப்
பாங்கானபாஷதனை யதற்குள்வைத்து
முத்தாகுங்குமரிச்சாற் றிருகுகள்ளிச்சாற்
முத்தாலேபடியொன்று பாண்டத்திட்டு
கொத்தாகக்காயவைப்பாய் சாமமேழு
குமுறவேயெரித்திடவே பாஷாணக்கட்டும்
பித்தாகநினைசூத முன்றுங்கூட்டிப்
பேரானபாஷாண மாறுங்கூட்டே ௨௰

வெள்ளி

கூட்டுசூதத்துக்குச் செங்கல்தூளாங்
குலாவியதோர்பச்சைமஞ்சள் சாறுசுத்தி

காட்டுதற்குவூமத்தஞ் சாறைகொண்டு
நலமாகசெம்புருக்கிக் கொடுத்துச்சாய்ப்பாய்
நீட்டுதற்குமுன் னுரைத்த மருந்தைத்தானும்
நினைவாகப்பத்துக்கு வொன்றுபோடு
மாட்டுதற்குவுட்கொண்டு வாங்கும்வெள்ளி
மாத்தேதுபதினாறு மாத்துமாமே ௨௧

வீரத்தில்வெள்ளிவித்தை

மாத்தியதோர்வீரத்தின் போக்கைக்கேளும்
மைந்தனே முன்வெள்ளிச்சாணிசாறதில்
மாய்த்துயிதைசாய்த்திடவே மாத்துவேறும்
வாகாகப்பணமாறு நாகந்தூக்கி
மாத்தாகமுருங்கையிலைச் சாறுவைத்து
மறவாமற்சவ்வீரணம் பணந்தானென்று
மாத்தியதோர்பணம்நாலு சூதந்தானு
மாட்டியேயோடுகொண்டு மூடிவையே ௨௨

நாகபற்பம்

வைத்தங்கேஆறியபின் தூளாயாட்டி
வாகாககுழலிலே வைத்துக்கொண்டு
மொய்த்தங்கேறூறுபணஞ் சூதத்துள்ளே
மூடுவாய்நாகபற்ப மொன்றதாக்
மெய்த்தங்கேநீர்விட்டு ஆட்டும்போது
யெருமைவெண்ணெய் போலிருக்குமந்தச்சூதம்
பொய்த்தங்கேபோகாமற்குடக்கறியினுள்ளே
போட்டெடுக்கமணியாகுங் கோடாதென்னே ௨௩

ஓரிதழ்த்தாமரை-நிலாவரைமை

கோடாதவாலைமையைச் சொல்லக்கேளு
கூறுகிறேனதின்மேலே கட்டுக்கொடியைவாங்கி
வாடாதசட்டியிலே சமூலம்விட்டு
மைந்தனேகருக்கிநன்றாய் வாங்கிக்கொண்டு
நீடாதேயோரண்டத்தயிலமூட்டிச்
சிறக்கவேமத்தித்துப் பார்க்கும்போது
வேடாதபாலரென்றுற் கைவிட்டோடு
மோரிதழ்த்தாமரையும் நிலாவரையுங்கூட்டே ௨௪

(வெள்ளைச்சாரணைவேர்அஞ்சனமை)

கூட்டுவாய்சரியிலந்தை வேறிஞேடு
குறையாமற்சட்டியிலே சுருக்கிக்கொண்டு
நாட்டுமல்லிகையுடனே வடவேற்வாங்கி
நலமாககிறியாக்கித் தயிலமூட்டிப்
போட்டிடுவாய்கண்திறக்கு மூன்னுஞ்சொல்வேன்
புகழ்வெள்ளைச்சாரணைவேர் மூன்போற்செய்து
ஆட்டிமையைப்பாலரிட கண்ணிற்கையில்
அழித்திட்டுப்பார்புதைக ளெல்லாஞ்செப்பே ௨௫

(பொன்னுவாரை அஞ்சனமை)

செப்புகிறேன்மையொன்று சுருக்கதாகச்
செகத்திலுள்ள அஞ்சனங்கள்பொய்யாய்ப்போகச்
செப்புகிறேன்போன்று வரைமூன்போலத்
தீயிலிட்டுவிளக்கெண்ணெய் கூட்டிநீயும்
செப்புகிறேன்பாலரிட கண்ணிற்றீட்டி
செகத்தில்வைத்தபுதையெல்லாந் தீர்க்கச்சொல்வாய்
செபபுகிறேன்வேதமொடு சாஸ்திரமுஞ்சொல்லத்
தேவியொடுசிவனு ருத்திறஞ்சொல்வாரேனு ௨௬

திருமால்மூலிகைமை

திறமாகியின்னமொரு மூறையைக்கிக
திருமாலின்மூலிகையின் மூலம்வாங்கித்
திறமாகவோடுகின்ற சலத்தில்நின்று
தேவிதனைத்தொழுதேற்றி வேரையட்டித்
திறமாகப்பொய்க்கண்ணில் நெற்றிக்கண்ணில்
செநுகைதனில்மத்தித்துப் புரமுச்தேய்த்துத்
திறமாகப்பார்த்திடவே விஷலோகத்தின்
சேதியெல்லாம்விவரமதாய்ச் செப்பும்பாரே ௨௭

செவ்வாலி அஞ்சனம்

பாரப்பாசெவ்வாலி யடிபட்டைவாங்கிப்
பாங்காகச்சாற்பிழிந்து புக்கோட்டிற்றேய்த்து
வாரப்பா அலாலர நாலுதிறச்தேய்த்து
மைபந்னேதிருமபவதை வாங்கிவைத்து
சேரப்பாசெம்பருத்திப் பஞ்சிகொண்டு
திரிதிரித்துநல்லெண்ணெய்ச் சிறக்கவிட்டு

காரப்பாமையேத்தி வாங்கிக்கொண்டு
 கையிலிட்டுப்புதயல்தனைக் கைப்பாற்றலமே உஅ

(பூவரசுவேர்-அஞ்சனம்)

பற்றலாம்பூவரசு வடவேர்வாங்கிப
 இற்றலாமோண்டத்தைலமூட்டி
பாங்கானச்சட்டியிலே கருக்கிக்கொண்டு
 விழியிலிட்டுக்கையிலிடத் திறக்குங்கைதான்
கத்தாழம்வேற்பூபொம் மட்டி மூலங்
 காணவெள்ளைச்சாரணைவேற் பத்திரியுங்கூட
சத்தாகவரைத்ததனை வைத்துக்கொண்டுத்
 தடவுவாய்க்கண்சட்டி தூரிலேதான் உகூ

விளக்கில்-விநோதம்செவ்வல்லிபூச்சாற் அஞ்சனம்

தூரிலேதடவியே ரண்டநெய்யைச்
 சூட்டியேவிளக்கேற்றி யெறித்துவாங்கி
தூரிலேதடவியே ரண்டநெய்யைச்
 சொற்பெரியதயிலத்திற் பிறட்டிக்கொண்டு
தூரிலேயிருந்துபார் பொய்க்கண்நெற்றிச்
 சொற்பெரியதயிலத்திற் பிறட்டிக்கொண்டு
தூரிலேபார்த்திட விளக்கொளியைப்போலே
 தோற்றுதபொருள்களெல்லாந் தோற்றுந்தானே கூ0

தோற்றிடவேபுற்றின்மேல் முளைத்துநின்ற
 சொற்பெரியசாரணையை கட்டையாற்சுட்டு
ஆற்றியேகரியெடுத்து யோரண்டநெய்யில்
 அய்யனேகுழைத்துநன்றாய் வைத்துக்கொண்டு
போற்றிடவேவாமத்தில் வாலைதன்னைப்
 பூசித்துவாமமூண்டு புகழாகமைந்தா
கூற்றிடவேவிளக்கெண்ணெ யினிமேலேதேய்த்துக்
 கூர்ந்துபார்வெகுதூர மோடுங்கையே கூக

முதலைக்கண்- ஆமைகண் அஞ்சனம்

ஓடுமப்பாமுன் றூற்றுக்காதுதூரம்
 ஊமையிதுசொல்லி விட்டேனுருஞ்சொல்லார்
ஆடுமப்பாமுதலைக்கண் ணமைகண்ணும்
 அப்பனேயெலியாலம் பாலாலாட்டி
நாடுமப்பாயோண்டத் தயிலமூட்டி
 நலமாகக்கைக்குள்ளே பூசிப்பாரு
கூடுமப்பாமனதிலே நினைத்ததெல்லாங்
 குறையாதுயெந்நாளும் வாழலாமே

## நீர்க்காகை அஞ்சனம்

வாழ்கிறதோர்நீர்காக்கைப்பிடித்துவந்து
மக்களேநீரிலே வேகவைத்து
தாழ்கிறதோர்நெய்யெடுத்துத் தீபமேற்றி
சாதகமாய்செம்பருத்தஞ் சாறுவாங்கிச்
சூழ்கிறதோற்புத்தோட்டிற் றடவிநன்றாய்
துவளவேயைந்தாறு முறைவிடாமல்
ஆழ்கிறதோர்காக்கைநெய்யில் மையைவாங்கி
அப்பனேகையிலிட நீங்குங்காணே ௩௩

## பேய்ப்புடலையஞ்சனம்

காணப்பாபேய்ப்புடலை சமூலமவங்கிக
கருக்கியேயேரண்டத் தயிலமூட்டி.
பூணப்பாகையிலிட்டுத் தாயைப்போறறித்
புகழாகப்பார்த்திடவே க்ஷேமம்பாரு
காணப்பாமூக்குறட்டைத் திங்கள்நன்று
நயமாகக்காப்பிட்டு வுபசரித்து
கோணப்பாஅஞ்சனு தேவிக்குத்தான்
கோழியொன்றுஞ்செவ்வாயில் பெலிதானூட்டே ௩௪

## மூக்குறட்டை அஞ்சன்ம்

பெலிகொடுத்துப்பிடுங்கியதை யாட்டிக்கொண்டு
போராகநீழலிலே யுலர்த்திவைத்து
கெலியெடுத்தசெம்புதனை முக்கால்சுற்றிக்
கிளறவேசக்கையுடன் பிழிந்துகொண்டு
ஒலியெடுத்தவுண்டைதனை யரைத்துவாங்கி
வுள்ளங்கைமுத்திலிட திறக்குங்கைதான்
பலியெடுத்திப்புத்தி லாடுதின்னாப்
பாலைசமூலமுமாய்ப் பிடுங்கிக்கொள்ளே ௩௫

## பொன்னாங்காணி அஞ்சனம்சிறுகீரை அஞ்சனம்

கொள்ளடாஆனைக்கண் சட்டிதன்னிற்
குமுரவேகருக்கியதைத் தயிலமூட்டி
அள்ளடாகையிலிடு சுதபாதாளம்
அப்பனேயன்பாகக் காணுங்காணும்
விள்ளடாயின்னமொன்று பொன்னாங்காணி
விவரமுடன்முன்போலே கருக்கிப்பாரு
துள்ளடாசிறுகீரை கருக்கிநன்றாய்ச்
சொன்னபடிபார்த்திடவே யுண்மையாமே ௩௬

வெள்ளெருக்கு அஞ்சனம்

உண்மையின்னஞ்சொல்லுகிறே னஞ்சனந்தா
னொன்றுவுத்ரிமனேவெள்ளருக்கன் மூதந்
தண்மைவண்மையெனுங்கரியான்சாறுவிட்டுத்
தண்மையுடன்புத்தோட்டில் வைததுவித்து
பெண்மையாய்நாலுதிறம் வைத்துத்தேய்த்துமை
பேரானசெம்பருத்திப் பஞ்சிலேதான்
வெண்மையுடன்திரிதிரித்து விளக்கேற்றிமைவை
விவரமுடன்குழப்பதற்கு விரைவுவேனே நூஎ

{ ஆடுதின்னாப்பாலைகவுதும்கை மூக்குறட்டைசத்திசாரணை
மேனிவேய்ப்புடலகரட்டுமல்லிகை அஞ்சனம் }

குழத்திடுவாய்வேப்பெண்ணெய்கொண்டுநீயும்
குமுறவேயெளியலாம்பருப்புநாலு
இழைத்திடுவாய்மையோடு றேகித்தேதான்
இயல்பாகக்கையிலிட்டுப்பாருபாரு
அழைத்திடுவாய்சமூலமாடு தின்னாப்பாலை
அப்பனேகவுதுமபை கீழ்க்காய்நெல்லி
வழைத்திடுவாய்மூககுரட்டைச் சத்திசாரணை
வாகானமேனியுடன் பேய்ப்புடலேதானேயி நூஅ

ஓடலோடுதாட்டுமல்லி யிவையெல்லாந்தான்
பிடுங்கியேசமூலமெல்லாங் கொண்டுவந்து
உடலோடுசட்டியிலே கருக்கிவைத்து
மேலானயேரண்டத் தயிலமூட்டி
கடலோடுவகையிலிட்டுப் பாருசொன்னேன்
கனமானகொடிநெட்டி மூலம்வாங்கி
ஓடலோடுகாசகணந்தான் வெள்ளைதானும்
வுத்தமனேகவுதும்பை யமுக்குறாவேர் நூகூ

அமுக்குறாவெள்ளெருக்குமை

அமுக்குறாயேயத்தி யிவையெல்லாந்தான்
அப்பனேசமபாகங் கருக்கிவாங்கி
அமுக்குறாயேரண்டத் தயிலஞ்சேர்த்து
ஆமிபாதத்தில்வைதது அன்பாய்நீயு
அமுக்கிறாமையைகையி லிட்டுப்பார்க்க
அப்பனேயண்டங்க ளடுக்குங்காணும்
அமுக்கிறாவெள்ளெருக்கு மூலம்வாங்கி
அப்பனேமுன்போலப் பொருந்தச்செய்யே சய

பொருந்வேபார்த்திடவே பொருளெல்லாங்காணும்
பூட்டுவதுயெருக்குக் லெண்ணெய்சேரும்
பொருந்தவேசிறட்டையிலே மையைவைத்துப்
புகழாகப்பார்த்திடவே பிரிவுகேளு
பொருந்திடவே தேவிபதம்பணியவேண்டும்
பொய்யல்லதேவியிட பூசைவேண்டும்
பொருந்தவேமவுனமது வுரைக்கவேண்டும்
பொய்யல்லயிம்முறைதான் புகழாய்பாரே ௬௧

{ கலியுகத்தில் மனமுறைத்துப்பார்க்க இவர் நூர்களுக்குச் சாபமுண்டு எந்நூற்கில்லை }

பாரப்பாகலியுகத்தில் சத்திமுத்தி
பண்பாகபலிக்குமன பதினெட்டாகும்
பாரப்பாயுகந்தனிலே முரைக்கவேண்டும்
பாங்கானகலியுகந்தான் கடையாகும்
பாரப்பாநூற்கெல்லாஞ் சாபமுண்டு
பராபரைத்தாயென் னூறுக்குச்சாபந்தீர்த்தாள்
பாரப்பாவென்மொழிதான் சத்தியமேயாகும்
பார்த்தவர்குப்பூரணந்தான் பதவியாமே ௬௨

{ பலதிரட்டுநொண்டி நூல்பார்க்கவும்பிராணயோகஞ் சிக்கினால்போகரைப்போலிருக்கலாம் }

பதவியென்றசுத்திமுன் பலதிரட்டுநொண்டி
பார்ப்பவர்க்குங்கருவெல்லாம் பலிக்குமநன்றாய்
உதவியென்றுஞ்செய்வார்கள் வானுள்ளோர்கள்
உட்கார்ந்துநிற்பார்க ளிகதசித்தம்
சிதவியென்றும்வாராது பிராணயோகம்
சிக்கினால்போகரைப்போல் திரியலாகும்
மதவிபோட்டிருந்தமுப்பு தானேயுண்டாஅ
வாரிவருமுழுதுண்டு வாழலாமே ௬௩

ஞான மவுனம்

வாழலாம்பதினெட்டு யுகங்கள்தோறும்
மழலைதனையறிந்தாக்கால் மயக்கந்தீரும்
வாழலாம்வன்பொருட்டால் அதீதமெல்லாம்
அப்பாவல்லோ ஆறுதலமழ காய்க்காணும்
கோளெல்லாம்அறுவகையின் மாய்கைமாவின்
குறிப்பழிக்கும்கூட்டைக் கொல்லும்கொல்லும்
காளெல்லாங்கற்றாலென் பொருள்சொன்னாலென்
காடாதுவஞ்சமன் காட்டத்தொற்கோ ௬௪

பாசத்தோர்கள்குணம

நாட்டமுறுஞ்சந்திரனும் பாலையுண்டால்
நல்வினையுந்தீவினையும் நாசமாகும்
கூட்டமுருவேடமென்ன சடைதானென்ன
கூசாமல்சட்டையென்ன குறடுமேன்ன
வாட்டமுறுசிஷனென்ன குருமூர்த்தமென்ன
வாய்மூடுமௌனமென்ன மகத்தாமென்ன
ஆட்டமுறும்வேதமென்ன சாஸ்திரங்களென்ன
அலைந்தலைந்துவிழுந்தார்கள் பாசத்தோரே சரு

பாசமுடனிருந்தாலும் பெரியோர்செய்கை
பதறார்கள்சித்தர்களும் பதியில்நிற்பார்
நேசமுடன்பத்தோடேயென்டுகொண்டு
நெடுங்காலம்வாழ்ந்திருப்பார் புவியின்மீதே
தாசமற்றகண்ணுடையோர் அவாசகுணம்
கண்ணிலிடுவார்கேட்ட கழுதைமாண்பார்
ஓசையிடுங்கடலினிலே யலையைப்போபலே
வோயாமற்பிறந்திறந்துஉழல்வர்தாமே சசு

தாளகம் சூதம் கெந்தம்மெழுகு,

தானென்றதாளகத்தின் போக்கைகேளு
சாதகமாய்தாளகமோபலமோமூன்று
தேனென்றசூதமதுபலமோமூன்று
செப்பரியவெள்ளைபாஷாணமூன்று
வேனென்றவெண்காரம் பலமோமூன்று
விபாமுடனிதுநாலு மெருக்கம்பாலில்
கானென்றயிருசாம மயினம்போலேக்
கலரவேநன்றாக அரைந்துவாங்கே சஎ

இம்மெழுகில்வெடியுப்புபெழுகு

வாங்கியேதிருகுகள்ளிப் பாலைவார்த்து
மைந்தனேடொலந்திரமா யெரிக்கக்கேளு
பாங்கியேசிலையிலேமருந்தைக்கட்டி
பரிவாகபாண்டத்திற் பாலைவிட்டுத்
தாங்கியேபால்வைத்து யெரித்துக்கொண்டு
சாதகரையிறக்கிப் பார்மெழுகாய்நிற்கும்
ஏங்கியேதிரியாதே செம்புபத்தில்
இம்மெழுகுவொன்றிடவே வெள்ளியாமே சஅ

வழலைஇதில்"லோகத்தின்வேதை

வெள்ளிபோல்வழலைதனை மயினமாக்க
வெடியுப்புநீர்தனிலே சவுக்காரத்தை

அள்ளியள்ளித்தெளித்தங்கேரஷியிற்போடு
அப்பனேபக்ஷமொன்றுதெளித்துவாரீ
கள்ளியிடபால்போலேயெண்ணெயெல்லாங்
கக்குமடாதெளுப்பாகக்கண்டுகொள்ளு
வெள்ளிபோலாகுமின்புகலவத்திட்டு
ஒருசாமம்அமுரியிலேஆட்டுஆட்டே ௪௮

### துரிசியில் வேதை

ஆட்டியேவழலைதனைப்பரண்டத்திட்டு
அப்பனேயமுரியதிற்பதக்குமிட்டு
காட்டியேகழுதைப்பால்குறுணிவிட்டுக்
கறக்கவேவன்னீருங் குறுணிவிட்டுக்
காட்டியேகழுதைவட்டுசிவத்தபுள்ளி
காஞ்சிக்கிழப்பதிற்கசக்கிச்சேரு
மூட்டியேகருநாவிசக்கையுண்ணு
முப்பதுபலத்துக்குப்பொடித்துப்போடே ௫௰

### துரிசிசுன்னம்•இதில்ரசக்கட்டு

போடப்பாபலமொன்றுகல்லுச்சுன்னம்
புகழானவச்சிரமோபலமுமொன்று
நாடப்பாயெருக்கம்பால்கள்ளிப்பாலும்
நயமாகவிரண்டுபடியதற்குள்விட்டு
ஊடப்பாமேதிநீர் ஆவிநீரும்
உத்தமனேபடிரெண்டுதாக்கு
மூடப்பாசவ்வீரங்கெந்திகூடன்
மும்மூன்றுகழஞ்சியதில்போட்டுவையே ௫௧

வைத்திடுவாய்ரவியினிலேபட்சமொன்று
வாயியுடன்முன்வைத்துவணங்கினன்றாய்
அத்தயிராமத்தாலேகடைந்தாயானால்
ஐமந்தமேன்றுரையாகமேலேநிற்கும்
கைத்ததொருகரண்டியினால்நுரையைவாங்கிக்
கைகொண்டுவாங்கினால்கைதான்வேகும்
மெத்தவுருபீங்கானில்வழித்துப்போடு
விதற்குரெட்டிநேர்வாளஞ்சேருசேரே ௫௨

சேர்த்தப்பாஆட்டியிந்தவெண்ணெயுள்ளே
சிறப்பாகலக்கினன்றாயப்பாண்டத்திட்டு
வார்த்தப்பாஅமுரிபடியெட்டுவிட்டு
வாகாகக்கடைந்துவைத்தவெண்ணெய்வாங்கி

பார்த்தப்பூரபட்சமொன்றுகடைந்துகொண்டு
பார்வதிக்குப்பூசைசெய்துபத்தியாகக்
கார்த்தப்பாயீசாரணமகிர்வாணிக்கு
காளிவெளியூட்டவேகளங்கம்போச்சே ௫௩

போச்சென்றவெண்ணெய்தனைச்சாரக்கிற்போட
பொங்கிதுபூப்போலேசுன்னமாகும்
வாச்சென்றவெண்ணெயுடன்சவ்வாதுசேரில்
மணிமணியாய்சாரக்குகளையுருக்கியாட்டும்
நீச்சென்றவெண்ணெயிலேபுனுகுசேரில்
நிமிஷத்திற்சாரக்குகளைநீறாய்ச்செய்யும்
பேச்சென்றவுபரசங்களசத்துமாகும்
பேரானலோகத்தில்தட்டவக்கேளே ௫௪

தடவியதைக்காரமிட்டுவுருக்கிவாங்கி
தப்பாதுவெண்மாத்துசக்தியமுண்மை
படபடென்றுபாராதேலவழலைதன்னைப்
பச்சையிலேவெண்ணெய்களைப்பதனமாய்ப்பூசி
அடவியுடன்மூன்றுதிரமஆவியிற்போட்டு
அப்பனேகற்சட்டிணப்பொடியில்வைத்து
இடமுடனேசட்டிகொண்டுமூடிநன்றாய்
இருசாமங்கமலவன்னியெரித்திடாயே ௫௫

எரித்தாறிநீறியதுவெள்ளிபோலாம்
இதினாலேகோடிகவர்வர்ணங்காணும்
திரித்திடவேகருத்தையிதில்சற்றுநேரம்
சிந்தித்துப்பார்த்திடுவாய்தெளிவாய்க்காணும்
அரித்திடவேசெத்தையிலேவிழுந்ததீப்போல்
ஆச்சரியஞ்சூதமொருசேரைவாங்கி
பரித்திடவேவெண்ணெயொருவராகன்றானும்
பண்பாகக்கலவத்திலாட்டு ஆட்டே ௫௬

நவலோகம் ஊரலறும்

ஆட்டியதைக்குகையிலிட்டுக்காரமூடி
அப்பனேயுருக்கிடவேமணியாய்நிற்கும்
நீட்டியேசாரணைதானிதற்குத்தீர்த்தால்
நிமிஷத்திற்சடத்தோடேயுசாவேற்றும்
கூட்டியேகடைந்தாண்டிநீருக்குள்ளே
கோட்டுவாய்நவலோகமூரல்போகும்
மூட்டுவாய்கரண்டியிலுற்றடவினாலே
மூத்தாதசாக்கெல்லாங்கட்டுந்தானே ௫௭

வழலைமார்க்கம் கொங்கணர்முறை ரசசெந்தூரம்.

எல்லாரும்வழலைதனைச்சுன்னமாக
வேணபடிசொன்னார்கள்வெவ்வேறாக
வல்லவனார்கொங்கணவர்முடியைக்கண்டார்
மகத்தானபொருள்வகையுஞ்சொன்னார்சொன்னார்
சூல்லாருரசமணியையுப்பில்வைத்துக்
குமுறவேசாமமொன்றுஎரித்துவாங்கு
சொல்லாதசெம்பருத்திப்பூவைப்போலாகும்
சுகமாகவெட்டுகோள்பாரிற்கொள்ளே ௫௮

முன்வெண்ணெய்யில்மாவுமைநரைதிரைமாறும்.

கொள்ளவேநரையோடுதிரையும்போகும்
குலைந்துநின்றதந்தமெல்லாமிறுகிநிற்கும்
மெள்ளவேகண்சிவக்குமேனிவாடும்
மேனகைதிலோர்த்தமையைமேவச்செய்யும்
சுள்ளவேசுக்குலந்தான்மேலேயேற்றும்
சுகபோகஞ்செய்தாலும்விந்துவீழா
அள்ளவேகுறையாதுமுப்பாழ்தாண்டும்
ஆருக்குமெட்டாதவதிதமாமே ௫௯
ஆமப்பாவெண்ணெய்யில்தேனைத்தேய்த்து

ஆதனையின்பால்தேய்த்துஅன்பாய்நீயும்
ஓமப்பாதிலதமிடத்தன்னைக்காணார்
உத்தமனேயொருமாதமொருவர்காணார்
போமப்பாஅசுவத்தின்கால்வேகங்கொண்டு
பூமிதனில்மறைத்ததெல்லாம்பொலிவாய்க்காணும்
வேமப்பா அண்டரண்டம்வழலைப்பட்டால்
வேதாந்தம்பஞ்சகர்த்தாள்மெய்சொன்னாரே ௬௰

{ இந்தசெந்தூரம் லோகங்களிற்கொடுத்தால் }
{ ௬௰-முதல்௬௩அமாத்துவரைக்கும்வேதைமார்க்கம் }

சொன்னதொருசூதசெந்தூரந்தன்னைச்
சூட்டுகிறேன்வேதை[illegible]சூக்ஷமாக
சொன்னதொருலோக[illegible]தில்நூற்றுக்கொன்று
சூட்டவேநாற்பதுமாத்ததுவுமாகும்
சொன்னதொருகுடவனிலேயூட்டினைக்கால்
சோர்வற்றசொர்ணமாம்வேதையாகும்
சொன்னதொருஉபரசத்தின்பரிசித்தாக்கால்
சோர்வின்றிநூற்றெட்டுமாத்துமாமே ௬௧

மாத்தாகுமாட்டமேஆயிரத்தெட்டு
மாத்தாகும்குடவனில்அன்ஹூற்றுக்கொன்று
மாத்தாகும்வெள்ளியிலேநூற்றுக்கொன்று
வைத்தேறயிருநூறுமாத்துமாகும்
மாத்தாகும்பாசத்தில்முப்பதுக்கொன்று
மாட்டப்பாபதினாறுமாத்துமாகும்
மாத்தாகும்ரவியிலேஅன்பதுக்கொன்று
வரிசையிடனுருக்கிடவேமாத்தைம்பதாமே சா௨

துரிசிசுன்னம்

ஆமப்பாசவுக்காரசசுன்னந்தன்னை
வழூர்தத்தால்கண்டருக்குஅப்பிப்பூசி
ஓமப்பாவெயிலில்வைக்கச்சுன்னமாகும்
உத்தமனேகுழாயிலேவடைத்துக்கொண்டு
தாமப்பாசரக்குகளில்தடவியூக
சாதகமாய்மணுயாகவுருகியாடும்
வேமப்பாநவலோகந்தன்னிலூட்ட
வேதையென்னபதினெட்டுமாத்துங்காணே சா௩

ழஅ பேர்சித்தர்கள்நூல்பார்க்க

பதினெட்டுபேர்சித்தர்பேருபெற்றூர்
பாடினதோர்சாஸ்த்திரமுஞ்சூத்திரமும்பாரு
பதினெட்டுபேர்தனிலேசட்டமுனிநாதர்
பரங்கானகொங்கணர்திருமூலநாதர்
பதினெட்டுசாதியிலுஞ்சிரித்துக்கண்டு
பரிபாஷையில்லாமற்பாடினாஞர்கள்
பதிவிட்டுப்பசுவிட்டுக்களத்திற்சேர்க்கும்
பால்தேனும்பழம்போலருசிபார்கந்தானே சா௪

சட்டைமுனிகொங்கணர்திருமூலர்கருவூரார்நூல்பார்க்கவும்

பதினெட்டுச்சாதியிலுமுடிவில்நிற்கும்
பலசாதிமூவகையின்முடிவில்நிற்கும்
விதிவிட்டுஇறவாதசமயம்விட்டு
விளங்கினன்றாய்பஞ்சகர்த்தாள்வீடுவிட்டு
பதிவிட்டுப் ாசம்விட்டுபதுமம்விட்டு
பதிநிறகுமனம்விட்டுப்பார்வைவிட்டுக்
கதிவிட்டுக்கெதிவிட்டுக்காட்சிவிட்டுங்
கலப்பார்கள்நாதாக்கள்கழித்துதானே சா௫

நாதாக்களிருந்தவிடத்தெந்தநூல்கள்
நால்வேதமாறுசாஸ்திரங்களோமம்

வேதாந்தமறிந்தவரேபெரியோராகும்
மேதினியிலவரோடேமிகவும்வாழ்வார்
வாதாடியவருடனேபேசவேண்டாம்
மனநொந்தாலதிதாகுமன்னர்வாழ்வு
போதாந்தமானமப்பாவாமபூசை
பூசித்தால்மூவுலகுக்கேத்தங்காணே ௬௬

௬௪-ம்-சித்தியாம்

ஏத்தமெத்தவுயர்த்தமெத்தஅறிவுண்டாகும்
எந்நாலைபார்த்தவர்க்குவறிவுமெத்த
ஏத்தமட்டாவாகாசபானமுண்டா
மெடடெட்டுஞ்சித்தியாமினத்தோர்கள்பாண்டு
ஏத்தமெத்தநாதாக்கள்பாடுநூற்றுன்
இயல்பானவேதாந்தமிதற்கொவ்வாது
ஏத்தமதுமூலமதிலிறங்கிக்கொண்டால்
இறவாமற்பிறவாமலிருப்பர்தானே ௬எ

இறவாமலிருப்பதற்குஆயீபாதம்
இறைஞ்சினல்நமனோடேயேற்றிவைப்பாள்
மறவாதேபாணத்தைசதாசித்தியங்கொள்ளு
மானந்தலகிரியினல்வந்துதூக்கும்
உறவாகுமயேந்திரத்திலகிரியோடு
ஒடுருவிச்சகலசித்துமூரைத்துப்போகும்
துரவாகப்பசுவானமாட்டுக்கெல்லாம்
துறந்தாக்கால்சுத்தப்பாழ்பொய்யிமாச்சே ௬அ

(நூல்பொய்யென்றுசொன்னவாக்ள் நாகில்வீழ்வார்)

பொய்யென்றுஎன்னூலைச்சொன்னூருகில்
புலையாய்ரவிகோடிநரகில்வீழ்வா
மெய்யென்றுசத்தியமாய்ச்சொன்னோர்க்கெல்லாம்
மேலானதுருவநிலைவிரும்பிவாழ்வார்
மெய்யென்றுநல்லோர்களிருந்தவூரில்
இடுக்கமில்லைதெந்தநாளும்வாழ்வார்
தையலென்றவாசையைத்திருந்துகொண்டு
சமயங்களீராறுந்தாண்டிப்பாரே ௬௯

பாரென்றுவென்னூலைச்சித்தரெல்லாம்
பார்த்தல்லோபரிசமுதற்சந்தானவேதை
நேரென்றுபார்த்தாலேயெந்நூல்பாரு
நீர்மூடம்விட்டுபோய்கெதியுண்டாகும்

சீரென்றபொருளோடுவருளுங்கூடத்
திறந்துவிட்டேனென்றக்கப்பாருபாரு
ஆரென்றாற்பாசமுருங்குண்டலியைக்கண்டால் எல
ஆத்தாளுமனமகிழ்ந்து அருளிப்பாளே
அருளவேசிவனார்க்குவடியார்க்கன்பாய்
அணிமுடியைசிகரமவரையறையக்காண்பாய்
மருளவேயுலகிலுள்ளோரடையாவண்ணம்
வண்மைபெறுஞ்சாகரத்திலுச்சிகாண்பாய்
இருளவேநீங்கியருளிரவிகாண்பாய்
யெழிலுருவககாட்டுமொளிவட்டங்காண்பாய்
தெருளவேநடுநிலையைப்பிடிக்கக்காண்பாய்
தேசவொளிநாதவொலிபாடுங்காணே எக

(பாஷாணம்வெள்ளியில் அயச்செம்பில்வேதை)

பாடுகிறேன்பாஷாணப்போக்குதன்னைப்
பாங்காகப்பலமென்றுவெள்ளிதாக்கு
பாடுகிறேன்பழச்சாத்திலாஞ்கட்டிப்
பருவமுடன்காடையொருபுடத்தைப்போடு
பாடுகிறேனிப்படிமூவிசைதானபோட்டுப்
பாச்சப்பாலயச்செம்பிற்பத்துக்கொன்று
பாடுகிறேன்வெள்ளியென்னபதினாறாகும்
பருமாத்துப்புளியிலையைச்செம்பிற்பூசே எஉ

குடவனில்நீமிஷவேதை,

பூசியேபழச்சாற்றிலரைத்துக்கொண்டு
புடமாசரவிபுடத்திற்போடுபோடு
கேசியேகுடவனிலிரண்டுக்கொன்று
நீட்டிடவேமாத்தேழுகிமிஷவேதை
ஆசியேதங்கத்தைச்சேர்க்கவொக்க
அறைகிறேன்சூதமொன்றுகெந்தியொன்று
வாசியேதாரமொன்றுகூடக்கூட்டி
மகத்தானசாரமொன்றுதுரிசுகேளே எந

சூதங்கோழிக்காரந்துரிசுகாரம்மாத்திரை
மகாருருநவலோகத்திற்பரயும்வேதை
கேளப்பாவிச்சபகலிலைஞ்சுறைந்து
கெடியானதுரிசுமோகளஞ்சிபத்து
நாளப்பாசதுர்கள்ளிப்பாலைவிட்டு
நாயகமாகச்சாபமொன்றுஆட்டிவாங்கி

நீளப்பாவரிசிபோல்திரட்டிக்கொண்டு
நீட்டுவாயரிசியொன்றுதங்கத்தில்நீயும்
வாளப்பாதங்கமெல்லாஞ்செம்பாய்ப்போகும்
மைந்தனேமாற்றதுதானன்பதாமே, (எ௪)

அன்பதாங்குடவனிலேமுப்பதுக்கொன்று
அழகானசெம்பிலேயிருபதுக்கொன்று
அன்பதாம்வெள்ளியிலேயிருபதுககொன்று
அரியதோர்லோகத்திற்பதினாறுக்கொன்று
எண்பதாங்கஞ்சத்திலபதினாறுக்கொன்று
விருவகையாமியத்திலிருபதுக்கொன்று
எண்பதாம்பறிச்செம்பில்தனிமாற்றாகும்
எழிலரிசிகூட்டவல்லோதன்னைக்காணே. (எ௫)

ஓட்டனை முருங்கைச்சாறில் ரசக்குளிகை.

வல்லோர்களாகமத்தின்முறைதானென்ன
மகத்தானகால்மசக்காய்ப்பாடிவைத்தார்
நல்லோர்கள்பாடாதகருவையெல்லாம்
நயமாகப்பாடிவிட்டேனின்னாலிற்றானே
புல்லோர்கள்தம்பனத்தைக்கேளுகேளு
புகழில்லாத்தாருசியிலேதுடைத்துக்கொண்டு
சொல்லார்கள்கறண்டியிலேகளஞ்சிசூதம்
செகத்தில்முருக்கிலைச்சாறுகூடவூத்தே (எ௬)

(காந்தம் உபரசங்கள் சூதம் தம்பனக்குளிகை)

ஊத்தியேமூன்றுதினஞ்சென்றுவாங்கி
யுத்தமனேகொதிப்பிக்கக்குளிகையாகும்
மாத்தியேகாந்தத்திலுபரசங்கள்கூட்டி
மைந்தனேதண்ணீர்போலுருக்கிவாங்கி
ஏத்தியேமத்தஞ்சார்க்குள்ளேநீயும்
எட்டுநாளூறவிட்டெடுத்துக்கொண்டு
சாத்தியேதனிரெட்டிச்சூதம்விட்டுச்
சாதகமாய்மத்திக்கக்குளிகையாமே. (எஎ)

(செந்தூரம் வெண்தாமரைப்பூ வெண்காக்கணங்குளிகை)

குளிகைதனைக்குகையிலேகட்டிக்கொண்டு
கூசாமல்வாயிலிடத்தம்பனமுமாகும்
குளிகைதனைவைத்தெரிக்கச்செந்தூரமாகும்
கொடுத்தவுடன்நவலோகந்தங்கமாகும்

குளிகையென்னதாமரையின்பூவுதானும்
கூறுனவெள்ளைக்காக்கணமுங்கூட
குளிகைபெற்றோரணியிலேபூட்டிவாங்கித்
தொப்பிளிலேதடவியேகூடுகூட்டே. (எஅ)

கூட்டியிடில்தம்பிக்குமிந்திரகோபங்
குழலிலேபொடியாக்கியடைத்துக்கொண்டு
கூடவேவேண்டினூற்றிரியினூட்டிக்
குமுறவேயேரண்டைநெய்யைவிட்டுக்
கூடவேவிளக்கேற்றிப்புணர்ந்தபேர்க்கும்
குறையாதுவீரியந்தான்குதித்துநிற்கும்
கூடவேவிளக்கதனையவித்துவைத்தால்
கொப்பளிக்குந்தேகமெல்லாங்குதிக்குந்தானே. (எகூ)

(திருகுகள்ளியால் சூதக்குளிகை சம்போகக்குளிகைகள்)

தானென்றதிருகுகள்ளிப்பாலைவாங்கிச்
சாதகமாயேழுதுளிக்கர்த்திலிட்டு
ஆனென்றுமத்தித்துதண்டில்காவி
லாட்டியேகாலிலேநெருப்புத்தொட்டு
வேனென்றநிலத்திலேகால்படாமல்
மேவியேகலவிசெய்யவிளம்பக்கேளு
கோனென்றசெருப்புத்தானணிந்துவூணக்
கூடினாலிருவருக்கும்போகிக்குந்தானே. (அ௰)

தானென்றகள்ளிகருவசந்தர்கேட்டால்
தலைமையாங்கிருஷ்ணவதாரந்தன்னில்
ஏனென்றபதினாயிரம்பாவைமாரை
யெழிலாகவொருபோதுபுணர்ந்தானென்று
வானென்றயிந்திரற்குமாந்தருக்கும்
வகையாகநீபிரித்துச்சொல்வாய்மைந்தா
தேனென்றஸ்தம்பனமாங்குளிகையாலே
சிறப்பாகமங்கையரைப்போகிப்பாயே (அக)

(சத்திச்சாரணைசீதேவிச்செங்கழுநீர்)

போகியர்கள்தம்பனந்தானின்னஞ்சொல்வே
பூட்டடாசத்திச்சாரணைக்குக்கட்டி
பாகமாய்ச்செவ்வாயிற்பலிகொடுத்துப்
பாங்காகமறுசெவ்வாய்க்காசுவைத்து
போகியர்தாம்பூலசுகந்தபுஷ்பம்
முறையுடனேபாயாசந்தூபதீபம்

மாகியாய்த்தவராமல்வேரைவாங்கி
யப்பனேசாதகமாய்க்குளிசமாடே அ௨

(வெள்ளைக்காக்கைமூலி- சமூலம்

ஆடியபின்னரையிலேகட்டிப்பின்பு
ஆனமட்டும்புணர்ந்திடவேவிந்துவிழாத
தேடியேசீதேவிமூலிகைசகோதா
செங்கழுநீர்நூலாலேகாப்புக்கட்டி
நாடியேவடவேரைப்பிடுங்கிக்கொண்டு
நலமாகமுன்சொன்னபடியேசெய்துப்
பாடிநீபுணர்ந்திடவேயின்னஞ்சொல்வேன்
பால்வெள்ளைக்காக்கைம்வேருரைத்துவாங்கே அ௩

(கொம்மட்டிகாய்மாட்டமெனறூல்கலிதம்பண்ண)

உரைத்திடுவாய்காயப்பூரெண்டுமாட்டி
யுறப்பூசித்தண்டினிற்றம்பணமேசெய்யில்
அரைத்திடுவாய்ப்பட்டையிலையாவின்பாலில்
மாட்டியேகொண்டிடவேதமபித்துப்போகும்
குறைத்திடவேகொம்மட்டிப்பழத்தினுள்ளே
குடைந்ததற்குள்வெண்காரம்விராகனிட்டு
புறைத்துடனேகாயதனைப்புதைத்துவைப்பாய்
பொருமியதுமதுப்போலேபொங்கும்பாரே ௪அ

பொங்குமோரவியில்வைக்கநீதான்பாரு
புகழாகச்சிலையிலேபொதிந்துக்கொண்டு
தங்குமேகாய்கசக்கித்தண்டிற்பூசித்
தயவாகப்புணர்த்திடத்தம்பனமுமாகும்
ஒங்கப்பாவவன்பொறுக்கமாட்டமென்று
வுடன்பிளித்தமோர்குடித்துக்கூடச்செல்வாய்
எங்குமப்பாபோகிக்குமதுவுங்கூட
வெழிலமந்தக்காயொன்றுசற்றேகேறே அ௫

(தோள் கொடுக்குவிரை)

கீறியேவிரைபோக்கியிதற்குள்ளேதான்
கெடியானதேள்கொடுக்குக்காயவைத்துக்
கீறியேயழுகாய்க்குள்ளேவைத்துக்
கெடியாகமூடிநீபுடைத்தப்போடு
கீறியேகாய்க்கருகும்செடுத்துக்கொண்டு
கெட்டியாகயரைத்திதனைமிளகுபோலக்
கீறியவுண்டைசெய்துநிழலில்வைத்து
கிரகிக்கவேண்டுமென்றுச்சொல்லுவேனே அ௬

(கோர்வைச்சார்சங்கம்வோர்குருநவைநெல்லு)

வேணுமென்றுலுண்டையொன்றுவரயிற்போட்டு
மெண்ணுண்ணத்தம்பிக்கும்விந்துவீழாய்
பூணுமென்றகோவையிடயிலையின்சாற்றால்
பூசுவாயுள்ளங்கைதனிற்றானும்
நாணுமென்றுபோகிக்குஞ்சங்கம்வேறால்
நாழிபொடிகுருவைநெல்லுபடிதான்மூன்று
தோணுமென்றபட்டடைத்தூள்நெல்லிற்சேர்த்துச்
சுவறவேகிண்டிநன்றாய்விரவியையே அஎ

(முருங்கை தளிர்)

வைத்ததொருநெல்லுகருள் தண்ணீர்விட்டு
மைந்தனேவிரவியதைவேகவைதது
மொய்த்ததொருஆவிதான்போகுமுன்னே
மூதிரவேகுத்திஞலிடியாதப்பா
பொய்த்ததொருஅரிசிதனையெடுத்துக்கொண்டு
பொங்கமுடன்பச்சரிசியாகக்குத்தி
நைத்ததொருமுருங்கையிடத்தளிருங்கூட்டி
நலமாகவாயலிட்டுப்பின்புகேளே அஅ

(குன்றிமணிபிண்டியிலை ஆமணக்கிலை)

பின்புதின்னுஞ்சர்க்கரைதம்பித்துக்கொள்ளும்
பேரானகுன்றிமணியிடித்துத்தூளாய
அன்புடனேயமூரிவிட்டுவயம்போலாட்டி
ஆமணக்கினிலைதனிலேசத்தியேதான்
இன்புடனேகலத்தில்வைத்தாவியில்போடு
விதமாகசாத்திவைக்கத்தயிலமூறும்
வன்வுடனேபிண்டியிலைவாலுளுவையரிசி
மாட்டியேகாடியினிலரைத்திடாயே அகூ

கோதும்பி மங்கிரிஷ்டி தண்ணீர்மிட்டான்கிழங்கு

பூனைக்காலிவிரை

அறைத்ததனைக்கலத்துக்குள்தடவிக்கொண்டு
அப்பனேஆவியில்வைக்கத்தயிலமூறும்
இறுத்ததொருரெண்டுவகைத்தயிலமெல்லா
மெடுத்துடைத்துமேல்மருந்தையியம்பக்கேளு
நிறுத்ததொருகோதும்பைமங்கிஷடிதானும
நேராகத்தண்ணீர்மிட்டான்கிழங்குங்கூட்டி
உறுத்ததொருபூனைக்காலிவிரையுங்கூட்டி
வேறொன்றுபலமரைதானுருட்டிவாங்கே கூய

### முள்ளிவேர்

உருட்டியேசர்க்கரையுங்கூடக்கூட்டி
யுருட்டிடுவாய்ப்பக்களவுவாவின்பாலில்
மருட்டியேகால்மடியில்கொண்டுவிட்டால்
மைந்தனேநூறுபெண்ணைமருவலாமே
நெருட்டியிலேகலவியிலேவிந்துவிழா
நேரானசுக்குலம்எருமலேறும்
மருட்டியேவிந்திறங்குமார்க்கங்கேளு
மேலானமுள்ளிவேர்த்தோலைவாங்கே ௬௧

### விந்துவீழ்கிறதற்கு வெண்டாமரைவித்து

### ஓரிலைத் தாமரை

வாங்கியேதேன்தனிலூட்டியுண்ண
மைந்தனேவிந்துவிழுமின்னங்கேளு
வாங்கியேவெள்ளைத்தாமரையின்வித்தை
மயினம்போலேதேனிலாட்டிக்கொண்டு
வாங்கியேலிங்கத்தில்தடவிக்கொண்டு
மாதர்களைப்புணர்ந்திடவேவிந்துவிழா
வாங்கியேவோரிலைத்தாமரைக்குக்கேளு
மைந்தனேகோழியொன்றுபெலிதானூட்டே ௬௨

### கரும்பூனைவால்அத்திகருஞ்சாரைஇவைகள் போகர்செய்த முறைகள்

பொலிகொடுத்து ஆணிவேறையரையிற்கட்டிப்
பிரியமுடன்காத்தோட்டிப்படுக்கைக்கீழ்வை
பெலிகொடுத்துக்கரும்பூனைவாலுமாகும்
பின்பாகசருஞ்சாரையத்தியாகும்
மலிகொடுத்துத்தம்பிக்குமவிந்துவைத்தான்
வாகுமடாமேல்நோக்கிவலித்துக்கொள்ளும்
செலிகொடுத்துமன்மதன்போல்வலுவுண்டாகும்
கீழ்நோக்கிவிழாமல்வாங்குந்தானே ௬௩

இதுவரையிற்சொல்லியமுறைகளெல்லாம்இல்லறத்தி

### லிருந்துபோகிக்கவேண்டியது

வாங்குமடாசுக்கிலத்தைமேலேயேற்றி
மைந்தனேபிராணயோகமாகும்
பாங்குடனேயிந்தமுறைபோகர்மார்க்கம்
பார்த்துவிட்டார்பதினாலுலோகங்காணும்
காங்குமடாதிரிலோகவசியமுண்டாம்
கன்னிக்குத்தப்பனைதான்கணவனாகும்

ஏங்குறுபார் அண்ணாட்டமில்லறத்தே
யிருந்துகொண்டுசம்போகத்தியல்புபாரே ௬௪

நாகக்கட்டு

பார்த்திடவேநாகத்தின்சுத்திகேளு
பரமன்மூன்னேலீஸ்வரிக்குப்பகர்ந்தவித்தை
பார்த்திடவேநாகமதுபலந்தானஞ்சு
பண்பாத்கதேங்காய்நெய்விட்டுருக்கிப்
பார்த்திடவேகிண்ணிசெய்துகிண்ணிக்குள்ளே
பாச்சடாவுப்பைநெரும்பபத்திரன்றாய்ப்
பார்த்திடவேகிண்ணிவைத்துப்பைவிட்டுப்
பண்பாகவிரக்கவந்தான்தெரியக்கேளே ௬௫

(நாகபஸ்பம்-டுசு

கேளப்பாசுத்தியந்தவுப்பைவிட்டுக்
கெடியாகப்பெருவாயின்னீரைவிட்டு
கேளப்பபாசுருக்கிடவுங்கட்டிப்போகுங்
கிருபையுள்ளகிண்ணியிற்கூமுப்பேபாகும்
கேளப்பாமற்றதுவுங்கட்டிப்போகுங்
கெட்டிகெட்டிநாகமெல்லாம்பஸ்பமாசசு
கேளப்பாயிந்நீரிற்கவரோகோடி
கிட்டாதபோதத்திற்போற்றுந்தானே ௬௬

போற்றத்திறேற்றுவிக்கும்நாகவித்தைப்
பூட்டுவாய்ப்பணயிடைதாணமுகத்துட்டி
நீற்றத்தில்த்ராம்பிரத்திலம்பிராஞ்சி
நர்பெரியதங்கம்பகினுறதாகும்
காற்றுடைக்கப்பிறந்ததோர்வித்தைகண்டால்
கருநாகங்கடிபட்டதேரைபோலாம்
வேற்றத்திலாதியாயீசன்வாக்கு
விருதுபெற்றபெரியோர்க்குவித்திதாமே ௬௭

(அயச் செம்புவேதை)

வித்தாகுமயச்செம்புவிபரங்கேளு
மேலானமணலிருமபையிறகுபோல
வைத்தாரத்தட்டியேபணாந்தானஞ்சு
வப்பனேசிவந்தபுளிசலசமூலம்
கொத்தாகமக்குருடபாவிலாட்டிக
குமுறவேசில்லியிலேபிசறிக்கொண்டு
உத்தாகப்பட்சமொன்றுவூரப்போடு
வூரல்போம்பிறித்தனேயெடுத்திடாயே ௬௮

எடுத்ததனைவச்சிரத்தின்குகைதான்செய்து
வியல்பாகச்சுட்டெடுத்துப்பின்புகேளு
படுத்தவனோடலையிலேயரைத்துப்பூசிப்
பாங்காகச்சல்லிதனைக்குகையில்வைத்து
அடுத்தவொருவம்மருந்தால்குகைதான்மூடி
மைந்தனேசீலைசெய்துமண்ணும்பூசிக்
கொடுத்தனைக்குகையில்வைத்துருக்கிதன்னால்
குமறவேவூதிடவேசெம்புமாமே. (௯௯)

அயச்செம்பு-வெள்ளீயம்-இதில்சிமிள்-இதில்சூதம்
நாதம்-லிங்கம் செந்தூரம்வேதை.

செம்பானஅயச்செம்புவிராகனொன்று
சேர்த்துருக்கும்வெள்ளீயம்விராகனொன்று
மன்பாக்குமிவத்தாலேசிமிள்தான்தட்டி
மைந்தனேமூடியுமேவகையாய்ச்செய்து
செம்பாக்கும்சூதமொடுநாகம்லிங்கம்
துயருகமூன்றுமொன்றாய்புரிக்கிவாங்கி
வம்பாகச்சிமிளில்வைக்கவசனஞ்சொல்வோம்
வகையாகவிபரமுடன்மருந்தைக்கேளே. (௧)

மருந்துகேள்தேனுடனேதக்காளிச்சாறும்
வானெருக்கன்பழுப்புச்சாற்பிழிந்துக்கொண்டு
விருந்துகொளமயினம்போலாட்டிவாங்கி
விபரமுடன்தகட்டின்மேல்பிரவிக்கொண்டு
பொருந்தக்கேள்சிமிளின்மேல்வைத்தடைத்துப்
புகழாகச்சீலைசெய்துமண்ணுஞ்செய்து
இருந்துகேளாவரையின்கரியினாலே
யியல்பாகவூதிடவே சிவக்கும்பாரே (௱௧)

கற்பங்கொள்ளவும்

சிவந்தவொருசெந்தாச மொருமாவாங்கிச்
சோத்துருக்கவெள்ளியொருபலத்தில்மைந்தா
சிவந்தவொருமாத்தேதுபதினெட்டாகுஞ்
சேர்க்கவேவங்கத்திற்களஞ்சிவாங்கி
சிவந்தவொருசெந்தூரக்காணிகொண்டால்
தேகமப்பாதேவரிடதேகமாமே
சிவந்தவொருசெந்தூரம்பணந்தானாட்டு
தெய்வீகமெட்டரைதான்செப்பமாட்டேன். (௱௨)

எட்டிவிரை ஐங்கோலப்பழச்சாற்புணர்ச்சிக்க
தேவனுமீரெட்டுவயதுபோலே
செப்பமுடனிருபதுநாள்தின்றுயானால்
தேவனுமெட்டிவிரைக்கருப்பஞ்சாற்றில்
திறமாகமூன்றுதிரம்அவித்துக்கொண்டு
தேவனுமலிங்கத்தில்தடவிக்கொண்டு
திடமாகப்புணரயிலேதம்பனமுமாகும்
தேவனும்மைங்கோலப்பழச்சார்கொண்டு
திரியிலிட்டுவிளக்கேத்தம்பிக்குந்தானே (௧௦௩)

ரூதம்வெள்ளிகிமிளிசெப்புக்கிண்ணியில்செந்தூரவேதை.

தானென்றவெள்ளிவித்தைசொல்லக்கேளு
சாதகமாய்ரூதமதுகளஞ்சிமூன்று
வேனென்றவெள்ளியப்பாகளஞ்சிமூன்று
மேலானகிமிளியதுகளஞ்சிமூன்று
தேனென்றமூன்மூன்றுகளஞ்சிசேரத்
திரளவேயெருக்கம்பால்சேர்த்துகூட்டித்
தேனென்றவெழுகளஞ்சிச்செம்புகொண்டு
சிமிளடைத்துமூடியதுதிறக்கச்செய்யே. (௧௦௪)

செய்ததொருசிமிளிலேமருந்தைவைத்து
சீராகச்சட்டிக்குள்மணலுமிட்டுச்
செய்த்தொருசிமிளுக்குச்சீலைசெய்துத்
திறமாகச்சட்டியிலேசிமிளைவைத்துச்
செய்ததொருமேல்சட்டிகொண்டுமூடிச்
சீலைசெய்துவடுப்பேற்றித்திறமாய்வைத்துச்
செய்ததொருகமலவன்னிரெண்டுசாமம்
சிமிளில்பத்திசெந்தூரமாகும்பாரே. (௧௦௫)

ரூதம்கெந்திசட்டியில்லைத்துசெப்புகிண்ணிமேல்
மூடினசெந்தூரம்

பாரிந்தச்செந்தூர மொருமாவாங்கிப்
பாச்லடாவெள்ளியங் களஞ்சிரண்டிற்
பாரிந்தவெள்ளியம் வெள்ளியாகும்
பாங்கானச்ரூதமொன்று கெந்தியொன்று
பாரிந்தவுத்தமதாளிச சாற்றிலாட்டிப்
பாங்காகச்சரமமொன்று பிறகுவாங்கிப்
பாரிந்தவடுப்பிலே யோடுகொண்டுப்
பாங்காகத்தூக்கணத்த லோடுவையே. (௧௦௬

ஓடுவைத்துமுன்மருந்தையிதின்மேல்வைத்து
வுற்றசெம்புக்கிண்ணியினால்மறைத்துமூடி
ஓடுவைத்துச்சீலைசெய்துமண்ணுஞ்செய்து
வுற்பனமாய்மணலிட்டுமரைத்துமூடி
ஓடுவைத்துக்கதியெரிப்பாய்ச்சாமமொன்று
வுத்தமனேமேகநிறம்போலேமற்றும்
தேடியே சர்த்துவைத்திதனைமூடிச்
செந்தூரம்பத்துறவாய்ச்சல்லியூட்டே. ௱௭

ஊட்டுவாய்ச்சல்லியிலேகாரமேற்றி
யுரைக்கின்றேன்பலத்தினிற்செந்தூரமோர்மா
ஊட்டுவாய்த்தும்பைச்சாற்விட்டுநீயு
முருக்கிப்பார்சல்லியதுசெழிப்பேயாகும்
ஊட்டுவாய்செம்புமதுமூன்றேதாக்கு
வுருக்கடாவெள்ளியுமோரேழுசேர்த்து
ஊட்டுவாய்மாத்துமதுபதினொன்றாகும்
வுத்தமனேயிந்தமுறைவூணிப்பாரே. ௱௮

(ஆல்கிளைபுல்லாமணக்குஇதில்லிங்கக்கட்டு.)

பாரப்பாஆல்கிளையைக்கொண்டுவந்து
பாடலரையுறுபுல்லாமணக்கினசாற்றால்
சேரப்பாலிங்கத்திலிரசங்கட்டித்
திறக்கவேயிரண்டொருவாற்புடத்தைப்போடு
ஆரப்பாபின்பொறுக்கால்மருந்தைப்பூசி
யப்பனேகுகையிலிட்டிடுக்கிவாங்கி
காரப்பாலிங்கமதுகளங்கேயாகுங்
காட்டடாமுக்களஞ்சியந்தச்செம்பே. ௱௯

(முருக்கம்பட்டைத்தயிலத்தில்வேதை.)

அத்தசெம்புமூன்றிடைக்குக்களஞ்சியொன்று
அப்பனேசேர்த்துருக்கத்தங்கங்காணும்
வித்தசெம்புவெள்ளியதுகளஞ்சிமூன்று
வெறுஞ்செம்புகளஞ்சியதுகூட்டுகூட்டு
பத்தசெம்புமாத்தேதுபதினொன்றாகும்
பராபரத்தாற்சொன்னபடிபார்த்திட்டேன்பின்
உத்தமசெம்பாமுருக்கினிடபட்டைவாங்கி
வுறவாகப்பாண்டற்றிற்றயிலமூத்தே. ௱௰

(லிங்கச்செந்தூரம்.)

தயிலத்தால்சாதிலிங்கஞ்சுருக்குப்போடச்
சாமமொன்றிற்செந்தூரமாகும்பாரு

தயிலத்திற்சேர்த்தாமானபோது
கஷணவேனைச்சினவேளைதசித்தர்வேதை
தயிலத்தாலாவதென்னசிறுகீரைமூசுட்டை
சாதகமாய்வெருட்டிக்குகைகயேசெய்து
தயிலத்தாலேசூதங்களஞ்சிவிட்டுத்
தானரைத்துமூன்மருந்தால்மூடுமூடே. ௩௰௧

மூடியேசீலைசெய்துகரியோட்டுள்ளே
மூகிரவேபொதிந்துநன்றாயூதுவூது
ஆடியேயுருகியதுமணியாய்நிற்கு
மப்பனேயெருக்கம்வேர்மூக்கிரட்டைவேர்
தேடியேபிரயம்வேர்புளிநடலைவேர்
செப்பரியமாருபின்கிழங்கிஞேடு
ஊடியேசாமமறைக்கரண்டிக்குள்ளே
யூட்டுவாய்சூதம்விட்டுவுருக்கக்கேளே. ௩௰௨

வெள்ளிப்பீங்கான்மெழுகு.

உருக்கவேகாரமிட்டுக்குளிகையாகு
மூத்தயனேவெள்ளிமுறைசொல்லக்கேளு
பெருக்கவேபீங்கான்தான்பலமொன்றப்பா
பேரானசூதமொருபலமொன்றப்பா
இருக்கவேசட்டியிலேமணல்தான்விட்டு
யியல்பாகப்பீங்கானையதின்மேல்வைத்துக்
திருக்கவேதீயெரிப்பாய்பழச்சார்கொண்டு
திறமாகச்சாமமொன்றுசுருக்குப்போடே. ௩௰௩

சுருக்கிடவேபீங்காந்தானுருகிவருமட்டு
மெரித்திடுவாய்ததீயைசூட்சமாக
சுருக்கிடவேபீங்கானைநெருக்கிநன்றாய்த்
தூளாகக்கழுசிலேயடைத்துக்கொண்டு
சுருக்கிடவேகமலவன்னிநாலுசாமம
சுளுவாகக்காடாக்கினியாறுசாமம்
சுருக்கிடவேதாம்பிரத்தைக்களஞ்சியேழில்
சூட்டாபொடிகளஞ்சுதிண்ணந்தானே. ௩௰௪

சூட்டியேயுருக்கையிலேமருந்தைக்கேளு
சொற்பெரியவெண்சாரணையின்வேரை
நூட்டியேகளஞ்சிபொடியிட்டுப்பின்னே
யுற்பனமாயுருக்கிப்பார்வெள்ளியாகும்
கூட்டியேமாற்றேதுபதினாறுகும்
கொடிதானபீங்கானிற்குருவிதப்பா

நாட்டியேதனிலேபழச்சாற்றாலறயிட்டு
நன்றாகநாகத்தைப்பொதிந்துபோடே. ௱௰௫

நாகடற்பம்,

பொதிந்ததற்குச்சீலைசெய்துஎருவூட்டிப்போடு
போக்கியந்தநாகமதுபற்பமாகும்
பொதிந்ததற்குச்செம்பேனுவெள்ளிமூன்று
பூட்டுவாய்நாகபற்பமூன்றுதானும்
பொதிந்ததற்குவுருக்கிப்பார்மாற்றுறுகும்
புகலக்கேள்கெந்தியொன்றுசூதமொன்று
பொதிந்ததற்குநாகமொன்றுகள்ளிப்பாலில்
பூட்டியேயொருசாமமாட்டுஆட்டே. ௱௰௬

ஆட்டியேமூக்குறட்டையிலையையாட்டி
அப்பனேநுகைவிட்டுஆறவைத்து
ஆட்டியேகுகைக்குள்ளேமருந்துவைத்து
அப்பனேசீலைசெய்துபுடத்தைப்போடு
ஆட்டியேயெடுத்துப்பார்கட்டிப்போகும்
ஆச்சரியமெழுகுவெள்ளிசெம்புமூன்றில்
ஆட்டியேகளங்கொன்றுசேர்த்துருக்கு
அப்பனேமாற்றேழுகாணுந்தானே. ௱௰௭

தானென்றதாரிசியுடமெழுகுகேளு
சாதகமாய்த்தாளகமும்பலமோபத்து
தானென்றவெடியுப்புநாலாங்காய்ச்சல்
தாளகமுஞ்சரியிடைபொடித்துக்கொண்டு
தானென்றபாண்டத்தில்கீழ்மேலிட்டுத்
தனியாகவிச்சரக்கைமேல்பரப்பி
தானென்றகட்டியின்மேல்பொடித்துத்தூவு
சாதகமாயண்டமரும்வெண்கருவையூத்தே. ௱௰௮

ஊத்தப்பாகினமூன்றுவெண்கருவையூத்தி
யுத்தமனேயதின்பிறகுராவியிற்போடு
பேத்தப்பாபார்த்திடவேகலசத்துள்ளே
பேரானகற்சுண்ணம்பொடித்துடபோடு
சத்தப்பாசட்டிக்கீழ்மேலும்போடு
செயமாகத்தீயெரிப்பாயெச்சரிக்கைகொண்டு
ஈத்தப்பாகண்டாதுநீரேயாகுஞ்
சாதகமாய்ச்சாதநீர்தன்னில்நீற்றே. ௱௰௯

நீற்றவேமெழுகாகும்மெழுகுதன்னை
நீமகனேமஞ்சாடியெடுத்துக்கொண்டி
மாற்றவேசெம்பருத்தம்பூச்சார்விட்டு
மைந்தனேமத்தித்துக்கலயந்தன்னில்
ஏற்றவேபூஞ்சாறுயமதுவாங்கி
யியல்பாகக்கசகிநன்றாய்பிழிந்துக்கொண்டு
நாற்றவேயத்துடனேபழச்சார்விட்டு
நயமாகவிரண்டையுந்தான்சேர்த்திடாயே. ௧௨௰

சாறுயில்-லிங்கமயணம்-இதில்பாஷாணமெழுகு.

வைத்ததின்மேல்சாறுயம்சுருக்குப்போடு
மைந்தனேகஞ்சத்தின்கரண்டிகொண்டு
வைத்ததொருமந்திரத்தின்சுருக்கினாலே
மயினம்போலாகுமந்தலிங்கந்தானும்
வைத்தவொருமயினமொன்றுசெம்புநூறு
வாட்டினால்பதினாறுமாற்றுத்தங்கம்
வைத்ததொருமெழுகுகொண்டுபாஷாணங்கள்
மாட்டிடவேமெழுகாகும்வேதையாமே. ௧௨௧

நாயுருவிசாம்பல்கறியுப்புபழச்சாற்றில்செம்பூறல்போம்.

வேதையென்றமெழுகதனிற்காணிநாக்கி
வற்றிதருரூபாய்நாறுக்குப்பாரு
வேதையென்றமாற்றதுபத்தரையுங்காணும்
வெள்ளிபத்துசெம்பொன்றுகூடக்கூட்டு
வேதையென்றமாதசெட்டுசெம்பிற்சுத்தி
வெகுதெளிவுநாயுருவிச்சாம்பல்வாங்கி
வேதையென்றசாம்பலொடுகறியுப்புநோய்
விரைந்தாட்டிப்பழச்சாற்றில்வாங்குவாங்கே. ௧௨௨

வாங்கியேகட்டியிற்பூசிக்கொண்டு
மைந்தனேவோட்டில்வைத்துப்புதைத்துப்போடு
ஏங்கியேபறந்தோடுஞ்செம்பினால்
இயல்பாகநாகபொடிநிறமபோற்காணும்
தேங்கியேமுன்னுரைத்தசாரநீரைச்
செய்வதற்குமுறைமைகளுநிறமாய்மைந்தா
பாங்கியேகற்சுன்னம்பூமிநீரும்
படியானவகையிரண்டுபடியிரண்டே. ௧௨௩

இந்தநூலுக்கு முதலிலெடுத்த சாரம்செயநீர்
மூப்புபெருமையிந்நீர்சர்வத்துக்குமாதி.
இரண்டையுந்தானமுறியிலே கலக்கிக்கொண்டு
யியல்பாகச்கிளிஞ்சிதனைத்தூளாயாட்டி
இரண்டையுந்தா ணிடைக்குச்சாரங்கூட்டி
யிதமாகபீங்கானில் வழித்துவைத்து
இரண்டையுந்தான்கறண்டிக்குள் வைத்துதீயில்
யிவல்பாகச்சிவக்கமட்டும் நன்றாயூது
இரண்டையுந்தானுருக்குதற்கு வயணங்கேளு
யியல்பாகச்சாரமொரு களஞ்சிபோடே. (௧௨௪)

கற்றாமரையில் சூதக்கட்டு,

போட்டதனையிருக்கத்திற் றடவிக்காச்சப்
போடடாவாயுதமோ யிறக்குமத்தால்
போட்டதனையிந்நீரா லட்டசித்தி
பேரானவெள்ளியதாந் தங்கமாகும்
போட்டதனையுரிக்கியொரு'வில்லையாக்கிப்
புகழாகபனியில்வைக்கச் செயநீராகும்
போட்டதனைநற்கற்றா வரையின்போக்கைப்
பிறவிமயம்நன்றாகப் பிரித்துக்கொதே. (௧௨௫)

பிரித்துக்கேள்தாமரை யிலைகோலப்பா
பெரிதல்லசிறியபூச் சிவப்புமுண்டு
பிரித்துக்கேள்பூசத்தில் ரத்தமபோலும்
போரானநிலத்திலே நீலம்போலும்
பிரித்துக்கேளிரண்டிலொன்று கொண்டுவந்து
பிசகாமற்சமூலந்தான் சாறுவாங்கு
பிரித்துக்கேள்சூதமொன்று கலஞ்சிபத்து
பேர்பெரியமனோசிலைதா னென்றுகூட்டே. (௧௨௬)

கூட்டியதோசிலையதனைத்தூளாயாட்டிக்
குமுறவேதீயக்கிண்ணிக் குள்ளேகேளு
நாட்டியேசூதம்விட்டு சிலையொடித்துத்தூவி
நயமாகச்சட்டிக்குள் கிண்ணம்வைத்து
நீட்டியேமணலிட்டுக் கிண்ணிக்குள்ளே
நேராகதாமரையின் சாறுமொண்டு
ஆட்டியேசாமமொன்று சுருக்குப்போடு
அப்பனேசூதம்நின்று மணியாங்காணே. (௧௨௭

காணப்பாதிரண்டதை யெடுத்துக்கொண்டு
காட்டுவாய்வெள்ளியிலே நூத்துக்கொன்று

பூணப்பாலக் தானன்றாய்த்தாமரையின்சீரில்
பிளவேசிலைகட்டியாட்டிவாங்கி
ஊணப்பாகுழிக்கின்னி மெழுகினன்று
யுள்ளிடுவாய்வலைக்தரசக் தன்னைத்தானும்
கோணப்பாமருந்தடைத்துக் குகைவாய்மூடிக்
குணமாகச்சில்லிட்டுச்சீலைசெய்யே. (கஉஅ)

கல்தாமரை ரசகெந்தி செந்தூரம்.

செய்திடவேபுடமேதுயெருயீராறு
சிறக்கவேகுழிமேலேபுடத்தைப்போடு
செய்திடவேபழச்சாற்றில்கெந்தியாட்டிச்
சிரக்கவேகுகைத்துள்ளேபுகட்டிக்கொண்டு
செய்திடவேசெந்தூரமாகக்கேளு
செப்புகிறேன்வயணமதாய்ச்செப்புறேன்யான்
செய்திடவேநற்கற்றாமரையின்சாற்றால்
சிறக்கவேயிலையரைத்துச் செலுத்திடாயே. (கஉக)

செலுத்திடவேயரைத்ததனைக்குகைக்குள்பூசிச்
சிறக்கவேமருந்தைவைத்துச்சீலைசெய்து
உலைத்திடவேமண்செய்துயெருததானஞ்சி
யுத்தமனேபுடம்போடுகெந்திகூட்டி
அலுத்திடவேபுடமேழிப்படியேநன்று
யாட்டடாசெந்தூரமாகும்பாரு
செலுத்திடவேசெந்தூரம்ச்சாற்றிற்கூட்டிச்
சேர்த்திடவேநூற்றெட்டுமாற்றுமாமே (கஉ௰)

(இதில்ரசச்சுன்னம்இதில்செயநீர்கோடிகவர்)

ஆமப்பாமுன்சொன்ன களஞ்சித்தூளி
லப்பனேசாரமது சமனாய்ச்சேர்த்து
ஓமப்பாவெண்காரமெட்டுக்கொன்று
வூட்டியேவுலையில்வைத்துவூதிவாங்கு
வேமப்பாகொடியசுண்ணம் வேகமெரும்ப
விரவுடனேபதியில்வைக்கச் செயநீராகும்
நாமப்பபாவிந்நீரிற்கோடிகவர்கண்டோம்
நாதாக்களிப்படியேநாட்டினாரே. (௧௩௧)

(விராகத்தில்சூதக்கட்டு காக்கையில்சூதக்கட்டு)

நாட்டுவாய்விராகத்தின்சிரசுவாங்கி
நயமாகப்பதினாலுகளஞ்சிசூதம்

நாட்டுவாய்க்குள்ளே விட்டுத்தைத்து
நயமாகச்சீலைசெய்து மண்ணும்சிக்கி
நாட்டுவாயடுப்பேற்றிச் சாமமூன்று
நயமாகவெரித்திடவே குளிகையாகும்
நாட்டுவாழ்க்காக்கையொன்று கொண்டுவந்து
நாற்களஞ்சிரூதமதின்வாயில்வாரே. (௩௩௨)

வார்த்தகின்வாய்தைத்துக் குறுணிக்கன்றாய்
வாகாகப்பாண்டத்தில் விட்டுக்கேளு
பார்த்ததொருபாண்டத்திற் காக்கைதனைவைத்துப்
பண்பாகவாய்மூடி மண்ணும்பூசி
ஏர்த்ததோராறுதிங்கள் ரவியில்வைக்க
வென்மகனேசூதமது குளிகையாகும்
சேர்த்ததொருவங்கத்தில் நீரைவாங்கும்
செய்ததிலேசாரணைதான்கவனமாமே. (௩௩௩)

ஏரண்டவேர் சிறுதும்பைவேறில் செபுசுததி
ஊறலறும்

கவனமென்னவாயிலிட ஆகாயத்தோடும்
கெடியானமலையுமண்ணு மூநவியோடும்
கவனமென்னயேரண்டமூலத்தோடே
கெட்டியாய்ச் சிறுதுமபைவேறுங்கூட்டி
கவனமென்னபொடியாக்கிவைத்துக்கொண்டு
கிண்டுவாய்த்தாம்பரந்தர்னுருகும்போது
கவனமென்னமேதியிட சாணிக்குள்ளே
கிருபையுடன்மூன்றுதிரஞ்சாய்த்திடாயே. (௩௩௪)

சாய்த்திடவேசரிகைவெள்ளி தோற்றுப்போகும்
தப்பாதுயிதுவெல்லாஞ் சத்தியமாகும்
போர்த்தடவேவஸ்துவித்தை யெழுதினுக்கால்
பிரம்மருத்திரர்மால்போலே வாழுவாரே
எர்த்திடவேசாதிவர்க்க மப்பாகேளு
யியல்பானமுதற்சாதி வேதைகேளு
சேர்த்திடவேசாஸ்திரத்துக்கோடுமப்பா
செப்பமுடனறுசாதி யோட்டங்கேளே. ௩௩௫

(நாலுசாதிவஸ்துவில்மாற்றுவிபரமறியும்படி.)

ஓடுமேயென்னுமொரு மூன்றுஞ்சாதி
வுத்தமனேநாலுறு மாற்றுங்காணும்
ஓடுமசதுறறதியென்ற சாதிக்கேதா

ஞசிதமுடனிருந்து றுமாற்றுங்காணும்
ஓடுமேயிதினாலே விதிலேகண்டால்
வுற்றதவமபெரியோருக குதவியாகும
ஓடுமேமற்றெல்லாம் பதனுக்குளளே
யூட்லப்பார்நாடிகற்ப முறைக்கின்றேனே. (௧௩௬)

உரைக்கின்றமுதற்சாதி வஸ்துவானால்
வுறுதியாய்ப்பட்சமொன்று யுகந்தானென்று
விரைக்கிறேனிரண்டாஞ் சாதியானால்
விலக்கவொருமண்டலத்தி லாயிரந்தான்
விரைக்கிறேன்மேல் மூன்றுஞ்சாதியானால்
விபரமுடனிரண்டுதிங்களாறுநாளும்
திரைக்கிறேநாலுதிக்குள் திங்கள்நாலு
சென்றக்கால்நாலாறு வசமாம்பாரே. (௧௩௭)

பாரப்பாவிப்படியேசாதிநாவில்
யார்த்திட்டார்பெரியோர்கள் சாதிதன்னை
ஆரப்பாபூரணத்தைவாங்கிவந்து
அதில்ரெட்டிப்புனுகோடுபூரணங்கூட்டி
கோரப்பாவச்சிரநீர் விந்துதானும்
கோரணவமுறியொடு முலைப்பால்தானும்
வாரப்பாகூட்டியதைச்சமனாய்ச்சேர்த்து
மையாக்கிக்கல்லுப்பி லெரித்துவாங்கே (௧௩௮)

(செந்தூரஞ்செய்துகற்பமுண்ணநரைதிரைமாறும்)

வாங்கப்பாசாமமொன்றில் செந்தூரமாகும்
மைந்தனேதேனதனிற்பணந்தானுண்ண
தாங்கியேபட்சமொன்றில் நரைதிரைகள்மாறும்
சத்துருவுநோய்பிணிக ளோடிப்போகும்
பாங்கப்பாமேனியெல்லாம் வயிரம்போலாம்
பளபளக்குமேசியிட காந்தியென்ன
எங்குமப்பாவிலன்சாய்கை கண்டபெண்க
ளிரேழுவுலகிலுள்ளோர ரெல்லாந்தானே (௧௩௯)

தானவனுஞ்சத்திபிட மகிமைசொல்வோர்
சதாசிவனாவிந்துவென வேதஞ்சொல்லும்
வானவனாரிஷிசித்தர்முனிவரெல்லா
மனாஞ்சாலவுதித்துவந்தமாற்கமேது
தேவனாஞ்குமுண்டு சட்டைதள்ளிக்
செப்பரியகயிலாசத்தேகமானார்

கோவைனுமிதின்மகிமையதனிலேதான்
கூர்ந்துபாரண்டபகிரண்டமாச்சே ௧௪௰

பூரணத்தில்சூதக்கட்டுசெந்தூரம்;

ஆச்சப்பாவிந் வவொடுநாதஞ்சேரி
லனைத்துயிர்க்குண்டாகுமெழுவகையின்றோற்றம்
ஆச்சப்பாகாதயென்றால்பூரணமேயாச்சு
ஆச்சரியம்விந்துவென்றாலாசானுச்சு
போச்சப்பாவொன்றைவிட்டொன்றைச்சேர்த்தால்
பொன்போகமிலைகாயசுத்தியில்லை
எச்சப்பாகுளிகைச்செந்தூரமில்லை
மியல்பாரீரிலைகுருவுமில்லைதானே ௧௪௧

சூதத்தைவிழுக்கினவன்தேவன்.

இல்லையப்பாடோரிமுதற்கிறுவணமுமிலலை
யிதமானபண்டிதமேயாள்மூலறப்புமு
இல்லையப்பாசூதத்தையாராணலு
மிழுக்கினவிவன்வந்தெடுத்துண்பார்கண்டு
இல்லையப்பாமாகாயசிகாரங்காண்பான்
இனியதோராட்சரமும்கியானமுண்டு
இல்லையப்பா ஆயிவந்துமகனேயென்று
யெடுத்தணைப்பாள்தாய்தமரோடிருந்துவாழே. ௧௪௨

இருந்துபார்சூதத்தையெவ்வண்ணத்தாலு
மிருக்கினவன்தேவனடாயிடுக்கமில்லை
கருந்துபார்நாகமாகும்வெள்ளியாகும
காரீயமவெள்ளீயம்செம்புமாகும
வருந்துபார்சாக்குவகை யெட்டெட்டாகும்
மாயமறக்கட்டன்வர பிரமாவாகும
அருந்துவாய்சூதத்தைபூரத்திலூட்டி
யப்பமேனவுப்பினில்வைத்தெரித்திடாயே, ௧௪௩

எரித்திடுவாயிருமூன்றுகடிகைதானும
எயித்துப்பார்சாதிலிங்கமபோலேயாகும்
தரித்திடுவாய்புருஷமயத்தமிர்தத்தாலே
தன்னையுருக்காணுமலமாத்தமாகும
பரித்திடுவாய்த்திங்களொன்றிலபுத்துத்தேனில்
பாலனும்பதினாறுபிராயம்போலாம்
பொரித்திடுவாய்காலனையும்வினைநோய்போகும்
பொய்பாகப்பெரியோர்கள்பொசிந்திட்டாரே, ௧௪௪

(பூரணச்சந்திரோதயச்செந்தூரம்.)

பொசித்திடவேபூரணச்சந்திரோதயந்தான்
பூட்டாவேவதைமுகம்பிறிப்பதேது
பசித்திடவேசிவசெந்தைக்கண்டபுலிபோலப்
பாரேதுவிண்ணேதுபாய்ப்பேதப்பா
சுசித்துடையலோகமிந்தவாடைபட்டால்
கனவேவதைகனவேவதைகளினவேவதை
வசித்துடையசெந்தூரமின்னங்கேளு
வயத்தினிடவாட்டம்வெகுசுருக்குங்காணே. ௧௪௫

சூதம்கெந்திலோகம்வஸ்துலிங்கம்காந்தம்மால்தேவிநாகம்.
பூரம் புனுகு இந்திரகோபம் இதுகள்செந்தூரம்.

சுருக்கானசூதமொடுகெந்திலோகம்
சொற்பெரியகாந்தமொடுலிங்கம்வஸ்து
மருக்கானமால்தேவிநாகம்பூரம்
வண்மையுள்ளபுகுமுடனேயிந்திரகோபம்
குருக்கானஅயவஞ்சிக்களஞ்சிதாக்கு
குமறவேமூலைப்பாலுந்தேனுங்கூட்டி
சுருக்கானசாமமொன்றுஆட்டிவாங்கு
சூட்சமாய்விரையவில்லைதட்டே ௧௪௬

வில்லைதனைக்குப்பிக்குள்ளடைத்துமைந்தா
விபரமுடன்சில்லிட்டுவாய்தான்மூடி
மல்லிதனிலப்பிரகக்குமரிச்சாற்றால்
மயினம்போலாட்டிகும்பிதனிற்பொதிந்து
வில்லைதாளிக்குள்ளேகலயமிட்டு
வைத்ததற்குள்மணலிட்டுசசட்டியுண்டு
தில்லைநடராயருக்குமாயுக்குந்தான்
சித்திப்பறமலர்த்தாளைபபூசைசெய்யே ௧௪௭

(வஸ்துவில்சூதம்செம்புசெந்தூரம்பிதில்கெவனம்.)

பூசைசெய்துச்சாபமொன்றுயெரித்துவாங்கு
பொங்கியதுசெம்பருத்தம்பூப்போலாகும்
ஆசைசெய்தமுலைப்பாலில் பணவிடைதான்தூக்கி
அப்பனேபின்னுமது கொள்ளுங்கொள்ளும்
வாசைசெய்துகத்தியப்பாநடுவேயோடும்
மகத்தானமதியமுர்வம்வாய்க்குள்சிந்தும்
தீட்சைசெய்துசடமங்கேகலனமோடுஞ்
சிறுபிள்ளைபேலமன்மதனாறுமே ௧௪௮

(காயசித்து அஞ்சனமமறப்புமை

ஆமப்பாநூரானைப்பிலமூண்டாகும்
அவள்சாற்றால்குத்திடவேதூளாய்வீழும்
போமப்பாதேவரெல்லாமேலல்கேழ்ப்பார
புகழ்ந்துமோகிப்பார்பரவசமாக்கன்னி
சோமப்பாவுண்டபின்புசாவுபோச்சு
சொன்னார்கள்பிறக்கருவேகோடிகோடி
நாமப்பாவிந்துவென்றால்சித்தியாச்சு
நலம்பிறகையாருக்குஞ்சொல்லொணாதே ௧௪௯

ஒண்ணாதியாருக்குமிந்தமார்க்கம்
ஓகோகோநூல்களெல்லாமுரைத்தோரில்லை
வொண்ணாதுசெந்தூரத்திலதந்தீட்டி
வொருவருக்குத்தெரியாதுவுருமைமாற்று
வொண்ணாதுயோரண்டத்தயிலத்தோடு
வுற்பனமாய்ச்செந்தூரங்கண்ணிற்றீட்டில்
வொண்ணாதுமூவுலகில்பற்பையெல்லாம்
ஒருகணத்திற்காணலாமுண்மைதானே ௧௫0

தானென்றசெந்தூரங்காணிவாங்கித்
தாம்பிரத்திலோர்பலத்திலூட்டுவூட்டு
தானென்றமாற்றேதுமுந்நூற்றைந்து
சாதிலிங்கம்ரூதமிடைசேர்த்துநன்றாய்
தானென்றவுப்பில்வைத்துயெரித்துஞ்சாமஞ்
சிலாசையிட்டால்செந்தூரஞ்சிவப்பாம்பாரே
தானென்றமுற்சொன்னபடியேயூட்டி
தாம்பிரத்திற்பலமொன்றுசிவந்தபோதே ௧௫௧

சிவந்தவொருசெந்தூரங்குன்றிதூக்கித்
தேனிலேயெட்டுநாள்தின்றாயானால்
சிவந்திருக்குந்தேகமப்பரவருணன்போலச்
சித்தரெல்லாமிதினாலேசித்திபெற்றார்
சிவந்தவொருசெந்தூரம்லோகத்தூட்ட
கூதிணவேதையாயிரத்துக்கொன்றுவோடும்
சிவந்தவொருசெந்தூரம்நாகத்திலூட்டச்
சிவாசிவாபொன்னாகும்நூறுமாத்தே ௧௫௨

மாத்தானசெந்தூரங்கையிலிட்டு
மைந்தனேயமுதற்றாற்றிலதந்தீட்டக்
காத்தானகேசுகணையவந்துதூக்குங்
கன்னிமுதல்காசிவரைகாணப்பண்ணும்

ஆத்தாமவிலைதயிட்டுவுலகத்தோர்கள்
அலைந்தலைந்துகள்ளையுண்டுபலமுறையும்பார்த்தார்
பேத்தானஇந்நூல்தானகிட்டித்தானால்
போற்றிப்பாய்பபூசைவிதிபுகலக்கேளே க௫௩

(மகாதேவிப்பூசைசக்கர விபரமறியும்படி)

கேளப்பாபூசைவிதிசக்கரத்தைச்சொல்வோம்
மெடியான அடையெட்டுபிதழெட்டாகும்
ஆளப்பாநடுமையமறைபொன்னுதும்
அப்பனேரிஷபத்தைநடுவேசேர்த்து
கேளப்பாநோவுணியிமுன்னையாகும்
குன்றுகுமனோன்மணிக்குப்பீடம்போட்டு
வரளப்பாமூன்றுவரைவாசல்நாலு
வாகாசூச்லமதுசூழப்போடே க௫௪

சூழ்ந்திருக்கும்வாசவிற்றேவதைகள்போடு
துடியானகீழ்வாசல்துவாரபாலாள்
வாழ்ந்திருக்குநந்திசர்யீசான்யதேவர்
மைந்தனேதெட்சணத்திசான்யதேவர்
ஆழ்ந்திருக்கும்வடுகனொடுவீரபத்திரன்
அரகராதெட்சணாமூர்த்திகானும்
தாழ்ந்திருக்குங்கீழ்வாசல்கணபதியுங்கந்தன்
சமழாகவட்டகன்னிதன்னைநாட்டே க௫௫

நாட்டடாவடவாசல்காளிதுர்க்கை
நலமானவட்டலெச்ஜமட்டபாலாள்
ஆட்டடாமுனிகளொடுரிஷிகள்தேவர்
அறத்தங்கேகசம் அங்கரணியாசஞ்செய்து
ஊட்டடாகந்தபுட்பமதாதீபம்
வுத்தமனேகளையூட்டிமாலைசாற்றிக்
கேட்டடாபாத்திரங்ள்பத்துமவைக்கக்
குறையாமற்படைத்துநன்றாய்ப்பூசைசெய்பே க௫௬

(பூசைசெய்யும்படிஅதில்கெட்டவர்கள்)

பூசைசெய்துகற்பூரதீபமாட்டிப்
போக்கேகாட்டேகாரகததில்னின்றுக்கொண்டு
ஆசைசெய்யுமட்சரங்களன்பதொன்று
அன்பாகமனதுள்ளேஉளப்பொதிந்து
ஆசைசெய்யும்பாதகரைச்சேர்த்திடாமல்
ழுணைத்தெளிந்தவல்லோரைவருந்திக்கொண்டு

நேசைசெய்யவர்ச்சனைசெய்துபின்புமூன்று
நிச்சயமாய்த்தேவிவந்துதெரிசிப்பாளே ௧௫௭

தெரிசித்துத்தமரோடேசேர்ப்பான்சேர்ப்பாள்
சிறுகன்னியென்றதொரூசிறுபெண்ணப்பா
தெரிசித்ததீட்சைக்குவயணமேது
திசதிட்சைபத்துவகைபேதமாகும்
தெரிசித்துத்தீட்சைபெற்றபெரியோர்பாதம்
தெண்டனிட்டுப்பணிந்திடவேதீட்சைசெய்வார்
தெரிசித்தப்பாடலெல்லாம்வடக்கேயாச்சு
சித்தரெல்லாம்வெகுமுகமாய்ப்பாடினாரே. ௧௫௮

பாடினதோரிந்தமுறைபார்த்தோரெல்லாம்
பாசத்தில்விழுந்தார்களாரானென்றும்
தேடினதோர்நிறகுணத்தையறிவார்காண்பார்
சிவனங்கேகொலுவிருந்ததிறமுங்காண்பார்
கூடினதோர்சித்தர்வந்துமுனிவர்காண்பார்
குருமுனியுஞ்சித்தர்களுமுவந்துகாண்பார்
கூடினரேதாபானத்தால்மேலேயேறக்
குருடரல்லோதெரியாமற்கெடுத்திட்டாரே ௧௫௯

கொடுத்தார்கள்மாயைதனைமுன்னேவிட்டுக்
கிரிகையென்றவட்சரங்களீரெட்டுஞ்செய்து
அடுத்தார்களாணவத்தால்சையோகஞ்செய்து
ஆருக்குஞ்சிமேருடியென்றுபேருமிட்டு
அடுத்தார்கள்மறந்ததனைக்காமியத்தினாலே
மாண்டார்களுலகத்தில்வாமியெல்லாம்
படுத்தார்கள்பூரணத்துக்கென்றெண்ணாத
பாழாச்சுமுத்தியப்பாருபாரே. ௧௬௰

தேவியிடபெருமை இவனைப்பூசித்தவர்கள்பெருமை

செனனமரணமில்லை.

முத்தியாம்வாமத்திற்கூடினோர்க்கு
மூவெழுத்தாமுறையுமோட்சமெய்தும்
பத்தியாயிதையல்லோபிராணயமென்று
பாடினார்நாதாக்கள்பரப்பாய்மெத்த
எத்தியாயறியார்கள்நரகில்வீழ்ந்தார்
இந்தவகையறிந்தோர்கள்பாதஞ்சேர்ந்தார்
தொத்தியாம்பரவசத்தைத்தொட்டேனென்பார்
தொத்தினவன்தவமுடையசிவயோகியாமே ௧௬௧

தவயோகிசித்தருக்காமிந்தபூசைச்
சாதகமாய்ச்சைவருக்காமிந்தபூசைப்
புகயோகிஞானிகட்காமிந்தபூசைப்
பொரியுடையவேதியர்க்காமிந்தபூசை
நவயோகிமவுனியர்க்காமிந்தபூசை
நாதாக்கள்பத்தருக்காமிந்தபூசை
அவயோகிக்காகாதாமிந்தபூசை
யறிவுடையோர்செய்கின்றபூசைதானே கசுஉ

பூசைசெய்துடானத்தைப்பொசித்தோர்க்கெல்லாம்
பிறப்பிறப்புயிரண்டுமில்லையெந்தநாளும்
ஆசைசெய்தமாமாய்கையகலப்போகும்
அஷ்டமாசித்தியெல்லாமமகிழப்போற்றும்
பாசைசெய்தபதினெட்டுந்துலகிப்போகும்
பார்பரையுமபரனுமங்கேபட்சமாகும
மூசைசெய்தமருந்தெல்லாம்வேதையாகும்
மூச்சடங்கும்பேச்சடங்கும்முத்தனுமே கசுங

{ போகருக்கு கருவூராரும் கொங்கணரும் மண்டபத்தி
லிருந்த கற்சிலையை கொண்டுபோய் விட்டதில் அவ்
விடத்தில்நடந்த சங்கதி விபரமறியும்படி. }

முத்தனும்போகருக்குப்பெண்தான்றேடி
மூவுலகும்பார்த்தோடிக்காண்கிலாமல்
சித்தனுங்கொங்கணரும்யானுங்கூடிச்
செய்வதென்னகன்னியரைக்கண்டிலோமே
மேய்த்திநாம்யாவையிலேயங்கேபார்ப்போம்
வழிபாச்சுதென்றுசொல்லிவாடித்தம்மில்
உத்தமமண்டபததில்சிலைதானென்று
வருப்படியானையருக்குஅழையென்றாரே. கசுச

அழையென்று அண்ணல்சொல்லத்திறம்பார்த்தீரோ
வழைக்கிறேன்மண்டபத்திலையாவாரும்
மலையென்றுகற்சிலையைவாவாவென்றேன்
அடுத்துவாக்கூட்டிப்போய்குருமுன்விட்டோம்
விளையென்றமோகத்தாலபோகநாயன்
மேவியேதோய்ந்தகற்பின்விகற்பமென்றே
வளைவன்றிக்குளைவளையன்றிவார்த்தையன்றி
வந்திந்தமார்க்கமென்னகண்டிலோமோ, கசுரு

கண்டிலேனென்றகுருவார்த்தைகேட்டுக்
கன்னியரைமுவுலகுந்தேடிக்காணேம்

அண்டிலோமண்டபத்திற்சிலைதானென்று
அழகுமெத்தவமைழயென்றுகொங்கணர்தான்சொன்னார்
மண்டபத்தில்நின்றுவந்தசிலையைப்பார்த்து
வாவாநீயென்றுசொல்லச்சிலைதானேகி
வண்டிலருங்குழலசையநடந்துயிங்கே
வந்ததினால்கூட்டியங்கேவந்திட்டோமே. ௱௬௬

வந்திட்டோமென்றுசொல்லி பபதத்தில்வீழ்ந்து
மதிமயங்கியெங்களுக்குமழைத்ததங்கே
இத்திட்டோமடியேனகளறிவில்லாம
லிடும்புசெய்தோம்பொறுத்தருளுமெந்தன்கோவே
அறிந்திட்டோங்கற்சிலையைப்பெண்ணென்றிங்கே
யழைத்துவந்திருங்கள்திறமார்க்குண்டாகும்
மிறிந்திட்டசித்தரிடதிறமோகொஞ்ச
மெண்மக்காள்சாபத்தாலதிகமாச்சே ௱௬௭

அதிதமுற்றசித்தரென்றுமுத்தமிட்டு
அரகராமூலவர்க்கத்தகடுமுண்டோ
அதிதமென்றசிலமபொலியைக்கண்டோரில்லை
யாச்சரியங்கொங்கணருமநீருங்கண்டீர்
அதிதமென்றகயிலாயவாக்கத்துள்ளே
யாதிகுருகாலாங்கியையராகும்
அதிதமென்றதூரியத்திலிருந்துக்கொண்டு
ஆடினாவரிடத்தேசொல்லென்றாரே. ௱௬௮

சொல்லென்றுஐயர்சொல்லக்குளிகைபோட்டுச்
சிலம்பருமஅம்பலத்திற்ஷிணத்தில்வந்தோம்
மல்லன்றுகாலாங்கியாரென்றுகேட்டார்
அடிதொழுதுமூலவர்க்கத்தடியாரென்றோம்
கல்லென்றபெண்ணைநீரழைத்துப்போனீர்
கண்டிலோமுங்களிடதீக்ஷணீகம்
மல்லென்றவுலகத்துப்பெரியோரெல்லா
மருந்தவசுபுரிந்திட்டுஅருள்காணாரே. ௱௬௯

அருளாலேயைம்பொறியைப்பத்திக்கொண்டு
அப்பனேபொருள்காணவேண்டுங்கண்டாய்
அருளாலேநினைத்தபொருளென்றேயுன்னி
யாசையென்றபாம்பைநன்றாயடித்தடைத்து
அருளாலேசமயமெல்லாமகலத்தள்ளி
யாகாதிரோபவத்தையகத்தித்தள்ளி

அருளாலேதத்துவத்தைக்கண்டுதள்ளி
யம்பரமாய்வாய்வாழ்ந்திருப்பாரறிவுள்ளோரே. ௧௭௰

சாரயத்தில்-லிங்கச்செந்தூரம்.

அறிவாகும்லிங்கத்தைக்கட்டச்சொல்வே
ணச்சரியம்பெரிதல்லவேதைமார்க்கம
பிறிவாகுங்குப்பிலிங்கம்பலந்தானொன்று
பெருக்கவேகொண்டுவந்துசட்டிக்குள்ளே
பறிவுள்ளலிங்கத்தைக்கிளியாய்க்கட்டிப்
பாச்சந்தசட்டிக்குள்நடுவேவைத்து
நெறியாகச்சுன்னத்தூளிட்டுவைத்து
நேராகமேலுமந்தப்பொடியைக்கட்டே. ௧௭௧

காட்டியேசாரயம்நிறம்பவிட்டு
நலமாகத்தீயினில்வேகாகல்வன்னி
யூட்டியேசாராயம்வற்றினுக்கா
லுத்தமனேலிங்கமதுமணிபோலாகும்
மூட்டியேநாகமதுமூன்றுக்கொன்று
மூட்டடாசாதிலிங்கச்செந்தூரத்தை
பாட்டியேவுருக்கியதைக்காரமிட்டு
மாற்றெட்டாமுந்திமுந்தியிதனைப்பாரே. ௧௭௨

பாரப்பாசவ்வீரவைப்புக்கேளு
பாங்கானகண்டருமோகளஞ்சிபத்து
நேரப்பாவன்பதுகளஞ்சிச்சாரம்
நேராகாற்பதுகளஞ்சிதானும்
ஆரப்பாவெடியுப்புக்களஞ்சிருதனு
மன்னபேதிக்களஞ்சிபதினேந்தாகும்
சேரப்பாசமுஞ்சிபத்துசீனக்காரம்
சேரவொன்றாய்த்தூளாக்கிக்குப்தக்கேத்தே. ௧௭௩

ஏத்திநன்றாய்முத்தீயுச்சாமமூன்று
யெறித்திடாயாமனேயையின்பமாகப்
போத்திநன்றாய்மதுவோடுசுத்திறும்பப்
பூசித்துக்குப்பிதனையிறக்கிவைத்து
ஆத்திநன்றாயுடைத்துப்பார்வயிரம்போல
வப்பனேபளபளக்குங்குழலில்வைத்து
சாத்தியேதுறைகளெல்லாமிதனைச்சோத்து
சாதகமாய்ப்பாாத்திடவேகாணுங்காணே ௧௭௪

புத்திகூறல் அஸ்டகற்மத்துக்குபலகை திசைமணிகள்

ஆசனங்கள்.

காணித்தக்கலியுகத்தின்மகிமைகேளு
கற்றவரைத்தூஷித்துத்தான்றானென்பான்
பூணித்தப்பெண்ணாணவலையிற்சிக்கிப்
புலையர்முதல்மறையோரைப்புணர்ச்சிசெய்து
வீணித்தவாணவத்தால்கள்ளையுண்டு
மேல்வரப்புக்கீழ்வரப்புயிரண்டுமற்று
ஆனத்தசொல்லற்றுத்தெருக்கடோறு
வண்மையென்றபொருளெல்லாந்திறந்திட்டாரே. ௧௭௫

திறந்துவிட்டாருலகரென்றுசித்தரெல்லாந்
தோற்றுமனுருமாத்துக்கொண்டுபோனார்
கரந்திட்டார்மதியமூர்த்தமுண்ணவேண்டிக்
கயிலையிலுமலைமேதாறுஞ்சாதிசெய்தார்
இறந்திட்டார்ருலகத்தைச்சார்ந்தோரெல்லா
மிறவாமலூர்தோறுமேறினார்கள்
பறிந்திட்டாரிதையறிந்துஞானம்பார்த்துப்
பதியில்நின்றுஅஸ்டகஸ்டம்பகரக்கேளே ௧௭௬

கேளப்பாநமசிவாயமென்றமார்க்கங்
கெடியானதம்பனமாம்பலகையெல்லாம்
நாளப்பாதிசைக்கண்ணித்தாமரைக்காய்மாலை
நலமானவாசனந்தான்புலித்தோலாகும்
வேளப்பாசிவாயநமோகனமேயாகும்
வெள்ளறலிகுருபொதிகையிள்குமாலை
சூளப்பாவாசனந்தான்கலைத்தோலாகுஞ்
சொற்பெரியசிவாயநமமாரணமுமாமே ௧௭௭

ஆமப்பாபலகையதுயத்தியாகு
மக்கினியான்றிசைநாவிமணிதானாகும்
வேமப்பாபலாசனங்காண்மான்றோலாகும்
விள்ளரிதுவயநமசியுச்சாடனமுமாகும்
போமப்பாபலகைபலர்வாயுமூலை
போற்சிந்திபரமாசனமுமாகும்
காமப்பாசிவவிவத்துவேஷணமுமாகும்
கன்றானகூவிவிளப்பலகைகேளே. ௧௭௮

கேளப்பாதிசைகிழக்குருத்திராக்ஷந்
கெடியானபுலிவாய்த்தோலாசனமுமாகும்

நாளப்பாமயசிவனந்தன்னைச்சொல்ல
நலமாகயழைப்புவித்தைவெள்ளைநாணல்
கேளப்பாபடிகமணித்திசையீசான்யம்
கொள்ளுகிறமாவுரித்தோலசனமுமாகும்
வாளப்பாசியமவனபேதனமுமாகும்
மைந்தனேபலகைதில்லையெட்டிவித்தே. கஎக

ஏந்திரத்தில் கருவுபூசுகிறவிபரம்

வித்தானதிசைகேளுதெற்கேயாகும்
வீற்றிருக்குமாசனந்தான்கம்பிளியுமாகும்
பத்தானநவசியமவித்வேஷணையாம்
பாதிரியின்மாத்திறற்பலகையாகும்
சத்தானவருணதிசைச்சங்குமாலைச்
சாதகமாய்வேங்கைத்தோலாசனமுமாகும்
சித்தாகயிப்படியேயஷடசற்பம்பார்த்துச்
சித்தித்தால்நினைத்தபடிசிருக்குங்காணே கஅ0

சுருக்காகயிருக்கவென்றால்கருவைக்கேளு
சொல்லையிலேசக்கரத்தைவரைந்துக்கொண்டு
மருக்காகவசம்புள்ளிக்கடுகுகாயம்
வாகானவெந்தயமுங்கடுகாலாட்டி
குருக்காகயேந்திரத்திற்றடவிநன்றாய்க்
குமறவேயனல்காட்டக்குப்பென்றுவேகும்
குருக்காகச்சிவந்துமேதற்கித்தாலுஞ்
சண்ணுமடாகற்மவினைசண்ணுந்தாதே கஅக

பூரணாதிலேகியம்

தானென்றகோரக்கர்மூலிகூட்டிச்
சாதகமாய்மூன்றுண்டுகற்பமவாங்கி
ஏனென்றச்சுபையெல்லாம்பாவிற்போட்டு
விபரமுடன்பிழிந்துநன்றாயிருக்குத்கொண்டு
பானென்றவெல்லமதிற்பாதிபோட்டுப்
பண்பாகக்கரைத்தந்தப்பாகிற்சேர்த்து
மானென்றசெபதேசமன்னபேதி
வாகானயரத்தையொடுமதுராங்கூட்டே. கஅஉ

கூட்டியொன்றாயிளவறுப்பாய்வறுத்துவாங்கிக்
குமறவேதூளாக்கிப்பாகிற்சேர்த்து
ஆட்டியேகஞ்சாவைக்கூடக்சேர்த்து
அப்பனேமயினம்போலாக்கிவாங்கி

நீட்டியேதேவிலயைத்தான்பூசைசெய்து
    நினைவறிந்துசடமிருந்துபிலமுங்கண்டு
நாட்டியேவிரைமேதத்தான்பிரமாணத்தில்
    நலமாகத்தேனிலுண்டுகொளுங்காணே. (௧௮௩)

சிறீதேவிசெங்கழுநீர்வசியம்மயமதமந்தைசமூலம்வசியம்.

(அஷ்டகர்மத்துக்குமூலி-௬௰௪-ஒவ்வொன்றுக்கு-ஆ௩-அ.)

காணவேயஷ்டகற்பமூலிசொல்வேன்
    கவிந்துமேவசிட்டமெரடுமோரணமோயெட்டு
பூணவேவொவ்வொன்றுக்கெட்டுமூலி
    போக்கோடேவொவ்வொன்றுய்ப்புகலக்கேளு
ஊணவேயறுபத்துநாலுமூலி
    யுடைத்ததிலேவவித்துக்குண்மையாகத்
தோணவேசிறீதேவிச்செங்கழுநீர்வாங்கச
    சூட்டுகிறேன்மந்திரத்தைச்சூட்டுறேனே. (௱அ௪)

சூட்டுறேன்ஓம்சிறிலெட்சுமிதேவியாவாயென்று
    சொலலியேருருபதத்தைநினைவால்நீயும்
ஆட்டியேயாணிவேற்பிடுங்கிவந்து
    அரவிந்தநூல்கொண்டுதெரியாமற்சுத்தி
ராட்டியேகமலநெய்யில்மையக்கூட்டி
    நலமாகத்திலதமிடவயமாச்சு
நீட்டியேமதமத்தைச்சமூலமவாக்கி
    நிசமானமந்திரத்லைவசியஞ்செய்யே. (௱அ௫)

வசியஞ்செய்மாதாவேசிநகணிவருணி
    மரதாவோநமகிரியம்பவேவசிய
வசிகரஞ்செய்பூகாயும்பருவம்நோக்கி
    மைந்தனேசமூலமெல்லாம்வாங்கிவந்து
வசிகரஞ்செய்நீழலுலர்த்தித்தயிலமவாங்கி
    மைந்தனேதேவிக்குப்பூசைசெய்து
வசிகரஞ்செய்தேவியருள்மோகினியாகும்
    வணங்கிநன்றுய்ச்சிமிளிலேயடைத்துவைவே. (௧௨௬

வெள்ளெருக்கன்வேர்வசியம்.

அடைத்ததற்குவகைகேளுபலந்தான்துக்கு
    அதில்பாதிகற்பூரங்கூடகூட்டிப்
பிடைத்தபுருவமத்திலேதிலதந்தீட்டப்
    பிரியமுடனிதம்மெண்கள்புணருவராகள்

விடைத்தவொருவெள்ளெருக்குசமூலம்வாங்கி
வெள்ளைத்தாமரைநூலாலருக்கநாளில்
அடைத்துவைத்துத்தேங்காயுந்தட்டிபேழுங்
காங்கீங்கூநங்கணபதியையென்றுசொலமேல (௧௮௭)

சொல்லேலியேசெவ்வாயில்பிடுங்கிவந்து
சூட்டுகோரேசனைகுங்குவங்கற்பூரம்
சொல்லிலேயோட்டிநன்றாயதிலகந்தீட்டள
கெக்ஷணத்திலேதிரிலோகம்வசியமாகும்
சில்விவிஷ்ணுகிராந்திவேறைகதீபமிட்டு
சிறப்பாகவெயத்திச்சுரமூலநமேகரு
சல்லிமேழுசிறிசொன்னவசியக
தாவென்றுகுளிசமிடவ்வசியமாமே (௧௮௮)

## கருஞ்சம்புசமூலம்வசியம்

ஆமப்பாகருஞ்சபுசமூலம்வாங்கி
யப்பனேகன்னிநூல்காப்புகட்டி
ஓமப்பாசோடசவுபசாரஞ்செய்து
வுநேற்றுஓம்மையுங்கிலியுஞ்சவ்வும்
சாமளருபிசாம்பவசாமபவிசிரியுங்கிலியும்
சாற்றுவாயாயிரத்தெட்டுநநாள்மூனலல்
காமப்பாசெபித்துவேற்பிடுங்கிவந்து
நன்றாகநிழலுலத்திதயிலமவாங்கே. (௧௮௯)

## வெண்குன்றிமூலம்வசியம்

வாங்கியேதிலதமிடவசியமாகும்
வாகானவெண்குன்றிமூலமப்பா
தாங்கியஅமாவாசைதன்னிறசெய்து
சாதநமாய்மந்திரம்வம்யம்மமவசவசவச
பாங்கியேமிருகமதைமிருகவசிமிஓம
பதிந்துவேர்வாயதனிலடக்கிக்கொண்டு
தேங்கியேமிருகமதைவளர்க்கும்போது
செயமாகவசிகரமாய்வருகுமபாரே (௧௯௰)

## நாகமல்லிமூலம்-தேவவசியம்

பாரப்பநாகமல்லிசமூலம்வாங்கி
பாடுகிறேன்மந்திரதிரப்கான்பண்பாய்மக்காள்
சேரப்பாதேவபிறங்கிமூலிதன்னை
செயசெயஓமகிரியுமபகவதாவென்றுதியானஞ்செய்து
ஆரப்பாபிடுங்கிவந்துநிழலுலர்த்தி
யப்பனேபொடியாக்கித்திரியிலூட்டி

பேரப்பாகாராவின்னெய்யெரித்துமையைப்
 போட்டிடவேதேவரெல்லாயவசியமாமே. ௧௯௧

நாயுருவிமூலம்

ஆமப்பாநாயுருவிமூலந்தன்னை
 யப்பனேவாங்குதற்குவெள்ளிநன்று
ஓமப்பாகாப்பிட்டுமறுவெள்ளிக்கு
 வுருவேற்றுஓம்சவ்வுய ஐயுமென்று
தாமப்பாவேற்பிடுங்கிக்குளிசமாடித்
 தரித்திடவேமகத்தானவசியமாகும்
போமப்பாவசியமெட்டுமூலிசொன்னேன்
 பொங்கிவளர்மோகனத்தைப்பிரிக்கின்றேனே. ௧௯௨

சுக்கிலமோகனம் கஞ்சாமூலம்

பிரிச்சாகள்சுக்லத்திலனந்தங்கோடி
 பெண்களுக்குயிட்டிடவேமோகனமுமாகும்
அரியாதமூலத்தைவேர்ஸவியாலாட்டி
 யப்பனேகொடுத்திடமோகனமுமாகும்
நெரியாகக்கஞ்சாவைப்பாலவோட்டில்
 நேராகமணலிட்டுப்பயிராய்ச்செய்து
குறியாகச்சடைவிழுந்துபருவம்பார்த்துக்
 கொடிதலைழயைபபிடுங்கியொக்கக்கருக்கிடாயே. ௧௯௩

வெள்ளைவதனத்திபெரியமருளுமத்தை

கருக்கியே திலமிடச்சொன்னேன்யோகங்
 காணுவெள்ளைவதனத்திலனந்தந்தொந்தம்
செருக்கியேசொன்னமோகனமுமாகுந்
 திடமாகப்பத்திரத்தைச்செலத்திற்போட்டு
பெருக்கியேசமூத்திடவேமோகனமுமாகும்
 பெரியமருளுமத்தைபேசக்கேளு
அருக்கியேமத்தமத்தமமத்திஓம்மாங்
 கிலிசத்தியெனமோகினிதாவென்னே ௧௯௪

மத்தங்காய்

மோகியேமருளுமத்தைமோகிதன்னை
 மூண்டுவருவாநீயென்றுவாங்கித்
தாகியேகருக்கியதையங்கநீரில
 சாதகமாய்த்திலதமிடதேவர்மோகம்
ஆகியேமத்தங்காய்நரியெட்டுள்ளே
 யப்பனேபயிர்செய்துயேழாநாளில்

பாக்கியேகுளச்சுக்குள்ளடைத்துங்கொண்டு
பதனஞ்செய்மந்திரத்தைசசொல்லக்கேளே (௧௬௫)

(ஆலவிழுது)

கேளப்பாதுங்கமாமிருங்கிமோகி
ரட்சிப்பாயென்றுசொல்லிவாயில்விட்டு
நாளப்பாபேசிடவேமிருகமோகம
நலமானஆல்விழுதையருக்கநாளில்
வாளப்பாமகாமோகிமாயாமோகி
மகாரக மாகிசெயசெயவென்றேநீ
தாளப்பாவொருவெட்டால்கையிலேந்திச்
சாதகமாய்விஷ்டையிலேபஞ்சுபஞ்செய்யே (௧௬௬)

(நன்னாரிசமூலம் ஆகமூலி.)

பற்பமிகைத்திலதவிடாரசமோகம்
பண்பாகநன்னாரிவாங்கக்கேளு
சொற்பமிடுசிவிசிவிசெனனமோகி
சோதிசெகன்மோகியெனறுசமூலம்வாங்கி
கிற்பமதாய்லட்சமுருவோதிக்கொண்டு
கினைவாகவம்பரத்தில்தியானஞ்செய்து
அற்பமென்றுநினையாமல்குளிசமாட்டி
யப்பனே கூணமோகமாகுங்காணே (௧௬௭)

காணப்பாகர்ப்பூரந்திரியல்வைத்துக்
காரெள்ளுத்தயிலத்திலமையெடுத்துவாங்கி
பூணப்பாதிலதமிட்டுத்தியானங்கேளு
புகழாகஓம்ஓம்ஓமென்றுசொல்லி
யூணப்பாபுவியிலுள்ளபுருஷரெல்லாம்
வோகோகோமோகனமாமுண்மையுண்மை
சோணப்பாமோகனந்தாணட்டுஞ்சொன்னேஞ்
சொல்லுகிறேன்தம்பனத்தின்மூலிபாரே (௧௬௮)

கட்டுகொடித்தம்பனம்

மூலியென்றகட்டுகொடிதன்னைவாங்கி
மூலமெண்றமந்திரத்தைமுன்னேசொல்லு
நீலியெனறமிப்பெய்தண்ணீர்விட்டு
நெயயிலேமூலிகையுமவனையமாடிக்
கோலியென்றபஞ்சாட்சரமுருவுமேற்றிக்
குவலயத்தோர்பிரமிக்கவுச்சரித்து
காலியென்று ஆசனத்தின்கீழ்போட்டுக்
காலங்கமலதன்னிடுவிருக்லாமேன ௧௬௯

பாலக்குறண்டி

இருக்கமலக்தநெய்யில்தீபமேற்றி
வென்மகனேமழைபொழியில்நனையாதப்பா
பெருக்கமிதையிலையரைத்துக்கிலத்திலுட்டப்
பிதறுமல்திரண்டுகெட்டித்தயிர்போல்துஞ்சும்
நெருக்கலாம்தின்றுவிடுபசித்திடாது
செல்லுதம்பமூலியென்றுசெப்புவாகள்
அருக்கலாம்பால்குறண்டியுலவுநாளி
லப்பனேவுபசரித்துமந்திரமோதே. (உ௱)

ஓதியடாகிலகண்விசைவிசையென்று
வுய்யஅந்திரத்திலேகடகடவென்று
வாதாடிசேவித்தாலம்பாவிலாட்டு
மைந்தனேதுவாலையிடவெட்டறுது
மாதடாவிரையரைத்துப்பாலிற்கொள்ள
மைந்தனேசுக்கிலதம்பனமுமாகும்
போதடாப்பட்டைதனைச்சமூலம்வாங்கிப
புகழாகமந்திரத்தையுறைக்கிறேனே. (உ௱க)

உரைக்கிறேன்சலமந்தம்பிளியேகாளி
ஒங்காரகாளிநமாவென்றுபோற்றி
நிறைக்கிறேனிழலுலத்தித்தூளாயாட்டி
நேராகக்குருவைநெல்லுமாவிடித்துவாங்கி
இறைக்கிறதோர்சலக்கழிச்சல்தின்றூய்மாளும்
என்மகனேகிராணியென்றதாறுபாறும்
உரைக்கிறேனீர்முள்ளிசமூலந்தன்னில்
வுத்தமனேமத்திரத்தைச்சேவிப்பாயே. (உ௱உ)

நீர்முள்ளிவேர்.

சேவிக்குமந்திரந்தான்வாலைமுகநாதர்
செடவிடுமுபாயமொக்கச்சிலதம்பமாகும்
ஆவிக்குச்சேவித்தேபிடுங்குகிவேரை
அரைத்துண்ணவிஷங்களெல்லாந்தம்பித்துப்போகும்
பாவிக்குவிந்துஷதம்பனமுமாகும்
பாவையருக்கேகற்றதொருபாணமாகும்
தாவிக்குள்பத்திரத்தையாட்டிக்கொண்டு
தம்பனமாஞ்கிக்சுலமுஞ்சத்தியந்தானே உ௱௩)

நத்தைச்சூரிசமூலம்

சத்திமாய்ச்சொல்லுகிறேனத்தைச்சூரி
தாரணிக்குள்சாபமில்லைபெரியோர்கொள்வார்

சித்தியென்றவேட்டுமிதற்குள்ளேயாச்சு
   செகத்திலுள்ளோரிதின்பெருமைதிறமோகாணார்
சத்தியென்றசூரிதனைத்தினமுங்கொண்டால்
   சொல்லவொண்ணுஆச்சரியமிருக்குந்தேகம்
சித்தியென்றஅருக்கனிலேகாப்புக்கட்டி
   செபிக்கிறதோர்மந்திரத்தைச்சூட்டுறேனே. (உ௱ச)

சூட்டுறேன்ஓம்ஓம்வச்சிரரூபிக்சூச்
   சூரிக்கமானவிரிசுவாகாவென்று
நாட்டுகிறேன்சமூலமெல்லாம்பிடுங்கிவந்து
   நன்றாகச்சூரணித்துச்சீனிநோாய்
ஊட்டுகிறேன்கலந்துகொண்டுமண்டலந்தானுண்டால்
   ஒருநூற்றியிருபதுநாளொருநாளாகும்
மாட்டுறேன்பத்திரத்தை வாயிலிட்டு
   வப்பனேகலக்கடித்துநொறுக்கலாமே. (உ௱கு)

நொறுக்கியதோர்விரையறைத்துத்தினமுங்கொண்டால்
   நீடூழிபரியந்தமிருந்துவாழ்வார்
நொறுக்கியதோர்மாய்கையென்றதொழிலேயெல்லாம்
   நொறுக்குமிதுபின்னுமொருகற்பமேது
நொறுக்கியதோர்சத்துருவும்நோய்கள்தானும்
   நொறுங்கிவிழுந்தோடுமதின்பேர்சொன்னாலும்
நொறுக்கியதோரிதின்வேரைச்சிரசில்வைக்க
   நுவலரியதேவதையும்போற்றும்பாரே. (உ௱எ)

## சத்திச்சாரணைசமூலம்.

போற்றியேசத்திச்சாரணையைவாங்கிப்
   புகழான சங்கிராமன்தன்னிற்சென்று
சாற்றியேகாப்பிட்டுமந்திரத்தைச்செல்லு
   சார்ஓம்பார்வதிபரமானந்தி
மாற்றியேகமலவல்லிசத்தமாதா
   மாயியென்றுசமூலமெல்லாமவாங்கிக்கொண்டு
நேற்றியாய்த்தூளாட்டித்தினமுங்கொண்டால்
   நெற்செய்தவாயுதங்கள்தைத்திடாதே. (உ௱எ)

## தையாதிமூலம்.

தையாதிமூலத்தையெருமைப்பாலில்
   தானுண்ணத்தோஷந்தான்கனறுபோகும்
பொய்காதபூமிசத்தகரையைவாங்கப்
   பூமிக்குள்வெட்டியந்தமூலங்கண்டால்

ஸமயாதகரிமுகர்க்குப்பூசைசெய்து
மந்திருபதாசேடிபார்த்தருபி
ஏயாதோமமாவென்றுவாங்கிவந்து
இயலாவின்பாலினில்கொள்ளுகொள்ளே (உஅ

குதிரைவாற்புல்லு

கொள்ளவேசுக்கிலத்தைமேலேயேற்றுங்
காடிபெண்கள்புணாந்தாலுந்தம்பித்துப்போகும்
தள்ளவே ஆவினெய்யில்பகர்ந்துகொள்ளத்
தசையில்லாம நாலும்புருக்கிமேகந்தீரும்
விள்ளவேகுதிரைவால்புல்லுவாங்க
வீறுபெற்றமந்திரத்தைச்சொல்லக்கேளு
தள்ளவேசடியசடாயதுமசடாய்
சாற்றியேவடவேரைவெட்டிவாங்கே உஙு

உச்சாடனம்பேய் மிரட்டி

வெட்டியேபலிகொடுத்துக்குளிசமாடி
வெடிநாலுகெற்பமெல்லாந்தம்பித்துப்போகும்
கட்டியேதமபனத்தின்மூலியெட்டுச்
சூட்டினேனுச்சாடனமூலிகேளு
வெட்டியேகம்பிரட்டியருக்கநாளில்
விபரமுடன்காப்பிட்டுப்பூசைசெய்து
மெட்டியேமந்திரத்தைச்சொல்லக்கேளு
மேவியேவருவருசாடியென்றுதூவே உய

மான்செவிக்கள்ளி

தூவிடவேமிருகமுதல்துஷடரெல்லாம்
சூனியங்கள்விட்டோடுந்தோஷமில்லை
மாவிடவேமான்செவிக்கள்ளிவாங்கி
மைந்தனேகந்தபுஷபதூபதீபம்
தேவிடவேவுபசரித்துக்காப்புக்கட்டிச்
செப்புக்குள்மந்திரந்தான்கருணிக்கருணி
ஓவிடவேயாங்காரசத்திதாயி
யுட்சாடியுட்சாடியென்றுவோதே உகக

அரி முறிவேர்

ஓதயிலேயத்துடனேதிடலைச்சாம்பல்
ஒன்றாகக்கிளிகட்டியுரைக்கக்கேளு
வாதிடவேசத்துருவின்வாசல்கீழே
வைத்திடவுச்சாடனமாம்மைந்தாகேளு
தாதிடவேநாவடக்கம்வாயிலிட்டால்
தாண்டிவின்ற அரிமுறிவேர்வாங்கக்கேளு

ஓதிடவேவோங்காரரூபிபூத
உச்சடாய்உச்சடாய்வாவாவென்னே உகஉ

குழற்கண்டிச மூலம்

சபுரயுவெனவேோதியேவோரூமற்
சாதகமாய்ப்பிடுங்கியதைவெருக்கம்பஞ்சில்
அடாயுவென்றகுழற்கண்டிவாங்குதற்கு
அப்பனேதிங்கள்தனிறகாப்புக்கட்டி
விடாயென்னத்திரியாக்கிநிம்பநெய்யில்
விளக்கேற்றிவாப்பூதவுச்சாடனமாம்
வடாயிவென்றமறுதிங்கள்வாங்கும்போது
மைந்தனேமந்திரத்தைமொழிந்திடாயே உகஎ

கண்டக்கத்திரிசமூலல்

மொழிந்திடவேசொரசொரிநியகெட்டாதேமு
முயங்கிலியென்றுசொல்லிச்சமூலம்வாங்கி
அழிந்திடவேயுலர்த்திநன்றாய்த்தூளாயாட்டி
யதற்கேற்றபொடிகூட்டிச்சமனாய்ச்சேர்த்து
பழிமாதகிருதனத்தில்பூசினுக்கால்
பளிச்சென்றுச்சாடனமாம்பார்க்குமுன்னே
வெள்கண்டங்கத்திரிக்கொட்டைத்தாளில்
உத்தமனேகன்னிநூல்காப்புக்கட்டே உகஅ

கட்டியேவராகமொன்று பலிகொடுத்து
கார்த்திகையிநன்றைக்குப் பூசைசெய்து
வெட்டியேஉம்உம் தும்தும்என்று
பூராயநமராகஉங்சாயஉச்சாடாவென்று
வெட்டியேமூலவகைவெட்டுண்டோர்கள்
வீரப்பல்லுடன்கூட்டிகிளித்தாண்கட்டிக்
கொட்டியேகுழல்வாங்கிக்கொட்டில்லைக்கக்
கோவுக்குச்சாடனமாம்கூர்ந்துபாரே (உகசு)

(தேள்கொடுக்குவேர்)

பாரப்பாதேள்கொடுக்குவடவேர்வாங்கப்
பாடுகிறேன்மந்திரம்சிவ்வுமென்று
போப்பாசேவித்தேன்பச்சையோந்திப்
பித்துடனேசேர்த்தரைத்துவிஷத்துக்கெல்லாம்
வாப்பாகண்ணிலிடவிஷமுச்சாடிக்கும்
மைந்தனேவெண்மணங்கறந்தைவர்க்க

ஆரப்பாஅராஅராஅரிஅரவென்று
அப்பனேகமலகிழலுலர்த்திடாயே உகசு

(கொட்டைக் கறந்தை)

உலர்த்தியேதூளாக்கிவைத்துக்கொண்டு
உத்தமனேவென்னீரில்வெருகடிதான்கொள்ளு
அலர்த்தியேநோயெல்லாமுச்சாடிக்கும்
அப்பனேகொட்டைக்கலந்தைவிறங்க
நலர்த்தியேமந்தரெருசுவசுவாகாய்
நலபோருசுவாயர்நீச்சுநன்று
கிலர்த்தியேயென்றுசொல்லிஉருத்தானேகி
கிழலுலர்த்திக்கல்வத்தில்தூளாயாட்டே உகஎ

(வித்திவேஷம்கறுத்தகாக்சணன்)

ஆட்டியேபழச்சாற்றிலுண்டபேர்க்கு
ஆசையெனிமோகவுச்சாடனமுமாகும்
நாட்டியேவுச்சாடனத்தின்மூலிசொன்னேன்
நவமானவெடிநயனம்புலிதான்கேளு
காட்டிலேகறுத்தகாக்கணந்தான்வாங்கக்
கரும்பாம்புஆவணத்திலாடும்போது
மாட்டியேமந்திரவித்தியேஷாகாயம்
மத்தாவித்துமோகினியேவாவாவென்னே உகஅ

வாவென்றுபிடுங்கியேகுளிசமாடி
மாகாளிதோட்டத்தல்புதைத்தபோது
கோவென்றராசதிதெட்சணையுமாகும்
கூறனவெள்ளைக்காக்கணத்தைவாங்கப்
பாவென்றவெட்சணயசுவாராவென்று
பசுவாகவென்றுபூரணத்தில்வாங்கு
தெவென்றதேவிதவேஷணையிமாகும்
சிவாஅருக்காள்திருகுகள்ளிவாஙகே உகசு

(திருகுகள்ளிவருகுகள்ளிவடவேர்மருகுகள்ளி)

திருகுகள்ளிதனித்துமேகாப்புக்கட்டி
சிறப்பாகக்கோழியொன்றுபலிதானூட்டி
சொருகுகள்ளியுருச்சோராசோரா
ராராசோராபூதவெட்சணயாவொன்று
வருகுகள்ளிவடவேரைகுளிசமாடில்
மைந்தனேபூதவுச்சாடமுமாகும்
மருகுகள்ளியானசங்கத்தாரிவாங்க
மைந்தனேசெவ்வாயிற்காப்புக்கட்டே உஉ0

(காட்டில்ஏரண்டம்வேர்)

கட்டியேசெம்மறிதான்பலியூட்டிக்
 கருவெள்ளிக்கிழமையிலேமந்திரங்கேளு
கொட்டிரத்தம்பயிரவிரெத்தசாமுண்டி
 கோனுவிதெட்சணிசுவாகாவென்று
வெட்டிவேர்கொண்டுவந்துகுளிசமாடி
 வீறுகத்தரிக்கவுச்சாடனமுமாகும்
அட்டியேகாட்டிலயேரண்டம்வாங்க
 ஆழவெட்டிகுழிநிரம்பத்தண்ணீர்வாரே ௨௨௧

(கீழ்க்காய்நெல்லி)

வார்த்ததற்குள்மந்திரங்களொன்றுயிர்த்து
 வானமுநிசோரிசருவபூதமென்று
பாதகர்க்குப்பசாசுயேகநாயாவென்று
 பருமூலம்வாங்கினன்றாய்க்குளிசமாடி
கோர்த்ததற்குக்கட்டவேபூதப்பிரேதம்
 கொத்தோடேயேவணயாங்கூர்ந்துகேளு
கார்த்ததற்குக்கிழ்க்காயிநெல்லிவாங்க
 காப்பிடுவாய்ப்புந்தியென்றகிழமைதானே ௨௨௨

புந்திவிட்டுகுருநாளில்மந்திரஞ்சொல்லிப்
 போக்கோடேதேங்காய்தானுடைத்துப்போற்றி
அத்திவிட்டுபூமிவிதெட்சணியேயாயி
 அஞ்சனமூலிசிவசகலதாயி
பந்திவிட்டுப்பரியசுவாகாவென்று
 பதறாமல்கருக்கியிந்தத்தேங்காய்நெய்யில்
வந்திவிட்டுமத்தித்துக்கையிற்போட
 மண்ணிலவைத்தபொருள்களவிசெட்சணையுமாமே ௨௨௩

(ஆடுதின்னாப்பாளைமண்டைஓடு)

ஆமப்பாஆடுதின்னாப்பாளைவாங்கி
 யப்பனேசனிவாரங்காப்புக்கட்டி
ஓமப்பாவறுகொன்றுதுள்ளுமறிவெட்டி
 வேதடாசர்பவிதெட்சணியேயென்று
சாமப்பாசற்வபிசாசந்தெரியச்சுவாகா
 சாத்திரமாய்க்கருக்கிச்சுதலைமண்டையோடு
வேமப்பாரெண்டையுந்தான்தூளாயாட்டி
 விபரமுடன்சட்டிக்குள்கருக்கிவையே ௨௨௪

(பூனைக்காலியிலைபாஷாணம்)

வைத்ததனைப்புந்துத்தேன்தன்னாலாட்டி
 வாகாகக்கரத்திலிடசற்வஞ்சனமுமாகும்

வைத்தித்னேப்பூனேக்காலிசுணையைவாங்கி
மாயெலியின்பாஷாணம்நேராயாட்டி
வைத்திதனையெதுமேலுந்தடவிநாக்கால்
வீமந்தனேயேமமென்றமாத்துமரகும்
வைத்திதனேகுஷ்டநோய்வந்துதானால்
வாகாகப்பதினெட்டுமேகுங்காணே ௨௨௫

காணப்பாவேளேக்குமூலியெட்டுங்
கர்ட்டினேனுககிரணமூலிகேளு
கோணப்பாதிருடருக்குஅருக்கநாளில்
கூட்டியேகாப்புகட்டிமந்திரங்கேளு
பூணப்பாமிருகாரிசென்மிதேசுவரி
புகழாகச்சுவாகாவென்றுபிடுங்கிவந்து
ஓணப்பாமோதிரம்போல்போட்டுநீயும்
ஓடிவருமிருகத்தைவாவாவென்னே ௨௨௬

ஆக்ருஷணம்வேளேஉள்ளொட்டிபிறவொட்டி
வாவென்றால்மிருகவாகருஷணமாகும்
மைந்தனேஉள்ளொட்டிபிறவொட்டிவாங்க
பாவென்றபவரணையில்காப்புக்கட்டி
பதினஞ்சும்பூசித்துவரவும்நாளில்
கோவென்றுபொங்கலிட்டுத்தூபதீபங்
குளிரவேவுபசரித்துவாமபூசை
தேவனென்றருக்கிடமும்வலிதானாட்டி
ஸ்ரீயுடையசுரோணிதத்தைச்சொல்லுறேனே ௨௨௭

சுரோணிதத்தில்போத்துநட்பாண்டகிருதம்
சுரோணிதமாம்வயத்திரத்தில்பொதிந்துவேரை
சுருட்டியேவிம்பநெய்யில்விளக்குயேற்றி
சுரோணிதநூல்சாமமொன்றெரிந்துதானால்
சொல்லியதோர்கன்னியர்தான்வந்துசேரும்
சுரோணிதமாமாதரங்கேயிருந்தாரென்று
கருதியாய்விளக்கெரிந்தவீட்டில்வைக்கும்
சுரோணிதஞ்சேர்நாட்பாண்டக்கிருகம்வாங்க
சோமதாரந்தனிலேமந்திரங்கேளே ௨௨௮

கேளப்பாபலிகொடுத்துச்றவரக்கிருஷணி
கெடியாகச்சுவாகாவென்றகிரிகிச்சுக்கொண்டு
வேலப்பாமிழலுலர்த்தித்தூளாயாட்டி
வெள்ளருக்கப்பஞ்சில்வைத்துவிளக்கையேற்றி
வாளப்பாவிளைத்தசெய்வமவாகனமுமேறி
வந்துநிற்குமுன்முன்னேமைந்தாபாரு

சூளப்பாயார்வந்துபார்த்தாலுந்தான்
தோற்றுமடாயாவருக்குந்தோற்றுந்தானே ௨௨௬

மேனிவேர்மூலிகைபிடுங்க அஷ்டமிசோதிவரில்

மறுஅஷ்டமியில்பிடுங்கவும்

தோற்றுமடாமேனியொன்றாய்த்தனித்துநின்றால்
சுத்திசெய்துபால்பொங்கலிட்டுநன்றாய்
ஏற்றுமடாவிசுவாமித்திரவாதசுவாகா
வென்றுசொல்லிவேர்வாயிலிட்டுக்கொண்டு
ஆற்றுமளாமிருகங்கள்தன்னைநோக்கி
யழைத்திடவேமிருகங்களாகருஷ்ணமூர்மே
மாற்றுமடாகலைக்கொள்ளிதன்னைக்கொண்டு
மந்திரஞ்சொல்ஆகிருஷணிகரியமாமே ௨௩௰

ஆமப்பாயிவைகளெல்லாந்தப்பாமற்றான்
அஷ்டமிநாள்சோதிவரில்தன்னிற்சொல்ல
வோமப்பாயிந்நாளில்தொட்டதெல்லாமாகும்
வுற்பன்மாய்ச்சித்தியாய்க்காப்புக்கட்டி
வேமப்பாமறுபக்கமஷ்டமியிற்சென்று
விள்ளுகிறேன்மந்திரத்தைவிரும்பக்கேளு
பாமப்பாபட்சப்பட்சஒம்றுபட்சபட்சத்தில்
பட்சராசாகருணிவாதத்வென்னே ௨௩௧

(சிறியாநங்கைசமூலம்)

வாதமென்றுசொல்லியேவேரைவாங்கி
மைந்தனேகுளிசமாடிச்சிரசில்வைத்து
வாதமென்றமன்னரைத்தான்காணும்போது
விரும்பியவர்சொன்னபடியாக்கிருஸ்ணமூடாகும்
பாதமென்றசிறியாநங்கைசமூலம்வாங்கிப்
பாடுகிறேன்பூசநாள்காப்புக்கட்டி
ஈதமென்றஉருமத்தில்வாங்கும்போது
யென்மகனேமூலமந்திரத்தைச்சொல்லே ௨௩௨

(அழுகண்ணிகாப்புகட்டுவது)

சொரல்லியேகருணீசற்சற்வமோகி
சூள்சற்வஆக்கிருஸ்ணிசுவாகாசுவாவென்று
வெள்ளியேசறவங்கிறிச்சுக்குளிசமாடி
விபரமூடன்வாயிலிட்டுஆராணலும்

வல்லியேகிருவாவென்றுதலையைச்சுத்த
வைத்ததுபோல்தலைசுத்தியாடுவார்கள்
செல்லியேஅழுகண்ணிவாங்கமைந்தா
செயமாகத்திரங்கள்நன்றுகாப்புக்கட்டே ௨௩௩

(எருக்கனூர்-பலி- வெள்ளைச்சாவல்)

கட்டுவதுஎருக்கனூர்வெள்ளைச்சாவல்
கருக்காகவேண்டுமென்றுபலிதனூட்டி
தெட்டுவதுமந்திரந்தான்சற்வமேறகி
சித்தமோகினிசற்வாக்கிருஷணிவாகொட
கொட்டுவதுசாம்பவிசுவாகாவென்று
கூறிட்டவேறுனகளஞ்சிக்குள்வைத்து
கெட்டுமேவாயிலிட்டுகினைத்துபெண்ணைத்
கிருபையுடன்வாவெனவேவருவாள்பாரே ௨௩௪

வருவதுமாத்திரமோசமூலங்கொண்டால்
மைந்தனேதிங்கள்ரெண்டில்வச்சிரதேகம்
பொருவதுதானுகும்கிகர்கூற்றனீடோ
பூதமொடுதேவர்முதல்பொருதாவோடும்
கருவதுதான்காமனும்வெருவியோடும்
காரண்டவாரிமுதல்மலைகளெல்லாம்
சொருவதுதான்சங்கட்டும்வேதைகோடி
சொல்லொணுவழுகண்ணிசூட்சந்தானே ௩௨௫

(பேதனங்கள் குக்கிடவேர்)

தானென்றஆகருஷணத்தைக்கேளு
சாற்றினேனெட்டுவகைதப்பொன்றில்லை
ஆனென்றபேதனமாமூலிதன்னை
யறைகிறேன்குக்கிடத்தின்வேரைவாங்க
வானென்றசோதிநாள்கெப்புக்கட்டி
மாறுதசித்திரையில்வாங்கும்போது
தேனென்றஅறியாதேவிபிற்மபேதி
தேவாதிபேதியென்றுகொண்டுவாவே ௨௩௬

(செம்பனை)

கொண்டுவந்துமனையில்வைக்கத்தேவபேதம்
கூறுனதலையில்வைக்கதலங்கள்பேதித்து
நண்டுவந்துசெம்பனைவாங்கும்போது
நல்திருவாதிரைநாளில்காப்புக்கட்டி
கொண்டுவந்தமந்திரந்தான்கிகியுமுறியும்
கூறியசமூலமுதல்வாங்வேந்து

அ

உண்டேவந்தால்பக்கமொன்றில்காயபேதம்
உத்தமனேவேதங்கள்பேதனமுமாமே ௨௩௫

(வட்டத்துத்திவிசாகநாளில்சங்கம்வேர்)

பேதமாம்விசாகநாள்வட்டத்துத்தி
பிடுங்கவேகாப்பிட்டுச்சோதிநாளில்
பேதனமந்திரம்மல்லல்லாவென்று
பேசியேபிடுங்கிக்காடியிலேயாட்டி
பேதனமாங்காலிலேதடவிக்கொண்டு
பெருந்தீயில்மிதித்திடவுங்கால்வேகாது
பேதானமாஞ்சங்கம்வேர்பிடுங்குதற்கு
பேரானசாவலங்கேபெலியிடாயே ௨௩௮

பெலியிட்டுத்தீபமிட்டுத்தீபங்காட்டிப்
பேரானபாயாசம்நைவேத்தியஞ்செய்து
மலியிட்டசிந்திரங்கள்பூதபேதி
மகாபேதியென்றுசொல்லிவாங்கிவந்து
கலியிட்டபூதங்கள்பசாசுபேயவல்
கட்டினால்பேதனமாங்காணுந்தோடும்
பெலியிட்டுமாவிலிங்குதனித்துநின்றால்
பூசித்துவெள்ளெருக்கணுவாங்கே ௨௩௯

(மாவிலிங்கம்வேர்)

வாங்கியேசிதேவிசெங்கழுநீர்பூவால்
மாவிலிங்குபூசித்துக்காப்புக்கட்டி
பாங்கியேவஸ்துவொடுசுத்திசெய்து
படைத்துஅர்ச்சிக்கமந்திரைத்தைக்கேளு
தாங்கியேதடகாரணீசம்பட்டுச்
சகத்திரபட்டுசூலிநந்துதல்லிபட்டு
ஓங்கியேபிடுங்கியந்தமூலம்வாங்கி
வுத்தமனேசிரசிலேவைக்கச்சொல்லே ௨௪௰

(நீர்நெருப்பு)

சிரசில்லவக்கவையன்முதல்துற்கைகாளி
சேரவிழுந்தோடிப்பொங்கிக்குகெட்டு
நிரசையுற்றநீர்மேலேநெருப்புவாங்க
நேரானக்கன்னிநூல்காப்புக்கட்டி
புரசைபுற்றதினைமாவுந்தேனுகல்கிப்
பலியேதுசெஞ்சேவல்மந்திரங்கள்
சரசையொற்றசக்கினிரூபியக்னியுச்சரி
சற்வசிரகபாணிசற்வேஸ்பரிநமாவென்னேக ௨௪௧

நமாவென்றுவாங்கிநன்றாய்க்குளிசமாட்டி
நாட்டினால்நோயெல்லாம்பேதனமுமாகும்
நமாவென்றுசிந்திக்கச்சுக்கிரவாரம்
நாளிலேகாப்பிட்டுமெந்திரமோது
நமாவென்றுகட்டச்சத்துருவுமாளும்
நன்றாகவறுமையெல்லாநாசமாகும்
நமாவென்றுமந்திரந்தான்ரர்ராரார
நாவிரண்டாம்வாரத்திற்குளிசமாடே ௨௪௨

(பாதிரிவடவேர்)

குளிசமிட்டுச்சுத்திதனைச்சிரசில்வைத்து
கூட்டினால்சத்துருக்கள்பேதமுமாகும்
குளிசமிட்டுப்பாதிரியின்வடவேர்வாங்கக்
கோழிமுட்டைபலிகொடுத்துபசாரஞ்செய்து
குளிசமிட்டுக்கன்னிநூல்காப்புக்கட்டி
கொண்டுவந்துதாபேதமாகவென்று
குளிசமிட்டுமெந்திரத்தைச்சொல்லவேதான்
குறுக்கவலமாகவந்துபோற்றுபோற்றே ௨௪௩

போற்றும்பரமானந்தபூசபேதனி
பூப்பார்வதிபஞ்சமிசுவாகாவென்று
ஏற்றியொருவெட்டாகவேந்திகொண்டு
வெட்டியின்நல்வேளைதண்ணிற்கொள்ள
மாறறியொருபேதனத்தின்மூலியெட்டும்
மாட்டினேன்மாரணத்தின்மூலிகேளு
காற்றுவருமருக்களுள்கிழங்குவாங்கக்
கார்த்திகையின்நாளொன்றுமலிதான்செய்யே ௨௪௪

(மாரணம்கார்த்திகைக்கிழங்கு)

செய்வதென்னகிழங்குதன்னைப்பிடுங்கிவந்து
செய்வதென்னகடுவிஷங்கள்கண்ணில்தீட்ட
நைவதென்னவிஷங்கள்மாரணமுமாகும்
நல்லவிஷந்திரவேசலத்திலூட்டு
வைவதென்னசெகத்திலேகோடாகோடி
வயமாகப்பேய்பிடித்தபேர்கட்கெல்லாம்
கொய்வதென்னகிழங்காலேவுருத்தான்செய்து
கொண்டுபோய்பேயினிடகோட்டம்வையே ௨௪௫

(கிருவிஷம்)

கோட்டகத்தில்வைத்திடவேபேய்கள்மாறும்
கூறியசந்திரங்கேளரகராவென்று

நாட்டத்திலாயிரந்தானுருவுபோடு
நயமாககிருவிஷத்தைவாங்கிவந்து
ஆட்டத்தில்வெட்டுண்டான்காலந்தன்னில்
அப்பனேகிருவிஷத்தால்சிரத்தைக்கீறி
பாட்டத்தில்நாமிருகமாறணிசுவாகா
பரிவுடனேமண்டையினிலெழுதிடாயே ௨௪௬

எழுதியதைக்கீழ்வைத்துத்தோளைப்போட்டு
யிதமாகமேலிருந்துதியானிகைக்கேளு
தழுகியதோர்கோர்சமயங்காரராயா
சாத்தியேழுமத்திலே ‧‧திவோமித்தோம்பி
தொழிகிருக்கில்சிவன்வந்துஎதுத்தாரென்று
தூள‧கும்மாரணந்தான்சொல்லொணாது
அழுந்திருந்துவாடாதேதாஞ்சுரையைக்கொள்ளு
அடங்காதநோய்கள்மாரணமுமாமே ௨௪௭

(சித்திரமூலம்)

மாரணமாமொடுவடக்குபிரதமையினன்று
மைந்தனேநெத்திச்சுக்காப்புக்கட்டி
காரணமாமறுநாளில்தியாச்சியவேளை
கவர்ந்துவந்துகையிலேகொஞ்சம்வாங்கி
வீரணமாம்மருந்தினிடபேர்கள்சொல்லி
விட்டெறியில்மிருகங்கள்மாரணமுமாகும்
மாரணமாங்கொடிவேலிசித்திரையினன்று
அப்பனேகாப்பிட்டுச்சோதியிலில்வாங்கே ௨௪௮

(கச்சுப்புல்)

சோதியென்றுபலியிட்டுப்பூசைசெய்து
சொல்லிடுவாய்மந்திரந்தானுற்குத்தியாக
ஆதியென்றஅக்கினிரூபியகோரி
யதிகசுவாலினிதேவியம்மாவென்று
ஓதியேவாங்கிவந்துபாலிற்கொள்ள
வுத்தமனேநோய்திரும்பட்சமொன்றில்
வாதியன்றகச்சுப்புல்அருக்கநாளில்
மைந்தனேகாப்பிட்டுப்பூசைசெய்யே ௨௪௯

(மருதோணிசமூலம்)

பூசைசெய்துமந்திரந்தான்கிரிகரிவிசகரிமென்று
போற்றிநன்றாய்மூலத்தைக்குளிசமாடி
ஆசைசெய்துவிஷந்தீண்டில்கடிவாயிற்பூச
அப்பனேவிஷமற்றுமாரணமுமாகும்

ஆசைசெய்துமருதோணிசமூலம்வாங்க
மைந்தனேகிராணத்தில்காப்புக்கட்டி
பூசைசெய்துமோகனத்தில்வெட்டிவந்து
நிழலிலேவுலர்த்தியேநொருக்கிடாயே ௨௫௰

நொருக்கியேயேரண்டத்தயிலத்திட்டு
நுட்பமாய்ப் பூத்தயிலமாகவாங்கி
சுருக்கியேமந்திரங்கள்புரகரிமூகரரி
சுவாகவும்பட்டென்றுசொல்லியேயும்
புருக்கியேசகஸ்திரத்தெட்டுருவுமோதி
புன்றுபிரதெட்சணம்பொருந்தச்செய்து
மருக்கியேபன்றியோடாடுகோழி
வாகாகாபலிகொடுத்துச்சுத்திபண்ணே ௨௫௧

சுத்திபண்ணித்திலதத்தைவைத்துக்கொண்டு
தொட்டெடுத்துப்பொட்டிட்டுயிருந்துகொண்டு
வெத்தியுள்ளதேவதைகள்பிடித்தபேரே
விருசப்பார்த்திருக்கப்போறேனென்றும்
கத்தியுள்ளபிசாசொழியுஞ்சத்துருவைப்பார்த்தால்
கண்கெட்டுக்கெடிவிழுந்துகற்றியோடும்
பத்தியுள்ளமாரணமாமெட்டுமூலி
பாடினேனெட்டெட்டும்பாடினேனே ௨௫௨

(இதுவெல்லாஞ்சத்திமூலிமார்க்கம்)

பாடினேன்மந்திரமுந்தந்திரமுங்கூடப்
பரியாசமில்லாமல்திறக்கமைந்தா
ஊடினேன்திதிவாரநாளுஞ்சொன்னேன்
வுத்தமனேவேளையுமுறவுஞ்சொன்னேன்
நாடினேனிதுவெல்லாஞ்சத்திமார்க்கம்
நலமானசிவமார்க்கமினிமேல்கேளு
தேடினேன்அண்டபகிரண்டத்தப்பால்
சிலம்பொலியும்சிதம்பரத்துக்கெதிராங்காணே ௨௫௩

இனிசிவத்தின்மந்திரவலிமையின்மார்க்கம்-௫
எழுத்தின்பெருமை-௫-முகத்திலும்-௱௨௫-மந்திரவலிமை
எதிரில்லாலஞ்சுமுகமஞ்செழுத்துமாகி
யேகவொருநூற்றிருபத்தைந்தேயாகி
எதிரில்லாக்கலைக்கியானம்விஞ்ஞையாகி
யிதமாகிதம்ரெண்டுக்குமுன்னேயாகி
எதிரில்லாதொடுக்கமெழுவகையுமாகி
யெண்ணரியபூதமைந்துபொறிபுலனுமாகி

எதிரில்லாவஞ்செழுத்தின் மகிமைதன்னை
யேற்றுதற்கொவ்வொன்றுங்கொன்யிருபத்தஞ்சே ௨௫௪

அஞ்சுமுகமொவ்வொன்றுக்கிருபத்தஞ்சு
அறுபத்துநாலுமுகமாகயிற்கும்
பஞ்சமுகக்கலந்துநின்றபூரணத்திற்சேர்க்கும்
பரனும்அவர்ரோமும்ஆறுதலல்பாய்ந்து
மிஞ்சாதுசோறுதுகுலைறந்திடாது
மெத்தசுத்தநிற்குணத்தைச்சொல்லக்கேளு
பிஞ்சாகுங்காயாகும்பழமுமாகும்
பேசரியபலகோடியண்டமாமே ௨௫௫

(சிவபஞ்சாட்சாம்

ஆமப்பாபரமஞ்சுபஞ்சாட்சரங்களஞ்சு
அன்பத்தோரட்சரமாய்ப்பிரிந்துநிற்கும்
ஓமப்பாவொவ்வொன்லைறப்பேசவேண்டில்
உரைக்கரிதுவுடர்க்கரிதுவுரைத்தார்மேலோர்
சேமப்பாகருவுடனே தருவுஞ்சொன்னேன்
சேர்ந்தாலேவேரோடுநூறுமட்டும்
நாமப்பாவமிந்தமடடுஞ்சொல்வோங்கேளு
நாதாக்கள்நாடினகைப்பார்த்திட்டாரோ ௨௫௬

பார்த்திட்டதற்புருஷம்யிருபத்தஞ்சுப்
பாடுகிறேன்யாவசிமகோரமாகும
சேர்த்திடவேசேவிக்கவுறபனமுமாகும்
சிவசிவாசவுமியத்தைசெபிக்கக்கேளு
கார்த்திட்டஅங்சிவாயநமாவென்னில்
காதலிக்கப்புத்திரரைத்தருகும்பாரு
யேர்த்திடவுமறியும்ஓம்நமசிவாயமென்னில்
யென்மகனேதேகத்தில்நோயில்லைகாணே ௨௫௭

காணப்பாஅம்கிலிசிவாநமாவென்றால்
கடியோகசித்தியுடன்காணலாகும்
பூணப்பாலங்சிவாயநமாவென்றால்
பேரேதுயெர்நாளுமாயுசுண்டாம்
மோனப்பாயிம்மேசிவாயநமாவென்றால்
வொழியாதபூதங்களோடும்பாரு
தோணப்பாஓம்கிலியும்நமச்சிவாயமென்றால்
தொல்லுலகில்ராசாக்கள்வசியமாமே ௨௫௮

(ஆயிபஞ்சாட்சரம்)

ஆமப்பா ஆயிபஞ்சாட்சரத்தைக்கேளு
அப்பனேமீரியும்ஓம்நமசிவாயமென்று

நாமப்பாபேதத்தைக்கேழ்க்கவேதான்
நலமாகஅபதத்தைநலகுவார்கள்
தாமப்பாஅய்யும்நமசிவாயமென்ன
சாதகமீயபுத்திவித்தைரெண்டுமுண்டாம்
போமப்பாவமுதபஞ்சாட்சரத்தைக்கேளு
புகழாகச்சிவநமசிவாயமென்னே ௨௫௯

## தற்புருஷமுகத்தில்உருமந்திரத்தில்வரும்

### நல்வினைதிவினை

நமசிவாயமென்னிலமிர்தமாகும்
நாடினவர்வினைத்தலண்ணஞ்சித்தியாகும்
நமசிவாயஉளம்நமசிவாயமென்றால்
நழுகாமல்குளிர்தோஷம்நாசமாகும்
நமசிவாயம்ஞூலிங்நமசிவாயமென்ன
நாட்டில்விளைபூமிநலங்கொடுக்கும்பாரு
நமசிவாயமவ்வும்நமசிவாயமியென்ன
நாகவிடமென்னதெல்லாந்தீரும்பாரே ௨௬௰

பாரப்பாஓம்குசம்பிரேம்சிவாயநமவென்றால்
பரிவுபெற்றுதாந்தானுண்டாம்பாரு
ஆரப்பாகண்சிமீறிவாயநமாவென்றால்
அப்பனேபந்தனமாங்கள்ளர்வாறூர்
நேரப்பாஓமஆம்றும்சிவாயநமாவென்று
ஞுறைவுணர்வுக்கெட்டதமோட்சமெய்தும்
போமப்பாஅரிகரநமசிவாயஓமென்றால்
பேசாதேதேகசித்திகாணலாகும் (௨௬௧)

காணப்பாஅவ்வும்நமசிவாயமென்றால்
கயிலைவாழ்தேகசித்திகாணலாகும்
பூணப்பாஓபநமசிவாயமென்றால்
புகழ்மித்துருகாசினியைவெல்லலாகும்
தோணப்பாலங்கிரியும்சிவாயநமாவென்றால்
தொல்லுலகிலதானியங்கள்மெத்தவுண்டாம்
நாணப்பாஓம்சிரியும்ஓம்நமசிவாயநமாவென்றால்
நலமாகவாமனுவும்பலிக்குந்தானே (௨௬௨)

தானெறஓம்ஊப்சிவாயநமாவென்ல்
சாத்திகமாங்குஷடம்பதினெட்டும்போகும்
தானென்றகிலியுமசிவாயநமாவென்றால்
சாதகமாய்லட்சுமிகளெல்லாம்வசியமாகும்

தானென்றுலிங்கநமசிவாயமென்னத்
தாண்டிநின்றசிற்றேகமீளும்பாரு
தானென்றஓம்மங்கிஷசிவாயநமாவென்றால்
தணல்வளர்த்தும்பிலவேசமாடலாமே ௨௬௩

௨௫-அகோரமுகத்தில்வரும்நல்வினைதீவினை
ஆமப்பாதற்புருஷமிருபத்தஞ்சும்
அறிந்திட்டேனகோரத்தையமைக்கக்கேளு
வேமப்பாஅகோரமென்றால்அண்டபகிரண்டம
வெந்துவிடும்நல்லோர்க்குவிள்ளுவிள்ளு
வாமப்பாதுந்துமமவயநசியென்றால்
மைந்தனேவிதவெட்சணையுமாகும்
போமப்பாஓங்கமவயநசியென்னில்
பூதலத்திலஷ்டசித்தியுண்டாங்காணே ௨௬௪

உண்டாகும்ஓம்மங்சங்சிவநமவென்றால்
வுத்தமனேயண்ணசித்தியூணிப்பாரு
பண்டாகுங்கிலிங்கலங்சிவாயநமாவென்றால்
மறிவானசில்லுத்தம்பம்பாரிக்காணும்
தண்டாகும்பாப்பிற்மஓங்யங்சிவாயநமாவென்றால்
தாணியிலேரவிகண்டத்தன்னைக்காணும்
உண்டாகுஞ்சற்வசற்வநமசிவாயாவென்றால்
வருணசிலம்செல்வமிகவளருந்தானே ௨௬௫

வளருமடாஓம்மங்சிவாயநமாவென்றால்
வாருநதிகளேழுங்கேவற்றிப்போகும்
தளருமடாசெங்செங்செங்சிவாயவென்னில்
தாரணியிலெல்லோரும்வசியமாகும்
களருமடாஓங்மங்செங்சிவாயநமாவென்னில்
சருவாகவிஷங்களைத்தான்தட்பித்துக்கொள்ளும்
பளருமடாபிற்மரிஷிபஞ்சாட்சரமென்று
பகருவார்வபரியோர்ஓங் அங்ளவாயமோதே ௨௬௬

ஓதவேகடல்களைத்,தான்கடக்கலாகும்
வுத்தமர்க்குவாணிலுள்ளதெல்லாங்காணும்
ஓதவேஅங்கிஷஓசிவாயநமாவென்னி
லுற்றபிறவேசங்கிருமம்பஞ்சாட்சரமுமாகும்
தீதறவேஓங்சங்சிவாயநமாவென்னில்
தேவகன்னிவசியமாத்துசேருவார்கள்
நாதவேலமயங்கிஷசிவாயநமாவென்றால்
நாடிநின்றமுக்குணத்தைவெல்லலாமே

வெல்லாமடங்கிவச்சணுயசிவாயநமாவென்னில்
மேலானபாதாளங்கெவனஞ்செய்யு
அல்லாலாங்ஓங் அய்யும்சிவாயநமாவென்னில்
ஆறுசாஸ்திரம்நால்வேதமறியலாகும்
சொல்லாமலிங்கலிங்கஓம்சிவாயநமாவென்னில்
துருபமாய்ப்பொன் னுலகங்காணலாகும்
சொல்லலாங்சங்சங்சிவாயநமாவென்னில்
சிந்தினசிலத்தம்பம்யெழுப்பலாகும் உசுஅ

எழுப்பலாம்நினைத்ததெல்லாமுருவாய்நின்ற
யேவல்செய்யுமென்றமட்டுமெதிர்த்தானென்றால்
எழுப்பலாம்ஓம்சிவாயநமாவென்னில்
யெட்டெட்டுமாரணமாமெந்திரியாளும்
எழுப்பலாங்கிரியுங்கிரியுங்சிவசிவஓமென்னில்
மேதினியில்கேட்டதெல்லாமீயும்பாரு
எழுப்பலாம்பிறங்பிறங்குசபாசிங்சிவாயநமாவென்று
மியற்றமாங்கத்தனையும்மின்னங்கேளே உசுகூ

கேளப்பாமரங்களெல்லாம்வளையுங்கைக்குள்
கெடியாகக்காய்பறிக்கலாகுமாகும்
நாளப்பாமங்மங்நங்சிவாயநமாவென்னில்
நாளிலேபொசிப்பதனைவெறுக்கலாகும்
வாளப்பாவங்லங்வங்கலங்சிவாயநமாவென்னில்
மழையிலேநனையாமல்நடக்கலாகும்
ஆளப்பாதேவனையறியவென்றால்
அகாரஓங்ஙஙஙசிரியுஞ்சிவாயஞ்சொல்லே உஎ0

சொல்லவேயிறிங்சிரிங்சிவாயநமாவென்னில்
சூட்டிறைலாறுண்டாம்பிரவாகமோடும்
சொல்லவேசியம்சிவவாஉங்உங்சிவாயநமாவென்று
செப்பினல்கடலினுருவோடலாகும்
புல்லவேகிறுத்தினலங்கேகிற்கும்
புகழாகச்சலத்திலேநடக்கக்கேளு
வெல்லவேசங்சங்யவசிநமாவென்னில்
வெற்றியுரிசமுத்திரபஞ்சாட்சரசமுமாமே உஎக

வாமதேவமுகத்தில்நல்வினை தீவினை
ஆச்சப்பாபிலையும்பிலையும்சிவாயநமாவென்றால்
அடங்காதயிசக்கிவந்து அடிகீழ்வீழ்வார்
நீச்சப்பாவகோரமதுயிருபத்தஞ்சும்
நிகழ்த்தினேன்வாமத்தைதவினைவாய்க்கேளு

போச்சப்பாறூங்றவ்வுமசிவாயவென்று
பேச்சிட்டோவாமத்தைப்பொசிக்கலாகும்
மூச்சப்பாஓங்கங்கங் அய்யுஞ்சிவாயநமாவென்று
முனைந்ததொருதேவர்களைக்காணலாமே ௨௭௨

காணவே அய்யுஞ்சிவாயநமாவென்னில்
காணுதவிமானம்வந்துகைமுன்னிற்கும்
ஆணவேஉங்தெங்கெங்ஒங்சிவாயநமவென்னில்
அப்பனேகருக்களந்துமுதவியாகும்
தோணவேகங்ஙங்உளங்கங்நசிஒங்கென்றால்
தோயாதகாமதேனுந்துய்கதலாகும்
ஊணவேசெங்செங்சிவாயசங்நமாவென்றால்
உயர்ந்துநின்றதேவர்சபைக்காணலாமே ௨௭௩

சபைகாணுங்ங்ஙசிங்ஓநமாவென்றால்
தயவாயுன்முன்சத்திதானேநிற்பாள்
சபைகாணுமிடர்தீர்த்துக்காத்துக்கொள்வாள்
அப்பனேவாமமென்றாலாச்சரியுங்காணும்
சபைகாணுமாவிகொடிகிரியும்சிவாயசிவாயென்னில்
சாதிபுரிவிஷ்ணுவின்மாயைதோற்றும்
சபைகாணும்சங்கிரியும்தங்கிவாநமாவென்னிற்
சம்பிரபையாதித்தன்ரதமுங்காணும்பாரே ௨௭௪

ரதவகாணும்உங்கவ்வுஞ்சிவாயஒங்ஒங்எனில்
நாட்டமாயார்மாவிஞெடுக்கங்காணும்
ரதங்காணும்டெங்டெங்ஒங்சிவாயசுவாகாவென்று
நாட்டினால்பூமிக்குளடக்கங்காணும்
ரதங்காணும்ங்ங்சிங்சிவாயநமவென்று
நாட்டினால்இருண்டகடல்வெளியாய்க்காணும்
ரதங்காணுமசிரியும்சிரியும்ஊங்சிவாயநமாவென்று
நாட்டிடவேசோதனையைநாட்டுறேனே ௨௭௫

நாட்டுறேன்தேகத்தில்நடனஞ்செய்யும்
நாயகனைக்கருவிக்குள்கண்ணாலேகாணும்
நாட்டுகிறேன்கெங்கெங் அவ்வுஞ்சிவாயநமாவென்றால்
கெவனமெழுமாகாசகெவனமாகும்
பூட்டுறேன்சிரியும்கோஷயகோஷயசங்சதாசிவாநமாவென்று
புரிந்திடவேவேதமதுகாணலாகும
மூட்டுறேன்லங்அங்கிஷஊங்சிவாயநமாவென்று
ஓதிடவேவினைத்திடத்திற்சொல்லலாமே ௨௭௬

சொல்லலாம்ஓங்நங்நமசிவாயாநமாவென்னில்
　செப்பரியசித்தாந்தந்தெளிந்துதோன்றும்
சொல்லலாங்கிலியும்சிங்சிங்வாயநமாவென்னில்
　சேருதவடுக்குகள்ஒடுக்சங்காணும்
வல்லலாங்கங்ஊங்சிஷசிவாகாமம்
　சிவாணந்தசிவசிவாயநமாவென்றால்
வெல்லலாமாவந்தன்னைக்கடித்தால்
　விஷமில்லைவிஷமில்லையிறங்குந்தானே உஎஎ

தானென்றசவ்வும்ஓங்சிவாயசுந்தராயி
　சாற்றவேசிறுபெண்கள்பெரியோராவார்
தானென்றசிவஓம்ரெயஞ்சிவாயஓம்நமா
　வென்றுரைக்கச்சமத்தரெல்லாமுமையாவர்
தானென்றகிலியும்மங்பங்சிவாயவென்று
　தாக்கினாலிந்திரனையழைக்கலாகும்
தானென்றவுத்தமர்க்கிவ்வளவும்பலிக்கும்
　சண்டாளத்துரோகியென்றால்பொய்ப்பாபபோகும்உஎஅ

சத்தியோசாதமுகத்தில்நடக்கும் நல்வினைதீவினைகள்

ஆமப்பாபிரேதத்தையெழுப்பவென்றால்
　அப்பனேயட்சரதைதநன்றாய்கேளு
போமப்பாபிறங்பிறங்கிவாயஓங்பிரசுவாகாவென்னில்
　போன்றதுயெழுவகையின்பிரவியெல்லாம்
வேமப்பாவாமமுமிருபத்தஞ்சும்
　விளம்பினேன்சத்தியோசாதங்கேளு
நாமப்பாவுள்ளபடிவெளியாய்ச்சொன்னோம்
　நாதாக்கள்சொல்லாமலேத்தினாரே உஎகூ

ஏத்தாமல்சிவாயபேதனமேயென்று
　யியம்பினால்சத்துருக்களெடுபட்டோடும்
பாய்ந்தாகஉங்உங்சிவாயநமாவென்று
　பாடினால்காயசித்திகாணலாகும்
சித்தாகத்தற்புருஷம்தினச்சரமுமாகும்
　சிறக்கவேயிருட்டினனஓம்சிவாநமாவென்னில்
பெத்தாக்காற்றண்ணன்முன்வலையொடுத்ததுபோல்
　பிலமுடத்தாய்வாழ்வதற்குப்பேதம்போமே உஅய

பேதம்போம்யெங்இங்ஓங்சிவாயநமாவென்று
　பேசினால்சிறுவாணங்கண்ணேய்தீரும்
கேதம்போம்யங்வங்யவசிமாவென்னிற்
　கெடியானவனைக்களைத்தான்திருஷ்டிக்கலாகும்

பூதம்போம்நலல்சிவாயநமாவென்றால்
பேர்பெரியவரனுடனேபோருவெல்லும்
சீதம்போம்அங்இங்சிவாயவோமென்னில்
தேவேந்திரன்தவம்வந்துமுன்னிற்கும்பாரே ௨௮௧

பாரப்பாஓங்ஓங்சிவாயவோங்கென்றால்
பார்புகழும்வன்னியிடநாக்குத்தோற்று
நேரப்பாமந்திராக்கினியென்றுசொல்வார்
நெறியாகமுன்னோர்கள சம்பிரமங்காண
சீரப்பாசியும்சிவாயஓம்கிலியும்
திடமாகவோதிடவேவெல்லிடமுமாகும்
ஆரப்பாயிதின்பேர்தான்கலைக்கியானமாது
அப்பனேயட்சரத்தையறையுறேனே ௨௮௨

அறையுறேன்றங்ஙங்அஙசிவாயநமாவென்றால்
அதிரிவருமாற்றுனுமஞ்சியோடும்
முறையிறேன்ஓங்சிங்சங்சிவ்சிவாயநமாவென்றால்
உத்தமனேமெலிவாகஉரைக்கக்கேளு
பறையுறேன்மேகமண்டலத்திலேறி
பார்க்கலாமிருக்கலாம்பதங்கள்பெற்று
இறையுறேனென்றுநிறைவாயுசுதோற்ற
மியல்பாகக்காணலாந்தியானங்கேளே. ௨௮௩

தியானங்கேள்ஓங்இங்சங்சிவதிவாவென்றால்
தென்றலென்றமாருதந்தான்றெளிந்துதோற்றம்
தியானங்கேள்இங்குருங்கிலியுங்சிவாயஓமென்றால்
தேவேந்திரன்வந்துநின்றேவல்கேழ்ப்பான்
தியானங்கேள்ஓங்நங்நங்சிவாயநமாவென்றால்
செற்றபேருயிர்ப்போறதிறமுங்காணும்
தியானங்கேள்ஷறியும்உங்சிவாயநமாவென்று
தியானித்தோர்பலன்பெறுதல்தலமுங்காணும். ௨௮௪

பலன்காணும்அங்ஊங்சிவாயமென்றால்
பரிமளபஞ்சாட்சரமாம்பரிந்துகேளு
வலங்காணப்பரிமளங்கள்தோற்றம்வீசும்
மாறுமறப்பார்க்கலாங்காணக்கேளு
கலங்காணஇஷங்இஷங்சிவாயஓங்மென்றால்
காணலாம்மங்களத்தின்தோற்றமெல்லாம்
பீலன்காணச்செயிதெனத்தைப்பேசக்கேளு
பெயர்யங்கிலியுங்சிவஓம்நமாவென்றானே. ௨௮௫

ஊணவெய்யோர்திக்கென்றதோற்றங்காணும்
    ஒளிநயனத்தோற்றத்திலுண்மைகேளு
பூணவேநங்மங்அங்சிங்வங்எங்சிவாயநமாவென்னில்
    புகழோசைசிற்கிறதைப்புகழ்ந்துசொல்வேன்
நாணவேசிபிங்உங்ஊங்சிவசிவாசியோவென்று
    நாட்டடாஅறுசுவையைக்காணலாகும்
தோணவேஓங்சிங்சிவாயசிங்சிங்கோமென்று
    சூட்டுவாய்வெளிவிட்டுச்சொல்லோணாதே ௨௮௬

ஈசான்யமுகத்தில்நடக்கும்நல்வினைதீவினை

ஒன்றாதுதிரியுருசாவிறிபுணர்ந்த
    யின்பமுக்காறியஅட்சரத்தையியம்பக்கேளு
கின்றாதுகிலாங்கிலியுங்கிலிவுங்கிலிவும்
    கிலராசிவாயநமாவென்றேயோது
அன்றாயிருபத்தஞ்சும்மாறப்பா
    அறைந்திட்டேன்சத்தியோசாதந்தன்னை
என்றாயீசானமிருபத்தஞ்சும்
    மியம்பினேன்பகுத்தவருக்குண்மைதானே ௨௮௭

உண்மைதனைச்சொல்லிவிட்டேனாறுசக்கிரனும்
    வுத்தமனேசிதம்பரசோரூபமாகும்
வண்மையுறுஇறியங்நவுஓநமசிவாயமென்று
    வழூந்ததினால்ஆளழப்பாவருவார்மெத்த
கண்மையுறுசங்சியும்சிவமயநமாவென்று
    கட்டுரைக்கிலாறபணதெரிசனந்தருண்டாம்
தண்மையுறுஆங்சிவசிவாயஅவ்வுமோநாளில்
    சாதகமாயச்சக்கிராதிநல்குங்காணே ௨௮௮

காணலாந்தத்துவத்தின்தோற்றமெல்லாம்
    கட்டாகசியுங்உங்சிவாயஊங்யம்நம்மென்றோதவேண்டும்
பூணலாந்திரையும்நமசிவாயநமாஓங்சிவோமென்று
    புரிந்தாக்காலுடன்மூலாதாரங்காணும்
தோணலாங்யங்சிங்சிவாயநமாவென்று
    சொன்னாக்கால்சுவாதிஷ்டானந்தோன்றும்
ஊணலாங்சிங்ஐயுஞ்சுவாவென்றால்
    உத்தமனேபூரகத்திலுறவுகாணே ௨௮௯

உறவாமல்லங்வங்சிவாயமென்று
    வோதினாலனாகதத்தின்உண்மைகாணும்
இறவாமல்வங்சிங்சிவாநமாவென்றில்
    மகத்தானஅனாகதத்தைமகிழ்ந்துகாட்டும்

மறவாமல்ஊங்ஒங்சிவாயநமாவென்றால்
மயலானவிசுத்திதனையிருப்பில்காணும்
பிறவாமல்சிங்சிங்சிவாயமென்றால்
பேரின்பவாக்கினைதான்காணலாமோ ௨௮௰

ஆமப்பாமங்வங்சிங்ஒம்மென்றால்
அப்பனேயண்டவடுக்கறியலாகும்
வேமப்பாஅய்யுங்கிலியும்சவ்வுமென்றால்
மேலானமுனிவரிடதோற்றங்காணும்
காணப்பாகிலியுஞ்சிரியும்சிவாயமென்றால்
கற்பித்தபிற்மாவின்திருஷ்டிகாணும்
ஓமப்பாமங்நங்சிவசெயஒங்மென்றால்
உத்தமனேகுருசாதஞ்சித்திதானே ௨௮௧

சித்தியுடன்வங்வங்சிங்ஒங்சிவாயவென்றால்
சினத்ததொருகாடுசுடுந்தீயாய்வேகும்
புத்தியுடன்நங்மங்சிங்வங்யங்என்றால்
பிறட்டவிரையுடன்முளைத்துக்கானேகாய்க்கும்
சத்தியுடன்சிங்சிங்சிவாயமென்னில்
சாதகமாய்த்திரிகாலஞ்ஞானமுண்டாம்
பத்தியுடன்இங்எங்உங்சிவாயமென்றால்
பலவிதமாய்த்தோணுகிறமாய்கைபோமே ௨௮௨

மாய்கைபோய்சிவாயநமஒம்என்றால்
வரைகளெல்தாந்துளாகப்பொடிக்கல்லாகும்
மாய்கைபோம்நமசிவாயமென்றக்கால்
வாள்ரவியுஞ்சோமனுந்தான்புணர்ச்சிகாணும்
மாய்கைபோமவயசிநமஒவமன்றக்கால்
மறலிவந்துமுன்னின்றுவார்த்தைகேழ்ப்பான்
மாயகைபோமசிவாயநமஒம்என்றக்கால்
மனோன்மணிதான்வாசலிலேகாப்பாள்பாரே ௨௮௩

பார்த்திடவேநயவசிமாசுவாகாமோதி
பாவையற்கேமணிவந்துகுளிகையீவாள்
சேர்த்திடவேவங்சிங்யங்சிவாயமென்றால்
சித்தியென்னுமருபத்தநாலுமெய்தும்
பேர்த்திடவேவங்சிங்யங்சுவாகாவென்றால்
பூலோகத்தரசர்வந்துபோற்றிகிற்பார்
கார்த்திடவேயங்சங்சிங்ஒம்சிவாயநமாவென்றால்
கனகனாரசர்கள்வந்துவணக்குங்காணே ௨௮௪

காணப்பாயீசான்யமிருபத்தஞ்சும்
கலங்காமற்சொல்லிவிட்டேன்னூற்றிருபத்தஞ்சும்
பூணப்பாயிதினாலேசித்திமுத்தி
பூணவாழ்விக்குமடாபூசைவேண்டும்
ஊணப்பாவஞ்செழுத்தின் திஷடியாச்சு
உத்தமனேதிருமூசங்களொன்றுசொல்வார்
வீணப்பாகெடுக்காதேமந்திரமெல்லாம்
வெறும்பொய்யாமதைவிட்டுவிரும்பிடாதே உஉரு

(முப்பூமுறை)

விரும்புவாள்வஹுஸ்தம்பம்வசியமாகும்
வீறுடையமூன்றுக்கும்விஞ்சையாகும்
விரும்புவார்நாதாக்கள்மறைத்ததெல்லாம்
வெட்டவெளியாய்த்திறந்துவீசுறேன்யான்
விரும்புவார்சற்பகத்தையுற்றுப்பார்த்தோர்
மேலானநந்தியைப்போல்வீற்றிருப்பர்கண்டாய்
விரும்பிவளர்வெடியுப்புசெயனீர்கேளு
வெகுமுகமாய்வைப்பாரென்முறையைக்கேளே உஉசு

கேளப்பாவெடியுப்புப்பலமோபத்து
கெடியானபழம்புளியும்பலமோபத்து
நாளப்பாவுப்பதுவும்நாலாங்காய்ச்சல்
கலமானபிளியினிடநரம்புதள்ளி
ஆளப்பாகலவத்தில்மையாயாட்டி
அதின்பிறகுவெடியுப்பைத்தூளாயாட்டி
வாளப்பாவுப்பிலரைப்பலந்தான்வைத்து
மற்றவுப்பைபுளியொடொன்றாயக்கூட்டியாட்டே உஉஎ

ஆட்டுவது அமிர்தத்தால்அமுறிதன்னால்
அரைத்தவனையொருபில்லையாகத்தட்டி
நீட்டுவது அக்கினிக்குள்ளேயிட்டு
நெருப்பிட்டுக்கருக்கிநன்றாயுலையில்வைத்து
மூட்டுவதுப்பூக்கமட்டுமூதிமைந்தா
முதிரவேசரண்டிக்குள்கிண்டிக்கொண்டு
சூட்டுவதுயெதுமபுபோலானபின்பு
தூளாட்டுமேல்வயணஞ்சொல்லுறேனே உஉஅ

சொல்லுகிறேன்மண்சட்டிக்குள்ளேயிட்டு
தூளாக்குளபழச்சாரைசேரவார்த்து
செல்லுகிறேனபில்லைவைத்துபச்சைசவுப்பைக்
கீழுமிட்டுத்திருசடிசைவறுத்தபின்பு
மல்லுகிறேன அதையெடுத்துத்தூளாயாட்டி
மைந்த அபிரகாணில்வாரிவைத்து

சொல்லுகிறேன்சரக்கையெல்லாம்பனியில்வைக்கக்
  கொடுஞ்சுன்னநீறுக்குறைந்திடாதே ௨௯௯

குறையாதசத்திசிவகாரசாரம்
  கொத்தோடேநீராச்சுச்சுன்னஞ்சேரில்
நிறையாகசரக்கெல்லாங்கட்டிப்போகும்
  நேரானபூனீருகூடிற்றானல்
துறையாகமுறைகோடிதொந்தங்கோடி
  சூட்டிவிக்குமாட்டிவைக்குஞ்சொல்லப்போகா
மறையாமல்மறைத்திட்டார்பெரியோரெல்லாம்
  மறைத்ததெல்லாங்காண்பதற்குவழங்கினேனே ௲

வழங்கியதோர்சாத்திரமுஞ்சூத்திரமும்பார்த்து
  மைந்தனேபலதிரட்டுசாத்திரமும்பார்த்து
விளங்கினதோர்கருவெல்லாமென்னூலிற்சொன்னேன்
  வேறொன்றுமொளிப்பில்லைவிரும்பிப்பாரு
அழங்கினதோர்மனத்தோடேபலநூல்தேடி
  யலையாமற்பூசித்தேயமிர்தங்கொண்டு
தழங்கினதோர்மனத்தோடேகற்பல்கொண்டு
  சாதகமாயேறிடுவாய்த்திரட்டுமுற்றே ௲௧

கருவூரார்பலதிரட்டு-௲-முற்றும்

——————*——————

☞ சேர்த்துவைத்தகருவையினிசெப்பக்கேளு
  சிறக்கவேசட்டிநடுப்பேற்றிக்கொண்டு
மார்த்திவைத்தகட்டியப்புரகந்தன்னை
  வைத்திடுவாய்சட்டியிலேவிளம்பக்கேளு
ஊர்த்திவைத்தமெழுகுகொண்டுதேய்த்துமேலே
  வுத்தமனேகளஞ்சிபத்துலிங்கந்தானும்
போர்த்திவைத்தரேக்கதுவுங்களஞ்சியொன்று
  பொதிந்தந்தக்கட்டியைநீபொருத்தவையே

---

☞ இத்தனிப்பாடல் பிரண்டதால் (௱௨௰) வது, பாடலுக்கடியில் சோத்துவாசிக்கவும் சீருந் தொடர்பும் - மகுடமும் ...ப்பிருக்கும்